
தீபம் டி.வி. புகழ்
கே.பி. வித்யாதரன் அவர்கள் எழுதிய
சனிப்பெயர்ச்சி பலன்கள் உள்ளே

August 2007

# தமிழர் தகவல்
இலண்டன்
Tamils' Information




ஈஸ்ட்ஹாம் முருகன் கோயில் தேர்த்திருவிழ
12.08.2007 ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.00 மணிக்கு நடைபெறுகிறது



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# Lakshmis
## JEWELLERS



276 High Street North London E12 6SA UK Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448



# Vaani Cash & Carry

விரைவில்

## பிரமாண்டமாய் ! பிரமாண்டமாய் !

தயாரிப்பாளரிடம் இருந்து
நேரடியாக வாடிக்கையாளருக்கு

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2037
சர்வஜித்து – ஆவணி

மலர் : 05

இதழ் : 50
ஆகஸ்ட் 2007


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## ஓர் வாசகரின் உள்ளக்குமுறல்

ஒரு இசைப்புலவர் பாடிக்கொண்டிருந்தார். அவரை அவையோர் தமிழிலே மட்டும் பாடவேண்டும் என்று வற்புறுத்தியிருந்தனர். அதனால் அன்று தமிழ்க் கீர்த்தனைகள் மேடையில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவையில் இருந்து பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு தமிழறிஞர் பாடகரை இனி வேறு மொழிகளிலே பாடவும் என்று துண்டு எழுதிக் கொடுத்தார். பக்கத்திலிருந்தவர் அதிசயத்துடன் அறிஞரைப் பார்த்தார். அதைக் குறிப்பால் அறிந்த அறிஞர், இவர் "தமிழைக் கொலை செய்வதை என்னாற் பொறுக்க முடியவில்லை. வேற்று மொழியானால் இசையைக் கேட்கலாம். மொழிபற்றிக் கவலை வேண்டாமே" என்றார்.

ஒரு மொழியை ஒழிக்கவேண்டும், ஒரு இனத்தை ஒழிக்கவேண்டும் என்ற கூச்சல்களைக் கேட்கும்போதெல்லாம் இந்தக் கதைதான் எனக்கு நினைவுக்கு வருவதுண்டு. கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக தமிழ்நாட்டில் தமிழ் ஆர்வலர்கள் ஆட்சியில் இருந்து வருகிறார்கள். ஆனால் தொலைக்காட்சிகளில் தமிங்கிலம் துள்ளி விளையாடிக்கொண்டு இருக்கிறது. 'பார்டிசிப்பன்ஸ்' யாரென்று பார்ப்போமா, 'ஜட்ஜை மீட் பண்ணுவோமா' என்பதுதான் தமிழ் தொலைக்காட்சிகளில் தமிழாக உள்ளது. இந்தத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் திராவிடக் கட்சிகளில் உள்ளவர்களா என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. அதைவிட வேடிக்கை, தொலைக்காட்சியிலே இப்படி ஆங்கிலம் வந்தால் மட்டுமே ஏழைகள் ஆங்கிலம் படிக்க வாய்ப்பு வரும் என்று வேறு பத்திரிகை ஒன்று எழுதியிருக்கிறது.

மேற்கு நாடுகளில் வேறுவிதமான வேடிக்கை நடக்கிறது. வானொலி, தொலைக்காட்சிகள் ஈழத் தமிழர்கள் கையிலேதான் உள்ளன. இவர்களின் தமிழ் இன்னும் வேதனையானது. அண்மையில் ஒரு பிரபலமான வானொலிச் செய்தியில் "நடுக்கடலில் மீன்பிடிகள் நடத்தினர்" என்று செய்தி வாசிக்கக் கேட்டேன். தொலைக்காட்சி ஒன்றில் பிரபல அறிவிப்பாளர் ஒருவர் "ஊகித்திருக்கப்படமுடியவில்லை" என்றொரு பதத்தை உபயோகித்தார். இன்னொரு வானொலி விளம்பரத்தில் "கடை திறந்திருக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகிறோம்" என்றார்கள். பெண் அறிவிப்பாளர் ஒருவருக்கு ல,ள,ழ பேதங்களே தெரியாது. ஒரு ஈழத்தமிழர் வீட்டிலே ஒரு தமிழ்ப் பெண்மணி அந்த வீட்டுக்கார தமிழ் அம்மாவிடம் இடியப்பம் செய்யும் அச்சைக் காட்டி 'கௌ டு யூ புட் மா இன் திஸ்' என்று கேட்கிறார்.

திருஞானசம்பந்தர் முதன்முதலில் 'திருநெறிய தமிழ்' என்ற அழகான தமிழ்ச் சொற்றொடரை தமது முதலாவது பதிகத்திலேயே பாடியுள்ளார். பின்னர் பாடிய பதிகமெல்லாம் தம்மைத் தமிழ் ஞானசம்பந்தன் என்ற கருத்து வரவே பாடியுள்ளார். சுந்தரரும் தமது பதிகங்களை அழகு தமிழிலே பாடியுள்ளார். டாக்டர் உ வே சாமிநாதையர் பழைய தமிழ் ஏட்டுச்சுவடிகளை, எடுத்துப் பிழைவரக்கூடாது என்று அக்கறை கொண்டு சரிபார்த்த பின்னரே பிரசுரம் செய்தார். ஈழத்தில் வித்துவான் கணேசையர் தமிழ் படிக்க விரும்பியோருக்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். திரு கிவாஜ அவர்கள் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை அழகு தமிழிலே எழுதினார். தென்னகத் தியாகராஜர் எனும்படி எண்ணிலா தமிழ்க் கீர்த்தனைகளை எழுதிக் குவித்தார் திரு பாபநாசம் சிவன் அவர்கள். இவர்களெல்லாம் யார்? தமிழை அழிக்க முனையும், நாம் ஒழிக்க முனையும் இனமா?

தமிழிலே பற்றுள்ளவர்கள், தமிழை வளர்க்க விரும்புபவர்கள் தாம் முதலில் சரியான தமிழைக் கற்கவேண்டும். பின்னர் மற்றவர்களையும் ஊக்குவிக்கவேண்டும். தமது பிள்ளைகளுடன் தமிழிலே உரையாடவேண்டும். அதை ஒழுங்காகச் செய்தால் தமிழ் தானே வளரும். மொழி ஒழிக, இனம் ஒழிக என்பதால் தமிழ் ஒருபோதும் வளராது. நாமே தமிழை கொலைசெய்துகொண்டு மற்றவர்களை ஏன் குற்றம் சாட்டவேண்டும்? ஒழிப்பதைத் தவிர்ப்போம். தமிழை வளர்ப்போம

அனுராதா


முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval



படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே



4000 பிரதிகள்

# ஈழத்தமிழர் மீதான இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் மாபெரும் பேரணி

## 14.07.2007 அன்று ரவல்கர் சதுக்கத்தில் நடைபெற்றது

## காலத்தின் தேவை - கட்டாயக் கடமை

2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ந் திகதியான இன்று பிரித்தானியத் தலைநகர் இலண்டனிலுள்ள ரவல்கர் சதுக்கத்திலே பல்லாயிரக் கணக்கிலே கூடியுள்ள தமிழர்களாகிய நாம் எம்மோடு இணைந்து இங்கிருக்கும் - தமிழர் அல்லாதவரோடும் ஒன்றிணைந்த நிலையிலே இலங்கைத் தீவிலே - தமிழர் மீதும் - உண்மை பேசுபவர் மீதும் - உதவுபவர் மீதும் இலங்கை அரசு செய்யும் - இன ஒழிப்புச் செயல்களையும் - சித்திரவதைகளையும் - மனித உரிமை மீறல்களையும் - வன்மையாகக் கண்டிக்கின்றோம்.




இங்கு கூடியுள்ள அனைவரும் - ஒரே அணியாக - ஒரே குரலிலே ஈழத் தமிழருக்கான மொழி, நிலம், பண்பாடு என்பவற்றுக்கும் அடிப்படை உரிமையான - உயிர்வாழ்க்கை போன்றவற்றுக்கும் நிரந்தரமான பாதுகாப்பு என்பது தமிழீழம் என்னும் தனிநாட்டை அமைத்தல் மூலமே கிடைக்கும் என்னும் - 1977ஆம் ஆண்டின் மக்கள் தீர்ப்பை - மீண்டும் வலியுறுத்தி அம்முடிவே சரியானது என்பதை - இன்றைய இலங்கைத் தீவிலே இடம்பெறும் - உச்சக்கட்ட இனஅழிப்பும் ஒடுக்கு முறையும் உறுதிப்படுத்துவதை - உள்ளத்திலே கொண்டு தமிழீழத்தை அமைக்கும் பணிக்கு எமது தார்மீக ஆதரவினைத் தொடர்ந்து கொடுப்போம் என்று - உறுதி செய்து கொள்கின்றோம்.

எம்மோடு இணைந்து - இலங்கை அரசினுடைய மனித உரிமை மீறல்களைக் கண்டிக்குமாறும் பயங்கரவாதமென்ற பொதுமைக்குள் நீதியின் பால் நடத்தப்படுகின்ற உரிமைப் போராட்டங்கள் உள்ளடக்கப்படுகின்ற அநீதியை - உலக நாடுகள் புரிந்து கொண்டு ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பான தமிழீழம் என்னும் தனியரசை அங்கீகரிக்குமாறும் உண்மையின் பெயராலே - சத்தியத்தையும் தர்மத்தையும் மதிக்கும் உலக நாடுகளையும் - நாடுகள் பல இணைந்த சபைகளையும் மனித உரிமை பேணும் அமைப்புகளையும் - அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**வாய் பேசாது இருந்தால் வந்த இடத்திலும் சொந்த இடம் போலே மனித உரிமை மீறப்பட்டு நாம் அடக்கப்படுவோம் உலகிலேயே அழிக்கப்படுவோம்**

## ஒரே அணியிலே நின்று ஒரே குரலிலே உலகிற்கு எடுத்துரைப்போம்!

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.**



உங்கள் உறவுகளுக்கு உலகின்
எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்

# ABBY & CO

**125 Mitcham Road, Tooting, SW17 9PE**
**Tel : 0208 672 0266**

**இரண்டாவது கிளை**

**367, London Road, Croydon, CRO 3PB**
**Tel : 0208 6897555**

எங்கள் புதிய முகவரிக்கு
வாருங்கள்
**Smith Brothers**க்கு அருகில்

விடுமுறையை கழிக்க
சென்னைக்கு
போறீங்களா ?



வசதியாக குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை
நடாத்துவதற்கான
ஏற்பாடுகள் வாகன
வசதிகள் அனைத்துக்கும்
தொடர்புகட்கு
**M SRI 07801227110**

..... கருத்துக் கவிதை .....

## நிலா

**வேல் முருகன்**

நிலா முழுவட்டமாக இருக்கிறது.
ஓரிரு இரவுகள் மட்டும்.
உரசிப்போட்ட மஞ்சள் கிழங்காய்த்
தேய்ந்து கிடக்கிறது சில இரவுகளில்.
சில இரவுகளில் அது இருப்பதே
தெரிவதில்லை.
மேகங்கள் மறைத்து விடுகின்றன.

இளைப்பாறும் மானையும்
நூல்சுற்றும் பாட்டியையும்
இன்னும் காணமுடிகிறது.
அவள் முகத்தையும்.

நெல் வயல்களையும்
தண்ணீர்த் தொட்டிகளையும்
இனிக் காண நேரிடலாம்
என்று எண்ணியபடி
தூங்கப் போகிறேன் நிலாவுடன்.

## சம்மதம்

**முல்லை அமுதன்**

சம்மதம்
எதை இழப்பினும்...
இந்த திண்ணையும்
அந்த குருவியும்
தவிர...
எதையும் இழக்க
சம்மதம் உயிர்பிரியினும்...

மலைச்சரிவின் பூக்கள்;
குழந்தையின்
குதூகலம்...;
மனைவியின் முறுவலிப்பு...

நீர்வீழ்ச்சி...
கால்களை நனைத்தபடி
ஓடும் நதி.
பனிசுமந்து நிற்கும்
புல் வெளிகள்...
கனவு வரும்...
நேரம் பிரிதல்
சம்மதம் இல்லை...
இந்த -
டிஸம்பர் போயினும்...!



மாதமிரு திருக்குறள் கற்போம்

## விருந்தோம்பல்

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு** (குறள் : 89)

பொருள் இருக்கும் காலத்தில் வறுமை என்பது, விருந்தினரைப் போற்றுதலைப் புறக்கணிக்கும் அறியாமையாகும். அது அறிவிலியிடம் உள்ளதாகும்.

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து** (குறள் : 90)

அனிச்ச மலர் முகர்ந்த அளவில் வாடும். விருந்தினர், முகம் வேறுபட்டுப் பார்த்த அளவிலேயே வாடிவிடுவர்.

அருள்மிகு
லண்டன் டூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்

# தேர்த் திருவிழாவும் ஆன்மீக ஒன்றுகூடலும்

## 27.08.2007 திங்கள் கிழமை

(வங்கி விடுமுறை அன்று)




வருடத்திற்கு
ஒருமுறை
அம்பாள் தேரில்
எழுந்தருளி
பக்தர்களுக்கு
அருள்பாலிக்கும்
காட்சி

வழமைபோல்
கரகம், காவடி,
நடனங்கள்
சொற்பொழிவு,
கர்நாடக
இசைக்கச்சேரி,
கலை நிகழ்ச்சிகள்
போன்றவை
ஒழுங்கு
செய்யப்பட்டுள்ளன

180-186 Upper Tooting Road,
Tooting, London SW17 7EJ
Tel : 020 8767 9881
Fax : 020 8767 2337

**The Chariot procession will leave the Temple at 9. a.m, pass through Upper Tooting Rd., Tooting High St., Mitchem Rd. and London Rd.**



# நந்தினி முத்துஸ்வாமி

ஒரு பாரம்பரியம் மிக்க கலை குடும்பத்தை சேர்ந்தவர். கர்நாடக சங்கீதத்தில், வாய்பாட்டிலும் வயலினிலும் தேர்ச்சி பெற்று, பல உலக நாடுகளில் பல கச்சேரிகள் செய்து புகழ் பெற்றவர். தமிழ்நாடு அரசால் ''கலைமாமணி'' விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். சமீபத்தில் தனது சகோதரி லலிதாவுடன் கலாச்சார தூதுவராக தென் ஆப்பிரிகா மற்றும் மொரிஷியஸ் நாடுகளுக்கு சென்று பல கர்நாடக இசை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திவிட்டு திரும்பியுள்ளார். அவருடன் சில நிமிடங்கள்

### உங்கள் குடும்பம் ஒரு இசை குடும்பம் அதை பற்றி...

எனது முதல் குரு எனது தாத்தா திரு. வி. லக்ஷ்மிநாராயணா. அவர் ஒரு பிரபல வயலின், வாய்ப்பாட்டு கலைஞர். பல வருடங்களாக, இலங்கையில் "Jaffna College"இல் இசை பேராசரியர் ஆக பணியாற்றி இசை கற்பித்தவர். எனது தாயார் திருமதி சுப்புலக்ஷ்மி முத்துஸ்வாமி ஒரு பிரபல வாய்ப்பாட்டு மற்றும் வயலின் கலைஞர். இலங்கையில் பல இசை நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார். எனது மூன்று தாய் மாமாக்களும் பிரபல வயலின் வித்வான்கள் – திரு. எல். வைத்தியநாதன், திரு. எல். சுப்பிரமணியம், திரு. சங்கர். எனது மூத்த சகோதரி லலிதா முத்துஸ்வாமி அவர்களும் வயலின் கலைஞர். நானும் அவர்களும் இணைந்து பல கர்நாடக சங்கீத மற்றும் "Fusion" இசை கச்சேரிகளை நிகழ்த்தி வருகிறோம். இதை தவிர எனது குரு – சிஷ்ய பரம்பரை, சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், மற்றும் சியாமா சாஸ்திரி அவர்களை சென்று அடைகிறது. இது ஒரு பெருமைக்குரிய விஷயம்



### எந்த வயதில் இசை பயில ஆரம்பித்தீர்கள்? முதல் கச்சேரி எப்போது வழங்கினீர்கள்?

எனது தாத்தா திரு. வி. லக்ஷ்மிநாராயணா, மற்றும் எனது தாய் திருமதி சுப்புலக்ஷ்மி முத்துஸ்வாமி அவர்களிடத்தில், எனது மூன்றாவது வயது முதல் வயலின் மற்றும் வாய்பாட்டு பயில ஆரம்பித்தேன். பிரபல சங்கீதமேதை திரு .செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யர் அவர்களிடமும் வாய்பாட்டு பயின்று இருக்கிறேன். எனது பத்தாவது வயதில் என் முதல் இசை கச்சேரியை வழங்கினேன். இன்று வரை பல ஆயிரக்கணக்கான இசை கச்சேரிகளை வழங்கி இருக்கிறேன். அமெரிக்கா, ஐரோப்பா, UK, Middle East, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, நேபாளம், தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ் போன்ற பல நாடுகளில் வயலின் கச்சேரிகள் நிகழ்த்தியுள்ளேன். சமீபத்தில் கலாச்சார தூதுவராக தென் ஆப்பிரிக்கா மற்றும் மொரிஷியஸ் சென்று, பல இசை நிகழ்ச்சிகளை எனது சகோதரி லலிதாவுடன் வழங்கினேன்.

### நீங்கள் பெற்ற விருதுகளை பற்றி.....

தமிழ்நாடு அரசு ''கலைமாமணி'' விருது அளித்து கௌரவித்து உள்ளது. இங்கு UK அரசால் அளிக்கப்படும் CWIT Award for Performing Arts எனக்கு அளிக்கப்பட்டு, இங்கு லண்டன் பல்கலைகழகத்தில் Ethnomusicology-இல் முதுநிலை பட்டம் பெற்றுள்ளேன். கர்நாடக சங்கீதத்திலும் முதுநிலை (MA) பட்டம் பெற்றுள்ளேன். இதை தவிர சத்குரு சாந்தாநந்த ஸ்வாமிகள் வழங்கிய வயலின் வாத்திய திலகம், யுவ கலா பாரதி, சாய் கான மணி, புவன சங்கீத ப்ரவாஷினி, இன்னிசை ஞான கலா மணி போன்ற பல விருதுகள் பெற்றுள்ளேன்.

### கர்நாடக சங்கீதம் தவிர மற்ற இசை வடிவங்களில் உங்கள் தேர்ச்சி பற்றி.....

கர்நாடக சங்கீதத்தில் வயலின் மற்றும் வாய்பாட்டு, அதை தவிர Trinity College of Music, London-இல் மேற்கத்திய இசையிலும் தேர்ச்சி பெற்று இருக்கிறேன். உலக இசையின் (World Music) பல வடிவங்களையும் கற்று, அவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து "Fusion" இசையையும் எனது சகோதரி லலிதாவுடன் வழங்கி வருகிறேன்.

### நீங்கள் இசை கற்று தருகிறீர்களா?

ஆம், இங்கு லண்டனில் பல மாணவர்களுக்கு இசை கற்றுக்கொடுக்கிறேன். ''சாந்தாலயா ஆர்ட்ஸ் ஃபவுண்டேஷன்'' என்றும் நிறுவனம் மூலமாகவும் பல மாணவர்களுக்கு இசை பயிற்சி அளிக்கிறேன். மற்றும் லண்டன் பல்கலைக்கழகத்திலும் இசை கற்றுக் கொடுக்கிறேன். இதை தவிர வெளி நாடுகளில் வசிக்கும் மாணவர்களுக்கு இண்டர்நெட் மூலமாகவும் இசை பயிற்சி அளிக்கிறேன்.

### உங்கள் எதிர்கால திட்டங்கள் பற்றி.....

கர்நாடக இசையை உலகின் பல்வேறு நாடுகளில் பலவேறு மக்களை சென்று அடைய செய்ய வேண்டும். பல சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும். இதுவே எனது குறிக்கோள்.

# ARM ASSOCIATES

*For all types of insurance*

We have been helping our client to find competitive and quality policies for over 35 years. How have we been able to stay in the insurance business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they need.

- ✓ We deal with all types of insurance under one roof
- ✓ There are no proposal forms to complete
- ✓ Quotations and cover provided over the phone
- ✓ We are able to offer exclusive rates
- ✓ We also offer Independent financial advice on:

Pensions
- Mortgages
- Life cover
- Investments
- Savings
- Inheritance Tax Planning

ARM Associates is the one stop of all your financial needs

**P. SRINIVASAN** (CertPFS)
and
**SUHAN SRINIVASAN** (DipPFS, Economics BSc)

**Tel : 020 8763 2221**
Fax : 020 8763 2220
Address : 32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH
Email : sri@srinivasan.co.uk Web : www.srinivasan.co.uk

# வலியுடன் வேதனையா?



மூட்டுவலி, முழங்கால்
குதிக்கால் வலி கழுத்து, இடுப்பு
மற்றும் தோள்பட்டை வலி,

அனைத்து எலும்பு,
மூட்டு, தசைகளுடன்
தொடர்புடைய பிரச்சனைகள்



அறுவை சிகிச்சை, விபத்துக்கள்
இவற்றை தொடர்ந்து இருக்கும்
பிரச்சனைகள்



விளையாட்டு மற்றும்
ஆர்த்ரைடிஸ் வலிகளுக்கும்
தக்கமுறையில் பிஸியோதெரபி
சிகிச்சை பெற உடனடியாக நாடுங்கள்
அரசு பதிவுபெற்ற

PHYSIOTHERAPIST

**MURALIRAJ RAJAN**
B.P.T, M.P.T(Ortho), M.I.A.P, MCSP

தொடர்புகளுக்கு

**VIDA HEALTH**
415-421, BROMLEY ROAD BROMLEY
KENT BRI 4PJ Ph : 0208 697 4766
Mobile : 07794424147

## மாதம்
## ஒரு ஆன்மிகச்சுற்றுலா

**அறுபடைவீடு திருவண்ணாமலை**
**சிதம்பரம், மதுரை மீனாட்சி**
**கன்னியாகுமரி, திருப்பதி**

குளு குளு வசதியுள்ள தங்குமிடங்கள்

சகல செலவு உட்பட 980 பவுண் மட்டும்

தொடர்புகளுக்கு

**London**


# Euro Travels & Tours Ltd

Chennai

*ARS Tours*

111-B Loampit Vale
Lewisham London SE13
Tel : 0208 465 9666 Fax : 0208 465 9888

உலகின் எந்த பகுதிக்கும்
எங்களிடம் மலிவு விலையில்
விமான டிக்கெட்டுகள் பெற்றுக்கொள்ளலாம்



தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்

## சிவ தரிசனப் பலன்கள்

| | |
|---|---|
| காலசந்தி | – பிணிபோக்கும் |
| நண்பகல் | – தனம் பெருகும் |
| மாலை | – பாவம் அகலும் |
| அர்த்தசாமம் | – முக்தி தரும் |

# சைவ சமயம்

பல்வேறு சமயங்களில் மிகவும் பழமையும் பெருஞ்சிறப்பும் வாய்ந்தது சைவ சமயம். ''சைவ சமயம்'' என்பது, சிவத்தை ஆராய்ந்து அறிந்த கொள்கை என்று பொருள்படும். சைவம் – சிவம் – கொள்கை – சிவம் பற்றிய கொள்கை சிவத்தை அறிந்த கொள்கை எனப் பொருள்படும்

சிவம் என்னும் சிறப்புப் பெயர் பூண்ட முழுமுதற் கடவுள் எல்லா உயிர்களுக்கும் துன்பத்தைப் போக்கி இன்பம் அளிப்பவன்; இன்பம் அளிப்பதோடன்றி, எல்லா நலன்களையும் இனிது வழங்குபவன். இக்காரணத்தினாலேயே சைவநெறிச் சான்றோர்கள், சிவன் என்னும் சொல்லிற்கு 'மங்கலம்' என்னும் பொருள் கொண்டனர். சிவம் என்பதைக் கூர்ந்து நோக்குங்கால், அன்பு, இன்பம், மங்கலம் என்னும் பொருளைக் கொண்டுள்ளமை புலனாகும்.

உயிர்களுக்கு எல்லா நலமும் மங்கலமும் தரும் பொருள் எதுவோ, அதுவே முதற்பொருள் பரம்பொருள் – சிவம். பேரின்ப நிலையாகிய முக்தியே – வீடுபேறே சிவகதி. சிவகதியில் கொண்டு சேர்க்கும் நெறியே சிவநெறி – சைவநெறி – சைவ சமயம். முழுமுதற் பரம்பொருளாகிய சிவத்தை, சைவசமயம் அன்பின் வடிவமாய் கொண்டுள்ளது. எனவேதான் அன்பே சிவம் என்னும் மொழி அருள்மொழி சைவ நூல்களில் சிறப்பாய் விளங்குகின்றது.

சிவம் எனப்படுகிற பரம்பொருள், விஷ்ணு எனப்படுகிற பரம்பொருள், முருகன் எனப்படுகிற பரம்பொருள், சக்தி எனப்படுகிற பரம்பொருள், கணபதி எனப்படுகிற பரம்பொருள், கதிரவன் எனப்படுகிற பரம்பொருள் என்று இவ்வாறு எத்தனை எத்தனை பரம்பொருள்கள் உள்ளன? என்று வேறு சில சமயத்தவர்கள் நம்மைக் கேட்பது உண்டு.

இந்து சமயத்தில், அது சைவமாக இருந்தாலும், வைஷ்ணவமாக இருந்தாலும் கௌமாரமாய் இருந்தாலும் பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான். அது இரண்டல்ல பல அல்ல!

இந்து மதத்தின் அடிப்படை உண்மையை அறியாததால் எழுகின்ற கேள்வி இது. அந்த பரம்பொருளைத்தான் சைவர்கள் சிவன் என்கிறார்கள். வைஷ்ணவர்கள் விஷ்ணு என்கிறார்கள். சாக்தர்கள் சக்தி என்கிறார்கள். கௌமாரர்கள் குமாரன் என்கிறார்கள். காணாபத்தியர்கள் கணபதி என்கிறார்கள். சௌரர்கள் சூரியன் என்கிறார்கள். அப்படியானால் இவ்வாறு ஒவ்வொருவரும் தங்கள் விருப்பம்போல் பெயரிட்டு அழைக்கின்ற அந்தப் பரம்பொருளின் இயல்பான பெயர் என்ன? என்பது அடுத்த கேள்வி.

பரம்பொருளுக்கு இயல்பான பெயர் என்று எதுவுமே கிடையாது. உண்மையில் பெயரே இல்லாத ஒன்றினை நம் வசதியை முன்னிட்டுப் பல்வேறு பெயர்களால் அழைக்கிறோம். இதுவே சைவ சமயத்தின் அடிப்படைக் கோட்பாடு.

உலகில் காணப்படும் நிலம், காற்று, நெருப்பு போன்ற சாதாரணப் பொருள்களுக்கு அவ்வவற்றிற்குரிய இயல்பான பெயர்கள் இருக்கும்போது, அவை எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளுக்கு மட்டும் ஓர் இயல்பான பெயர் கிடையாது என்பதை எப்படி ஒப்புக் கொள்வது? என்கிறீர்களா?

நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், நிலம், நீர், காற்று, நெருப்புப் போன்ற பெயர்கள் கூட அப்பெயர்களால் குறிக்கப்படுகிற பொருள்களின் இயல்பான பெயர்கள் அல்ல என்பது நமக்குத் தெளிவாக விளங்கும். உதாரணமாக


நீர் என்பது ஒரு பொருளின் இயற்கையான பெயராக இருந்தால், உலகிலுள்ள எல்லா மக்களும் ஏன் அதனை அந்த ஒரு பெயரால் மட்டுமே குறிப்பிடுவதில்லை? ஆங்கிலேயர்கள் அதனை 'வாட்டர்' என்றும், இலத்தீன்காரர்கள் அதனை 'ஆக்வா' என்றும் வடஇந்தியர்கள் அதனை 'பாநீ' என்றும், வடமொழியாளர்கள் அதனை 'ஜலம்' என்றும் மலையாளிகள் அதனை 'வெள்ளம்' என்றும், தெலுங்கர்கள் அதனை 'நீலு' என்றும், ஏன் இப்படிப் பல்வேறு பெயர்களால் அழைக்க வேண்டும்? – காரணம் வேறு ஒன்றும் இல்லை. அந்தக் பொருளுக்கு உண்மையான அல்லது இயற்கையான பெயர் என்பதாக எதுவுமே கிடையாது. அதனால்தான் ஒவ்வொரு மொழியைச் சேர்ந்த மக்களும் அதனை வெவ்வேறு பெயர்களால் அழைக்கிறார்கள். நீரைப் போலவே, நிலம், காற்று, நெருப்பு எனப்படுகின்ற பொருள்களுக்கும் இயல்பான பெயர்கள் கிடையாது.



## லிங்கங்களும் பயன்களும்

சிவ ஆகமப்படி 16 வகையான பொருள்களால் லிங்கரூபம் செய்து வழிபடுதல் பெரும் சிறப்பென்று ரிஷிகள் கூறுகின்றனர். இவ்வகையான லிங்கங்களுக்கு க்ஷணிகலிங்கம் என்று பெயர்.

1. புற்றுமண் லிங்கம் – முக்தி
2. ஆற்றுமணல் லிங்கம் – பூமிலாபம்
3. பச்சரிசி லிங்கம் – பொருள் பெருக்கம்
4. சந்தன லிங்கம் – எல்லா இன்பங்களும்
5. மலர்மாலை லிங்கம் – நீண்ட வாழ்நாள்
6. அரிசி மாவு லிங்கம் – உடல் வலிமை
7. பழம் லிங்கம் – நல்லின்ப வாழ்வு
8. தளிர் லிங்கம் – நல்ல குணம்
9. தண்ணீர் லிங்கம் – எல்லா மேன்மை
10. அன்னலிங்கம் – உணவுப்பெருக்கம்
11. முடிச்சிட்ட நாணல் லிங்கம் – முக்தி
12. சர்க்கரை, வெல்லம் லிங்கம் – விரும்பிய இன்பம்
13. பசுவின் சாணம் லிங்கம் – நோயற்ற வாழ்வு
14. பசுவெண்ணெய் லிங்கம் – மன மகிழ்ச்சி
15. உத்திராட்க்ஷ லிங்கம் – நல்ல அறிவு
16. திருநீற்று (விபூதி) லிங்கம் – எல்லாவகை செல்வம்



இன்னும் சற்று ஆழ்ந்து சொன்னால்...

உலகில் உள்ள எந்த பொருளுக்குமே உண்மையான பெயர் கிடையாது. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு உண்மையான பெயர் உண்டானால், உலகு அனைத்திலும் ஒரே ஒரு மொழிதான் வழக்கில் இருந்துகொண்டிருக்கும். இரண்டாவது மொழிக்கு உலகில் இடமே இருக்காது!

ஒரே பொருளுக்கு வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பெயர்கள் வழங்கி வந்தாலும் அந்தப் பல பெயர்களாலும் சுட்டப்படுகிற பொருள் ஒன்றே ஒன்று தானே தவிர, பல இல்லை.

இதே போல்தான்.

சிவம் என்றும், விஷ்ணு என்றும், சக்தி என்றும், கணபதி என்றும், கந்தன் என்றும், கதிரவன் என்றும் இயேசு என்றும், அல்லா என்றும், பல்வேறு பெயர்கள் வழங்கி வந்தாலும் அந்தப் பெயர்களால் குறிப்பிடப்படுகிற பரம்பொருள் ஒன்றே அன்றி பல அல்ல! என்பதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்!

# சிவதலங்களில் வழிபாட்டு முறை

''கீழ்படிய முடியாதவன்

தலைமையும் தாங்க முடியாது....!''

கோவிலின் அருகில் சென்றதும், கோபுரத்தை ஸ்தூப லிங்கமாகவும், கடவுள் பாதமாகவும் பாவித்து வணங்கி கோவிலுக்குள் போக வேண்டும்.

கொடி மரத்தின் பக்கம் சென்றதும் ஆண்கள் எட்டு அவயங்களும் (தலை, இரண்டு செவிகள், இரண்டு கைகள், இரண்டு கால்கள், முகவாய் கட்டை) பூமியில் படவும் (அஷ்டாங்க நமஸ்காரம்), பெண்கள் ஐந்து அவயங்கள் (தலை, இருகைகள், இரு முழங்கால்கள்) பூமியில் படவும் (பஞ்சாங்க நமஸ்காரம்) செய்தல் வேண்டும். கொடி மரத்தை சூட்சும லிங்கமாக எண்ணி வணங்க வேண்டும்.

ஓம் சிவாயநம என்னும் மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்ட பிரகாரங்களை வலம்வர வேண்டும். பலிபீடத்தின் அருகில் சென்று நம்மிடமுள்ள காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களைப் பலிகொடுத்ததாக உறுதி மேற்கொள்ள வேண்டும்.

கன்னி மூலையிலிருக்கும் விநாயரை வலக்கையை இடக்கை முன் நிறுத்தி, வலக்கையால் இடக் காதையும், இடக்கையால்

விபூதி அணிவது, ருத்ராக்ஷம் அணிவது பஞ்சாக்ஷரம் ஜபிப்பது மூன்றும் சிவபக்தர்களின் லக்ஷணம்.

சிவன் கோயில்களில் அபிஷேக தீர்த்தம் வெளியே விழும் கோமுகத்தில், வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரி, காளி, களவி கரணி, பலவிகரணி, பலப்ரபதனி, ஸர்வ பூதமணி, மனோன்மணி என்ற நவகன்னிகள் வாசம் செய்வதாக ஐதீகம்

'ஹர' என்ற சொல்லுக்கு – பாவங்களை போக்குதல் என்று பொருள்.

வலக்காதையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தோப்புக்கரணமிட்டு பிரார்த்தனை செய்து வணங்க வேண்டும்.

பின் துவார பாலக விக்கிரகங்கள் முன் சென்று இறைவனை வணங்க அனுமதி தருமாறு வேண்டிக்கொண்டு சந்நிதியில் சென்று இறைவனை வணங்குதல் வேண்டும்.



தேங்காய், பழம் முதலிய நிவேதனப் பொருள்களை நிவேதிக்கச் செய்து, கற்பூர தரிசனம் செய்து, திருநீறு பெற்று மூலஸ்தான மூர்த்தியை வணங்கியவுடன் இதே போல் அம்பிகை சந்நிதியிலும் வணங்குதல் வேண்டும்.

உட்பிரகாரங்களில் இருக்கும் எல்லா மூர்த்திகளையும் வணங்கி வலம் வர வேண்டும். தட்சணாமூர்த்தியைக் குருவாகப் பாவித்து வணங்க வேண்டும். பின் முருக சந்நிதியில் வணங்கி சண்டேசுரர் சந்நிதியை அடைந்து சிவத்தியானத்திலிருக்கும் அவரிடம் மூன்று முறை கையால் கொட்டி அவர் நம்மைப் பார்ப்பதாக கருதி சிவதரிசன பலனை வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும்.

பின் நவக்கிரகங்களை வணங்க வேண்டும். ஆலய தரிசனம் முடிந்த பின் கொடிமரத்திற்குச் சற்று தூரம் விலகியிருந்து உள்ளேயுள்ள மூர்த்தியின் நாமத்தை ஜெபித்த பின் வீடு திரும்ப வேண்டும்.

நாள்தோறும் சிவாலய வழிபாடு செய்தல் வேண்டும். இயலாதவர்கள் சோமவாரம், மங்களவாரம், சுக்கிர வாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப் பிறப்பு, சூரிய, சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, கந்தர் சஷ்டி ஆகிய புண்ணிய காலங்களிலாவது தவறாமல் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும்.

விநாயகரை ஒருமுறையும், முருகனை மூன்று முறையும், சிவபெருமானை 3, 7, 9, 15, 21 முறைகளும், உமாதேவியை நான்கு முறையும், சூரியனை இரண்டு முறையும் இதரக் கடவுளை 3 முறையும், சக்திகளை 4 முறையும் வலம் வர வேண்டும். துன்பத்திலிருந்து விடுபட வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதை விட துன்பத்தைத் தாங்கி கொள்ளும் சக்தியைத் தரும்படி பிரார்த்தனை செய்வது நல்லது.




உ
குருபாதம்

தந்தை தாயும் நீ; என்னுயிர்த் துணையும் நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும் நீ; உனையலால்
மற்றொரு துணை காணேன்;
அந்தம் ஆதியும் அளப்பெருஞ் சோதியே!
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே!

ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

**முனைவர். ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்**
கட்டளை விசாரணை
**தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம் – மலைக்கோட்டை**
**திருச்சிராப்பள்ளி – 620 002. போன் : 0431 – 2702472**

உற்றார் இலாதார்க்கு உறுதுணையாவன ஓதிநன்னூல்
கற்றார் பரவ படுவன காதல் செய்ய
கிற்பார் தமக்கு கிளரராளி வானகம் தான் கொடுக்கும்
அற்றார்க்கரும் பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே — அப்பர்

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்பது ஔவையார் அமுத வாக்காகும். கற்றல் வேண்டும். நல்ல நூல்களை கற்க வேண்டும். அறிவு வளர்ச்சி என்பது பல நூல்களை கற்றால் கிட்டும்.

நாளிதழ், வார இதழ், மாத இதழ்கள் மக்களின் தேவையை உணர்த்தவும், நாட்டு நடப்புகளை படம் பிடித்து காட்டும் சாதனங்களாகும்.

சில தகவல்களை துணிந்து எழதுகின்ற பாங்கு பெற்றிருந்தால் தான் பத்திரிக்கை துறையில் வெற்றி பெற முடியும். அந்த பண்பை தமிழர் தகவல் பெற்றிருக்கிறது.

தமிழர் தகலல் மாத சஞ்சிகையினை பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. ''சேர்ந்தறியாகையானை'' என்று சிவபெருமான் முழுமுதற் கடவுள் இதனை பரிவார தெய்வமாக ஆக்கக்கூடாது என்றும், சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் 10ஆவது மாநாட்டு வரலாற்று நிகழ்வுகள், அதனால் ஏற்பட்ட மாறுதல்கள், கூடுதல், குறைவு முதலியனவும் இடம்பெற்றிருந்தன — சிறப்பாக அமைந்திருப்பனவாகும்.

மேலும் அரிய தகவல்களை தாங்கி வரவும் இதற்கு பெரும் பொறுப்பேற்று பணியாற்றும் சிவானந்த சோதி அவர்களுக்கும் மேலும் ஆக்கபூர்வமாக பணிபுரியும் தமிழர் தகவல் நூல் குழுவினருக்கும் எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளும் தருமையாதீன குருமணியின் குருவருளும் நல்க பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.


மௌன குமார சுவாமித் தம்பிரான்

## செஞ்சோலை வளாகப் படுகொலை

14.08.2006



முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது சிறிலங்காவின் யுத்த விமானங்கள் மேற்கொண்ட கோரக்குண்டு தாக்குதலில் 52 மாணவிகள் உட்பட 62 பேர் கொல்லப்பட்டனர். நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இத் தாக்குதலில் படுகாயமடைந்த மாணவி ஒருவர் சிங்கள தேசத்தில் சரியான முறையில் சிகிச்சை மேற்கொள்ளாததால் 28.09.2006 அன்று மரணமானார்.



# AMBAAL JEWELLERS

784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323
176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097

# VM CASH & CARRY

282, Lee High Road
London
Tel : 020 8852 3561

கலப்படமற்ற தூய தானியவகைகள்,
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்,
பச்சை நிலையில் பொலிவுறும் இலங்கை,
இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்,
கார நறுமண உணவுப் பொருட்கள்,
மதுபான வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்.



வெள்ளிக்கிழமைகளில்
இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் விற்பனையாகின்றன

# HAPPY TEX

6 Ealing Road
Wembley
Middx HA0 4TL
Tel : 020 8903 0782
Fax : 020 8903 4680

- *Money Transfer*
- *Textiles*
- *Watches*
- *Jewellery*
- *Rice Cookers*
- *Perfume*
- *Wedding Suits*



மாதம்
85 பவுண்
பணம்
செலுத்தி
மே மாதம்
தொடங்க
இருக்கும்
எங்கள்
நகைச்சீட்டில்
கலந்து கொள்ளுங்கள்

*New Mot Station Open !*

CCAC

**BMW MERCEDES VAUXHALL HONDA VOLKSWAGEN NISSAN Ford**

*Accident Repair Centre &*
*General Services &*
*Repairs to all Makes and Models*

இலண்டனில்
எந்த இடத்தில்
இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த
வேலைகளுக்கு
நீங்கள் செல்ல
வேண்டிய இடம்

- *Fully equipped M.O.T. & accident repair centre*
- *Insurance repairs welcome*
- *Recovery Service*
- *Approved insurance repairs*
- *Courtesy vehicle available For most repairs*
- *Professional friendly service and advice*
- *Collection & deliver within the local area*



# CAPITAL AUTOS LTD

51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com


Reg : ____________
Model : ____________
Name : ____________
Tel : ____________

£ 10 OFF Your M.O.T ! BASED ON CURRENT M.O.T.FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

*Hurry - Limited Offer !*

# காசியில் கண்ட அதிசயம்





உலகெலாம் சிவாலயங்கள் நிறுவப்பட்டு, உயரிய சைவ ஆகமப்படி ஆலயத் தரிசனங்கள் அடியார்களுக்கு கிடைக்கப் பெற்றாலும் காசி விசுவநாதரின் தரிசனம் எளிதில் கிடைப்பது இலகுவல்ல. பன்னிரு ஜோதிர்லிங்கங்களில் ஒன்றாக ஒளிவீசி அருள்பாலிக்கும் அதிசய லிங்கமாக காசி விசுவநாதர் வீற்றிருப்பது இந்துசமய பக்தர்களின் வரப்பிரசாதமாகும். கிடைப்பதற்கரிய மானிடப்பிறப்பின் காலவரையறைக்குள் ஒருமுறையேனும் காசி விஸ்வநாதரின் தரிசனம் கிடைக்கப்பெற்றால், இம்மானிடப் பிறவியின் பலனை எட்டிவிட்டதான ஒரு திருப்தியை இந்து மதத்தினர் அடைவது பூர்வஜன்ம புண்ணியம்.


அகிலமெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக ஈழத்தமிழர், காசி விசுவநாதரையும், காசி விசாலாட்சியையும் கண்டுகளிக்க மாட்டோமா என நெஞ்சங்களில் நிறைய ஆசை வைத்திருந்தாலும் அத்தகைய ஒரு கஷ்டமான பயணத்தை எங்ஙனம் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையீனத்தினால், தத்தம் ஏக்கத்தை நிராசையாக நிராகரிப்பதை கேள்விப்பட்டதுண்டு. அத்தகைய சாராரில் என்போன்றோர்கள் இருந்தாலும் எனது ஆசையை மிக இலகுவாகத் தீர்க்க, இந்தியாவிலும், லண்டனிலும் பல சுற்றுலா வர்த்தக மையங்கள் இயங்குகின்றன.

காசிக்குச் செல்வதற்கு பல வழிகள் இருப்பினும், வான்வழியாகச் செல்லும் மார்க்கமே மிக வசதியாகவும், சௌகரியமாகவும் அமைந்ததை எனது பயணம் நிரூபித்துள்ளது. அன்னிய இடம், புரியாத பாசை, பழக்கமில்லாத உணவு இத்தனை இடர்பாடுகள் இருந்தாலும், பயண ஒழுங்குகளை கன கச்சிதமாகச் செய்த சுற்றுலா ஸ்தாபனம் இந்தக் கஷ்டங்கள் எதுவுமே எம்போன்றார்களை அணுகிவிடாமல் மிக நேர்த்தியான முறையில், குறையொன்றும் சொல்வதற்கே இடமளிக்காமல் தமது பணிகளை செய்ததோடு, எமது பாதுகாப்பையும், நலனையும் நன்கு கவனித்து நன்மதிப்பை பெற்றுவிட்டதை நாம் கூறத் தயங்கவேயில்லை. அனைத்து ஒழுங்குகளையும் இருந்த இடத்திலிருந்தே செய்துவிட்டு, இறுதிப்பயணக் கட்டத்தில்தான் எமது பயணத்தின் முழுச்செலவுத் தொகையையும் எதிர்பார்த்த நம்பிக்கையை இந்திய மக்களின் அசைக்கமுடியாக விருந்தோம்பல் பண்பை பறைசாற்றி நிற்பது வரவேற்கவேண்டிய குணாதிசயம்.

காசிக்குச் செல்ல விரும்பும் அன்பர்கள் இந்தியத் தலைநகரான புது டெல்லிக்கு விமான மார்க்கமாகச் சென்றுவிட்டால், அங்கிருந்து உள்ளூர் விமான சேவைகள் மூலம் வாரணாசியைச் சென்றடைய முடியும். புதுடெல்லியிலிருந்து பல உள்ளூர் விமான சேவைகளை Kingfisher, Sahara, Jet Air போன்ற நிறுவனங்கள் குறைந்த செலவில், சிறந்த சேவையை குறிப்பிட்ட நேர அட்டவணைப் பிரகாரம் செயலாற்றி வருவதை அங்கு செல்பவர்கள் கண்டு கொள்ளலாம். இவ்விதமான சேவைகள் மூலம் பயணம் செய்வதால், பிரயாணத்தில் செலவிடப்படும் அதிகமான நேரத்தை சேகரிப்பதோடு, உடலில் ஏற்படும் பயணக் களைப்பையும் தவிர்த்துவிட முடியும். ஒருவார விடுதலை நாட்களை மட்டும் பகிர்ந்து கொள்ளவேண்டிய அன்பர்கள் விமான சேவையைப் பயன்படுத்துவதுதான் அதிகம் விரும்பத்தக்கது.

இந்தியாவுக்குச் செல்லும் அன்பர்கள் குறைந்த செலவில் மிகுந்த வசதிகளுடன் கூடிய விடுதி வசதிகளை மிக அழகாக நிர்மாணித்து, உலகத்தரத்தின் வரிசையில் 4 Star, 5 Star என்ற சௌகரியங்களுக்கு ஏற்ப நவீன ஹோட்டல்கள் வாரணாசியில் இருப்பதைப் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இதற்கு முன்னர் சென்றவர்கள் காசியிலும், அண்மித்த இடங்களிலும் இயங்கிவரும் மடங்களில் தங்கியதாகவும், அங்கு கிடைக்கும் வசதிகள் தமது தேவையைப் பூர்த்தி செய்யாத காரணத்தினாலும், தங்களுக்கு கிடைத்த அனுபங்களை மாற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது காசிக்கு செல்ல விரும்பும் அன்பர்களின் மனத்தில் ஒரு அச்சத்தை உண்டு பண்ணுவது இயற்கையே.

வருணா, ஆசி என்ற இரு நதிகள் சங்கமிக்கும் இடம்தான் வாரணாசி என இடப்பெயர் பெற்றது. கங்கை மகா நதியின் பயணம் தெற்குநோக்கி வருகையில், திடீர் திருப்பமாக வடக்கை நோக்கி பாயும் இடம்தான் விசுவநாதர், விசாலாட்சி சமேதரராக எழுந்தருளியிருக்கும் காசி ஸ்தலமாகும். விஸ்வநாதக் கடவுள் இலிங்க





ரூபமாக ஒரு சிறிய ஆலயத்துள் காட்சி தரும் ஆட்சி பல நூறு ஆண்டுகால சான்றுகள் கூறுகின்றன. மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றிய இஸ்லாமிய மதத்தைத் தழுவிய மன்னர்கள் இந்துக்களின் புனித ஆலயமான காசி விசுவநாதரின் கோவிலையும், அங்கு நெடுங்காலம் குடிகொண்ட இந்துக் கோவில்களையும் இடித்ததோடு மட்டுமல்லாமல் அவ்விடங்களில் மசூதிகளைக் கட்டி தம்மதத்தைப் பரப்பிய வரலாறு அறியக் கிடைக்கிறது. நான்கு முறை இடித்துத் தள்ளப்பட்ட காசி விஸ்வநாதரின் கோவிலை கட்டிக் காப்பாற்றிய பெருமை தென் இந்திய தமிழ் மக்களையே சேரும்.

அங்கு நிறுவப்பட்டுள்ள நகரத்தார் மடம், இக்கோவிலின் பராமரிப்பில் அதிக ஈடுபாட்டுடன் கருமமாற்றி வருவது கண்கூடு. இக்கோவிலில் நடைபெறும் இரவு 8.00 மணி பூஜை நகரத்தார் மடத்திற்கே உரியதென்றால், இவர்களுக்கு கிடைக்கும் முக்கியத்திற்கும், சிறப்புக்கும் வேறு சான்றுகள் தேவையில்லை. காசிக்கு வரும் அடியார்களின் வசதிக்காக, கங்கைக்கரையில் நீராட 64 படித்துறைகளை வெவ்வேறு சமூகத்தினர், அரசர்கள், வர்த்தகர்கள் போன்றோர் நிறுவியுள்ளனர். இப்படித்துறைகளுக்கு அருகாமையில் தங்குவதற்கு வசதியாக மடங்களும் அமைத்து, சேவைகள் செய்வது நித்திய கடமையாகவே அங்கு காணப்படுகிறது. இக்கங்கைக் கரையை அலங்கரித்து, விசுவநாதரின் ஆலயமும், அன்னபூரணி ஆலயமும், விசாலாட்சி ஆலயமும் ஒளிவீசுவது, கலியுகத்தின் கட்டளையாகவே இந்து சமய உணர்வாளர்கள் உள்நோக்குகிறார்கள். தல மகிமையும், மூர்த்தி மகிமையும், தீர்த்த மகிமையும், கூடிய காசியில் நீராடி வாதம், பித்த நோய்கள், சரீர உபாதைகள் துர்தேவதைகளின் தொந்தரவுகள், பஞ்சபூத உபாதைகள் போன்றவற்றை நீக்கிவிடலாம் என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகும். இதன் பலாபலன்களை அறிந்த, உணர்ந்த ஒரு ஐதீகமே தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீராட விமோசனம் பெறுவதைக் கண்டுகளிக்கலாம். தமக்காக மட்டுமல்லாமல் தம் முன்னோருக்கும் பித்ருக்கடன்களை செலுத்துவதற்கு ஏராளமான பக்தர்கள் அங்கு கூடுவதை அதிகபட்சம் காண முடிகிறது.

64 படித்துறைகளையும், படகில் சென்றவண்ணமே கண்டுகொள்ளும் காட்சியை இங்கு கட்டணம் அறவிடும் படகுத்தொழில் செய்வோர் காண்பிப்பதை நாளாந்தம் காணமுடியும். தங்கத் தகடுகளால் வேயப்பட்ட கோபுர அழகுடன் காட்சி தரும் காசி விசுவநாதர், சிறிய இலிங்கமாக சங்குவடிவத்தில் காணக்கிடைப்பது கலியுகத்தின் நியதியாகும். காசிக்கு செல்லும் அன்பர்கள், இவ்வாலயங்களை மட்டுமல்லாமல் அங்குள்ள சகல சௌபாக்கியத்தையும் காத்தருளும், காலபைரவரின் ஆலயத்தை தரிசிக்காமல் வருவதில்லை. இக்கால பைரவரின் கட்டளையால், அங்குள்ள பல்லிகள் சப்தமிடுவதில்லை. கருடன் பறப்பதில்லை என்பது புராணக் கதைகள் கூறும் வரலாறு. உண்மையில் இன்றளவும் இவ்வற்புதம் நிகழ்ந்தவண்ணம் இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

**உமா மகாலிங்கம்**

119, Eliot Bank
London SE 23 3XD

கேள்வி : திருமண நாளை ஆங்கில தேதிப்படி கொண்டாட வேண்டுமா? அல்லது தமிழ் மாத நட்சத்திரத்தின்படி கொண்டாட வேண்டுமா?

பதில் : வேத காலத்திலிருந்து வருடம், மாதம், திதி, நட்சத்திரம் – ஆகியவற்றைக் கடைப்பிடித்து வருகிறோம். பழக்கப்பட்ட ஒன்றை விட்டுவிட்டு, புதியதை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? தெளிவான ஒன்றை விட்டு விட்டு, மற்றொன்றைப் பின்பற்றுவது தேவையற்றது.

நமது திருமணத்திற்கும் அதை நிகழ்த்தும் காலத்துக்கும் தனிப் பெருமை உண்டு. திருமண நாளை தமிழ் மாதத் தேதி – நட்சத்திரத்தின்படி கொண்டாடுவதே பொருந்தும். பிறரை மகிழ்விக்க நாம் திருமண நாளைக் கொண்டாடுவதில்லை. நமது மகிழ்ச்சியைப் புதுப்பிக்கவே கொண்டாடுகிறோம். அந்தக் கொண்டாட்டம் நமது பண்பாட்டுடன் இணைந்து செயல்பட்டால் அதற்கு தனிப்பெருமை உண்டு.

—சக்தி விகடன்



கானக்குயில் 2007 நிகழ்ச்சியில்
சிறப்பு விருந்தினராக பங்கேற்ற
திரு. விஜய் யேசுதாஸ் அவர்களுடன்
திரு தில்லைநாதன் மற்றும்
திருமதி யோகா தில்லைநாதன்



கானக்குயில் 2007 நிகழ்ச்சியில்
விருது பெற்ற கலைஞர்களுடன்
திரு B.H. அப்துல் ஹமீத் மற்றும்
திரு தில்லைநான்
திருமதி யோகா தில்லைநான்



25.08.2007 அன்று தனது மூன்றாவது
பிறந்த நாளை கொண்டாடும்
சம்யுக்தா ராஜ்குமார்

ஆடி அமாவாசை, சித்திரை பௌர்ணமி, கார்த்திகை விரதம், கந்தசஷ்டி போன்றதே – கோவில் பிரமோற்சவம் – இந்த பிரமோற்சவம் – கோயில் கும்பாபிஷேகம் நடைபெறும் நாட்களை ஒட்டியே நடத்தப்படும். பிரமோற்சவம் பாடல் பெற்ற புகழ் பெற்ற தலங்களான சிதம்பரம், திருவண்ணாமலை, திருச்செந்தூர், பழனி, திருவாரூர் போன்ற இடங்களில் 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும், 10ஆம் நாள் கொடியிறக்கத்துடனும் நடைபெறும். இவைகள் எந்தக் காலத்திலும் மாற்றப்படுவதில்லை. சரியான திதியில்தான் தேர் ஓடவேண்டும். எமக்கு ஞாயிறு ஓய்வு நாள் என்று கடவுளுக்குத் தேர் ஓட்டுவது மிகத் தவறு மட்டுமல்லாமல் எந்தப் பலனும் கிடைக்காது. இதை விட கொடுமை தொடர்ந்து 28 நாட்கள் திருவிழா நடைபெறுவது. 9 நாட்களுக்குப் பிறகு நடக்கும் திருவிழாவால் திருவிழா செய்பவர்களுக்கு எந்தப் பலனும் கிடைக்காது.

தென் கிழக்கு லண்டனில்

# PARTY WORLD U.K

THE BEST DECORATORS



Manavarai (Mandaps) and Hall Decorations



Fresh Flower arrangements & Garlands from India



Printed & Plain Balloons for all events



Food Supply & Food warmers



D J Sound Systems, Live Music & Disco Lights



Photographs, Video, Wedding Cards & Hall Bookings



Party Cakes, Gift Items & all Party Needs

IN STORE



Fashion Cloths & Jewelleries



Pooja Items & Temple needs



Stationeries & More



T-Shirt Printing & Tailoring

BABAS

**20, Loampit Hill, Lewisham, London SE13 7SW**

**Tel : 0208 6949404 Mob : 07961843035 Fax : 0208 6949272**

**Email : sales@babaspartyworld.com Web : www.babaspartyworld.com**

அவருக்கு என்னங்க குறைச்சல்? ஏழெட்டு கார் இருக்கு... நாலஞ்சு பங்களா இருக்கு... ஆனந்தமா இருக்கார்!

அடுத்தவர்களைப் பார்த்து இப்படி பெருமூச்சு விடுகிறவர்கள் நிறையப் பேர் உண்டு.

அவர்கள் ஆனந்தமாக இருக்கிறார்கள் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களையே கொஞ்சம் நெருங்கிப் பாருங்கள். அவர்கள் நம்மைவிட அதிகமாக அல்லல்களுக்கு ஆளாகியிருப்பார்கள்.

அரசியல்வாதிகள்.... திரைப்பட நடிகர்கள்.... இப்படிப் பல பேர் இருக்கிறார்கள். இவர்கள் தூரத்துப் பார்வைக்கு உல்லாசம் மிகுந்தவர்களாகத் தோன்றுகிறார்கள். ஆடம்பரமான கார்... அழகான பங்களா... அவ்வப்போது விருந்துகள்... வெளிநாட்டுப் பயணங்கள்.

அவர்களைப் போல் நாமும் ஆக மாட்டோமா? என்று ஏங்குகிறோம்

அவர்களின் இன்னொரு பக்கத்தை ஆராய்ந்து பாருங்கள்... மனத்தளர்ச்சி, போதைப் பழக்கம், மதுப் பழக்கம், இல்வாழ்க்கையில் சிக்கல்கள், சரியில்லாத பிள்ளைகள், தனிமை இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கும்.



# எது ஆனந்தம்? எது உல்லாசம்?

## தென்கச்சி சுவாமிநாதன்

ஆடம்பரமாகவும் உல்லாசமாகவும் இருக்கிற ஒருவரைப் பார்த்து அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக நாம் நினைத்து விடுகிறோம். விவரம் தெரிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

உல்லாசம் வேறு; ஆனந்தம் என்பது வேறு என்று சொல்கிறார்கள்.

ஆங்கிலத்தில் fun என்று சொல்கிறோமே... அது உல்லாசம்.

அதுபோல Happiness என்று சொல்கிறோமே... அது ஆனந்தம்.

நம்மில் பலரும் இவை இரண்டும் ஒன்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது தவறு.

சரி... இவை இரண்டுக்கும் என்ன வேறுபாடு.? ஒன்று நடக்கும் பொழுதே அனுபவிப்பது உல்லாசம். அது நடந்த பிறகும் அனுபவிப்பது ஆனந்தம். ஆனந்தம் என்பது ஆழமான உணர்வு... உள்ளார்ந்த உணர்வு.

சினிமா பார்க்கிறோம்... தொலைக்காட்சி பார்க்கிறோம்... கிரிக்கெட் பார்க்கிறோம். பார்க்கிற வரைக்கும் நன்றாகப் பொழுது போகிறது. உல்லாசமாகவும் இருக்கிறது.

வண்டலூர் போகிறோம். மாமல்லபுரம் போகிறோம். சுற்றி வருகிறோம். சுற்றுகிறவரை உல்லாசம்.

அந்தச் சமயத்தில் நமது பிரச்சினைகளைத் தாற்காலிகமாக மறக்கிறோம். மனம் இலேசாகிறது. சிரிக்கிறோம்.

எல்லாம் சரி. இருந்தாலும் இவையெல்லாம் உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்திவிடாது ஏனென்றால்...

இவற்றின் பலன்கள்... அதாவது Positive Effects நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வரைக்கும்தான். நமது உல்லாசம் நாம் அதைவிட்டு வெளியே வந்தவுடன் முடிந்து போகிறது. அதுதான் Fun என்பது.

ஆனால் Happiness அப்படி இல்லை. ஒரு நிகழ்ச்சி முடிந்து பிறகும் நீடிக்கிறது பாருங்கள்... அதுதான் ஆனந்தம். உண்மையான மகிழ்ச்சியை உல்லாசமான வழியிலே அடைந்து விட முடியாது. ஆனந்தத்தை அடைவதற்கு நாம் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும். ஆகவே அதை அடைவதற்கு நாம் முயற்சி செய்வதில்லை. நழுவி போய் விடுகிறோம்.

உல்லாசமாக வாழ வேண்டும் என்பதற்காகச் சில பேர் கல்யாணமே வேண்டாம் என்று இருக்கிறார்கள். அவர்கள் அப்படித் தனியாக வாழ்வது... குழந்தைகள் வேண்டாம் என்று நினைப்பது... எல்லாம் அப்போதைக்கு வேண்டுமானால் உல்லாசமாக இருக்கலாம். உற்சாகமாகவும் தோன்றலாம். ஆனால் ஒரு குழந்தையால் ஏற்படக்கூடிய மகிழ்ச்சியை அவர்கள் இழந்து விடுகிறார்கள்.

*''குழலினிது யாழினிது என்பதம் மக்கள்*

*மழலைச் சொல் கேளா தவர்''*

என்று சொன்னாரே திருவள்ளுவர். அதன் அர்த்தமும் ஆனந்தமும் அவர்களுக்குத் தெரியாமலே போய்விடுகிறது. சரி! அப்படியானால் இப்பொழுது உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு என்ன வழி?

அடுத்தவர்களிடம் உண்மையான அன்பு செலுத்துங்கள். ஊருக்கும் உலகத்துக்கும் நல்லது செய்யுங்கள். உங்களால் முடிந்த அளவுக்குச் சேவை செய்யுங்கள். அதுதான் அதற்கு வழி என்பது பெரியவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுக்கிற உண்மை.

எனவே – சிறகை விரியுங்கள். சிகரங்களைத் தொடுங்கள்.

உண்மையான மகிழ்ச்சியின் வாசல் உங்களை இரு கதவுகளையும் திறந்து வரவேற்கும். உல்லாசம் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டுவராது என்பதைப் புரிந்து கொண்டால் போதும்... ஆனந்தம் என்பதன் அடையாளம் நமக்குத் தெரிய ஆரம்பிக்கும்.

புதிதாகக் கல்யாணம் செய்து கொண்ட ஒரு கணவன் – மனைவி. தேனிலவுக்குப் போய்விட்டு வந்தார்களாம். போய்விட்டுத் திரும்பியதும் அந்தப் பெண் சொன்னாளாம்.

''எங்க பிரயாணம் உல்லாசமாகவும் இருந்தது! ஆனந்தமாகவும் இருந்தது...!''

''அப்படியா...! எந்த ஊருக்குப் போய்விட்டு வந்தீர்கள்?'' என்று கேட்டிருக்கிறார்கள்.

அந்தப் பெண் சொன்னாள்: ''அவர் ஊட்டிக்குப் போயிட்டு வந்தார். நான் கொடைக்கானல் போயிட்டு வந்தேன்...!'' ●

## நம்பிக்கை மூலை :

ஆயிரம் ரூபாய் நோட்டும் 50 பைசா நாணயமும் சந்திந்துக் கொண்டன. ஆயிரம் ரூபாய் நோட்டு அலுத்துக் கொள்வது போலப் பெருமையடித்துக் கொண்டது. ''நடிகர்கள் கையில் புரள்கிறேன். தொழிலதிபர்கள் பெட்டியில் தூங்குகிறேன். ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் இருக்கிறேன். விலையுயர்ந்த கார்களில் பறக்கிறேன். வாழ்க்கையே பரபரப்பாய் இருக்கிறது. ஆனால் பாவம்! நீ இதையெல்லாம் பார்த்திருக்க மாட்டாய்''


ஐம்பது காசு நாணயம் அமைதியாகச் சொன்னது. ''நான் அங்கெல்லாம் போய் அவஸ்தைப்பட்டதே கிடையாது. கோவில் உண்டியல்களில் கடவுள் என்னைப் பாதுகாக்கிறார். மண் உண்டியல்களில் குழந்தைகள் என்னைப் பத்திரமாக வைத்திருக்கின்றன''

தன்னைப் பற்றிய கம்பீரம் எளியவர்களிடம் இருக்குமானால், பகட்டு மனிதர்களின் அலட்டல் கூட அடங்கித்தானே போக வேண்டும்.

## ஏன் இந்தக் குழப்பம்

சைவத்திருக் கோயில் ஒன்றியம் திருக்கணித பஞ்சாங்கத்தை பாவனையில் அமைத்து மக்களை குழப்பிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களின் ஒன்றிய ஆலயங்களில் 15.07.2007 அன்று சனிமாற்றம் என அறிவித்து சனிப்பெயர்ச்சி வழிபாடுகள் செய்தார்கள். ஆனால் இலங்கை மற்றும் இந்தியாவில் 05.08.2007 ஞாயிறு சனிமாற்றம் எனும் நிலையில் வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றது. குறிப்பாக சனீஸ்வரர் ஆலயமாக திகழும் திருநள்ளாறு ஆலயத்திலும் அன்றே சனிமாற்றம் நடைபெறுகின்றது. 2006ஆம் ஆண்டு சைவமகாநாட்டில் உரை நிகழ்த்திய பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார். தாய்நாட்டிலே எப்போது முக்கிய விஷேடங்கள் நடைபெறுகின்றதோ அதே நாளில் இங்கும் கொண்டாடுங்கள். குறிப்பாக திருக்கார்த்திகை தீபம் என்றால் திருவண்ணாமலை கோவிலும், கந்தஷஷ்டி என்றார், திருச்செந்தூர் கோயிலும் என உதாரணம் கூறினார். யாழ்ப்பாண இரகுநாத ஐயர் வாக்கிய பஞ்சாங்கமும், இந்திய வாக்கிய பஞ்சாங்கமும் எப்போதுமே சமய வழிபாட்டு விரதங்களுக்கு ஒரே சீராக அமைகின்றன. இவற்றை நன்கு தெரிந்தும், தவறு செய்கின்ற ஒன்றிய ஆலய நிர்வாகிகள் இனிமேலாவது திருந்த மாட்டார்களா? தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் என அடம்பிடிக்கும் முட்டாள்தனத்தால், சமயத்தையும், மக்களையும் குழப்புகின்றனர். இதை தவறு என்று சுட்டிக்காட்ட வேண்டிய சிவாச்சாரியார்கள் மௌனம் சாதிக்கின்றனர். இதனால் குழம்பி இருப்பது நமது ஆன்மீக தமிழ்மக்கள்! எனமே மக்களே சமய வழிபாட்டை மதித்து செயல்படுங்கள்.

# நீரிழிவும் இதயமும்




**க**ண், கால், நரம்புமண்டலம், இரத்தக் குழாய்கள், சிறுநீரகம் போலவே நீரிழிவு நோயினால் பாதிக்கப்படக் கூடிய மற்றொரு முக்கிய உறுப்பு இதயமாகும். 70லிருந்து 75 விழுக்காடு நீரிழிவு நோயாளிகள் இதய பாதிப்பினால் இறக்க நேரிடுகிறது. அதிலும் குறிப்பாக 30 விழுக்காடு மரணத்திற்கு மாரடைப்பு காரணமாகின்றது. இது டயாபிடிக் கார்டியோமயோபதி எனப்படுகிறது.

## ஏன், எதனால்?

இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தாததினால் இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து இரத்தக் குழாய் சுருங்கி, கெட்டிப்பட்டு, அதன் சுருங்கி விரியும் தன்மையினை இழந்துவிடுகின்றது. அதிக இரத்தசர்க்கரை, அதிக கொழுப்பு சத்து ஆகியவற்றால் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு இதயம் பலவீனமடைகிறது. அதுமட்டுமல்லாது அதிக சர்க்கரை இதயத்தசைகளைப் பாதித்து அதன் செயல்திறனைக் குறைத்து விடுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. நீரிழிவு நோயாளி புகைப் பிடிப்பவராக இருந்தால் இது மேலும் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

## அறிகுறிகள்

மூச்சிரைப்பு, நடந்தால் நெஞ்சு வலி, வேகமாக அல்லது அதிகதூரம் நடக்கமுடியாத நிலை, தூக்கத்தில் மூச்சிரைப்பு, நெஞ்சடைப்பு, நெஞ்சுவலி, கால்களில் வீக்கம், மற்றவர்களைப் போல நீரிழிவு நோயாளிகளுக்கு பெரும்பாலும் நெஞ்சுவலியுடன் கூடிய மாரடைப்பு வருவதில்லை. ஏனெனில் வலியுணர்வினை எடுத்துச் செல்லக்கூடிய நரம்புகள் பாதிக்கப்பட்டு விடுவதனால் அவர்களால் மாரடைப்பு சமயத்தில் கூட வலியை உணர முடிவதில்லை. மாறாக நெஞ்செரிச்சல், ஒரு விதமான நெஞ்சடைப்பு நடக்கமுடியாத சோர்வு என்ற நிலையில் இருப்பார்கள். இதயவரை சோதனை செய்து பார்த்தோமானால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருப்பது தெரியவரும்.

## பாதிப்புகள்

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு, அளவுக்கதிகமாக இருந்தால் இரத்தத்தில் குறைந்த அடர்த்தியுள்ள (LDL) லைபோபுரோட்டின், கொலஸ்ட்ரால், டிரைகிளிசரிட்ஸ் போன்றவை அதிகமாகவும், அதிக அடர்த்தியுள்ள (HDL) நல்ல கொழுப்பின் அளவு குறைவாகவும் ஆகிவிடுகின்றன. இதனால் இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து இரத்த ஓட்டத்தை தடை செய்து மாரடைப்பு வர ஏதுவாகின்றது. இந்த மாரடைப்பு பெரும்பாலும் நீரிழிவு நோயினால் இரத்தக் குழாய் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்படுகின்றது. இவர்கள் இரத்தக் கொதிப்பினை 120/90க்கு குறைவான அளவில் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். நீரிழிவு நோயாளிகள் அதிக எடையுடன் பருமனாக இருந்தால் அதிக அளவில் இதய நோய் வர வாய்ப்புள்ளவர்களாவார்கள்.

## தடுப்பு முறைகள்

நீரிழிவு நோயாளிகள் தங்களுக்கு வரும் தொந்தரவுகளை அலட்சியப்படுத்தாது இதயவரைபடம் எடுத்துப் பார்க்க வேண்டும். தேவையெனில் எக்கோ பரிசோதனையினை மேற்கொள்ளுதல் அவசியமாகும். இருதயக் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டால் மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டும். இரத்தக் குழாய்களில் அடைப்பு இருந்தால் பலூன் மூலம் அடைப்பை நீக்கியோ அல்லது மாற்று இரத்தக்குழாயோ பொருத்திக் கொள்ள வேண்டும்.

தினம் மருத்தவரின் அறிவுரையின்படி உடற் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் அல்லது தினமும் குறிப்பிட்ட கால அளவிற்கு நடை பயிற்சி செய்ய வேண்டும். இல்லையெனில் நிறுத்திவைக்கப்பட்ட சைக்கிளை ஓட்டி பயிற்சி மேற்கொள்ள வேண்டும். உடல் எடையினை குறைக்க வேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரையையும், கொழுப்புச் சத்தையும் கட்டுப்பாட்டிற்குள், சரியான அளவுக்குக் கொண்டு வர உணவு முறைகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். கொழுப்புள்ள பொருள்களையும், கார்போஹைட்ரேட் அதிகமாக உள்ள உணவுப் பொருட்களையும் தவிர்க்க வேண்டும். உடலுக்குத் தேவையான 1200/1500 கலோரி ஒரு நாளைக்கு என்ற கணக்கீட்டில் சாப்பிட வேண்டும். புகை பிடிக்கும் பழக்கத்தையும், மது அருந்தும் வழக்கத்தையும் உடனே நிறுத்த வேண்டும். மருத்துவரின் அறிவுரையை ஏற்று இதயம் காத்தால், இனிய வாழ்வு பெறலாம்.

நன்றி : நீரிழிவும் நிலையான வாழ்வும்
மரு. நா. மோகன்தாஸ் எம்.டி. டி.எம்.

# ரொனால்டு ரீகன்

## சென்ற இதழ் தொடர்ச்சி





திரையுலகம் தனக்கு நல்ல அந்தஸ்தைக் கொடுக்கவில்லை... தன்னை முழுமையாக அங்கீகரிக்கவில்லை என்று எண்ணிய ரீகன் சிறிது காலம் பொதுமக்களின் பார்வையிலிருந்து விலகி ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுது இரண்டாவது உலகப்போர் நடந்துக் கொண்டிருந்தது. இதனால் மற்ற இளம் நடிகர்கள் திரையுலகில் வருவதற்கு ஒரு வாய்ப்பை ரீகன் வழங்கினார் என்றே கூறலாம். ஒருவேளை ரீகனை பாரமவுண்ட் கம்பெனி பிலிம் டெஸ்ட் எடுத்திருந்தால் அவரது வளர்ச்சி இன்னும் நன்றாக இருந்திருக்கும். ஏன் என்றால் வார்னர் பிரதர்ஸ் கம்பெனி தங்களின் சக நடிகர்களை அவ்வளவாக மதிப்பதில்லை. அவர்களை உற்சாகப் படுத்துவதுமில்லை என அக்காலத்தில் பேசப்பட்டது.

ஒரு சமயம் "Bette Davis" எனும் பிரபல நடிகை கூறும்பொழுது MGM நிறுவனம் பொதுவாக நடிகைகளை ராணிகளைப் போல் நடத்துவார்கள். ஆனால் வார்னர் பிரதர்ஸ் ஏதோ வேலைக்காரிகளை நடத்துவது போல் நடத்துகிறார்கள் என்று கூறினார். இதற்கிடையில் Jane Wyman எனும் சக நடிகையுடன் காதல் ஏற்பட்டு 1940 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் அவரைத் திருமணம் செய்து கொண்டார். ஒரு வருடம் கழித்து இவர்களுக்கு Maureen எனும் மகள் பிறந்தாள். அவளை பாசத்துடன் வளர்த்து வந்தார்கள். பின்பு 1945இல் அவர்கள் இருவரும் ஒரு மகனை தத்து எடுத்துக் கொண்டார்கள். இதன் பிறகு அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அந்தக் குழந்தை பிறந்த மறு நாளே மரணமடைந்து விட்டது. அதன் பிறகு இருவருக்கும் ஏற்பட்ட மனக்குழப்பத்தின் காரணமாக 1948இல் இருவரும் விவாகரத்து பெற்றுப் பிரிந்து விட்டார்கள். அவர்களது பிரிவிற்கு மூல காரணம் ரீகன் அளவு கடந்து அரசியலில் ஈடுபாடு கொண்டதே என அவரது மனைவி ஜேன் வெய்மன் (Jane Wyman) கூறினார். இவர்கள் இருவரும் சேர்ந்து நடித்த முதல் படம் பிரதர் ராட் (Brother Rat) இந்தப் படத்தின் போதுதான் இருவரும் காதல் கொண்டார்கள். திருமணத்திற்குப் பிறது பிரான்கிராப்ட் (Brancroft) என்பவருடைய நான்காவது திரைப்படமான An Angel from Texas ன்ற படத்தில் நடித்தார். இதில் Wyman அதாவது அவரது மனைவியும் நடித்திருந்தார்.

நட் ராக்னெ – ஆல் அமெரிக்கன் (Knute Rockne - All American) சான்டா ஃபி ட்ரைல் (Santa Fe Trail) என்பவை எல்லாம் ரீகன் அடுத்தடுத்து நடித்த படங்கள் ஆகும். டுக்போல் ஆன்னி செய்ல்ஸ் எகைய்ன் (Tugboal Anne Sails Again) என்னும் நகைச்சுவைப் படத்திரும் நடித்தார் ரீகன். 1940இல் வெளியான இப்படத்தை லூயிஸ் செய்லர் (Lewis Seiler) இயக்கினார். முதன் முறையாக ரீகன் MGM நிறுவனத்திற்காக The Bad Man படத்தில் நடித்தார். இப்படத்தில் அவர் கடைசி காட்சியில் மட்டுமே நடித்திருந்தாலும் ரீகனுக்கு அது திருப்திகரமாக அமைந்தது.

மீண்டும் Warner Brosன் தயாரிப்பில் Million Dollor Baby என்ற படத்தில் நடித்தார். கர்டிஸ் பெர்னஹாட் (Curtis Bernehardt) இப்படத்தை இயக்கினார். இந்தப் படத்தில் ரீகன் Piano வாசிப்பவராக நடித்திருந்தார். அடுத்ததாக ரீகன் நைன் லிவ்ஸ் ஆர் நாட் இனஃப் (Nine Lives Are Not Enough) என்ற அதிரடிப் படத்தில் நடித்தார்.

விவசாயிகளின் வாழ்க்கை முறையை சித்தரிக்கும் படமாக அமைந்த ஜூக் கேர்ள் (Juke Girl) 1942இல் வெளியானது. இந்தப் படத்தில் கடைசியில் வரும் சண்டைக் காட்சிக்காக நிறைய தக்காளிப்பழங்களை பயன் படுத்தினார்கள். மூன்று நாட்கள் தொடந்து நடந்த படப்பிடிப்பின் போதும் அதே தக்காளிகளை உபயோகப் படுத்தியதால் ரீகனுக்கு அன்றிலிருந்து தக்காளிப் பழங்களைக் கண்டாலே வெறுப்பு ஏற்பட்டது.

ரீகனின் திரைப்பட வாழ்க்கை என்பது ஒரு மகத்தான வெற்றியைப் பெறவில்லை. ஆனாலும் அடுத்தடுத்து திரைப்படங்களில் நடித்ததால் சிறந்த நடிகராகப் பிரகாசித்திருப்பார் அல்லது ஸ்டார் அந்தஸ்த்துக்கு உயர்ந்திருப்பார். ஆனால் இரண்டும் ஒன்றல்ல வெவ்வேறுதான். பல திறமையான நடிகர்களால் நட்சத்திர அந்தஸ்த்துக்கு உயரமுடிய வில்லை. அதேபோல் பல நட்சத்திரங்களால் நல்ல திறமையான நடிகர்களாகப் பிரகாசிக்க முடியவில்லை. ரீகனும் நல்ல நடிகர்தான்.

இந்த இடைவேளைக்குப் பிறகு ரீகன் ஹாலிவுட் ஹோட்டல் (Holly Wood Hotel) என்ற படத்தில் நடித்தார். இதில் மிகச் சிறிய பாத்திரத்தில் நடித்தார். நடிகர்களின் பட்டியலில் கூட அவரது பெயர் இடம்பெறவில்லை. குறிப்பாக ரீகன் Brother Rat என்ற நகைச்சுவைப் படத்தில் சிறப்பாக நடித்திருந்தாலும் படம் பெரும் வெற்றியைப் பெற்றிருந்தாலும், இவருடன் நடித்த எடி ஆல்பர்ட் (Eddy Albert) என்ற நடிகர் அனைத்துப் பாராட்டுகளையும் புகழையும் தட்டிச்சென்றார். இப்படம் மகத்தான வெற்றியைப் பெற்றதால் வார்னர் பிரதர்ஸ் கம்பெனி பிரதர் ராட் அண்டு எ

பேபி (Brother Rat And a Baby)என்ற படத்தை 1940இல் தயாரித்தது.

Knute Rockane - All American (1940) என்ற படத்தில் பிரபல கால்பந்து வீரரான ஜார்ஜ் கிரிப் என்பவரது பாத்திரத்தில் ரீகன் நடித்தார். அதுவரை ரீகன் நடித்த படங்களிலே இப்படம் சிறப்பானதாக அமைந்திருந்தது. இதன் பிறகு எரால் ஃப்ளைன் (Errol Flynn) ஒலிவியா டி ஹேவிலான் (Oliviya D Havilland) இவர்களுடன் சான்ட்ரா ஃபி டிரைல் (Santra Fe Trail) என்ற படத்தில் நடித்தார். இயக்குநர் மைக்கேல் கர்ட்ஸ் இயக்கிய இப்படம் பெரிய வெற்றியைப் பெற்றது. ஹாலிவுட் நடிகர் எரால் பிளைன் சில கோணங்களில் எமது மக்கள் திலகம் எம்ஜியாரைப் போல் தோன்றுவார். அந்நாளில் எரால் பிளைன் நடித்த திரைப்படங்களைப் பார்க்கும் பொழுது அவரது வேடங்களும் அவரது உடையலங்காரங்களும் நமது நாட்டில் உருவான சரித்திரப் படங்களான நாடோடி மன்னன், மலைக்கள்ளன், மகாதேவி போன்ற திரைப்படங்களில் மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்கள் தோன்றிய வேடங்களை நமக்கு ஞாபகப்படுத்தும்.

அடுத்து ரீகன் கிங்ஸ் ரோ (Kings Row) (1942) என்ற படத்தில் இரண்டு கால்களையும் இழந்தவராக மிகச் சிறப்பாக நடித்திருந்தார். ரீகனின் திரைப்பட வாழ்க்கையில் இப்படம் சிறந்த படமாக விளங்கியது. சாம் உட் இப்படத்தை இயக்கினார்.

ரீகனின் விரல்விட்டு எண்ணக்கூடிய வெற்றிப் படங்களில் முக்கியமான படம் தி ஹாஸ்டி ஹார்ட் (The Hasty Heart (1950) அக்காலத்தில் பிரசித்தி பெற்ற நாடக எழுத்தாளரான ஜான் பாட்ரிக் (John Patrick) எழுதிய நாடகத்தைத் தழுவி இப்படம் எடுக்கப்பட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு MGM தயாரித்த பிரிசைனர் ஆப் வார் (Prisoner of War) (1954) என்ற படத்தில் நடித்தார். இந்தப் படமும் வழக்கம்போல் சுமாராகத்தான் ஓடியது. அடுத்து தி அல்டிமேட் வெப்பன் – மென்ஸ் மைன்ட்ஸ் (The Ultimate Weapon - Men's Minds) என்ற டாக்குமென்ட்ரி படத்தில் நடித்தார்.

Hell Cats of the Navy (1957) என்ற படம்தான் ரீகனின் கடைசிப்படம், ஏனென்றால் அதற்குள் ரீகன் தொலைக்காட்சி (TV) யில் பிரபலமாகிவிட்டார். இப்படத்தில் ரீகனின் மனைவி நான்ஸி டேவிசும் (Nancy Davis) நடித்திருந்தார்.

ரீகன் கிட்டத்தட்ட ஹாலிவுட்டின் அனைத்து முன்னணி நடிகைகளுடன் நடித்துள்ளார். ரீகனின் கடைசிப்படம் ஹெல் கேட்ஸ் ஆப் நேவி 1957இல் இப்படம் வெளியானது.

இச்சயத்தில்தான் ரீகனது வாழ்க்கையில், திருப்புமுனை ஏற்பட்டது. அதுவும் தொலைக்காட்சி மூலமாக. கிட்டத்தட்ட ரீகன் நடிப்பிலிருந்து ஓய்வு பெறும் கட்டத்திலிருந்த பொழுது, ஹெமிங்லே எழுதிய சில்லர்ஸ் எனும் கதையைத் தொலைக் காட்சியாக தயாரிக்கத் தொடங்கினார். அத் தொலைக்காட்சி படத்தில் நடிக்க ரீகனுக்கு அழைப்பு வந்தது.

அக்காலகட்டத்தில் தொலைக்காட்சியின் வரவால் பல சினிமா ஸ்டுடியோக்கள் பாதிக்கப்பட்டன. பல திரையரங்குகள் விற்பனைக் கூடங்களாக மாறத் தொடங்கின. இதனால் ஸ்டுடியோக்கள் தொலைக்காட்சியில் நடித்த நடிகர்களுக்குத் திரைப்படங்களில் நடிக்கத் தடை விதித்தது. ரீகனுக்கும் இத்தடை விழுந்தது. இதனால் ரீகன் தொடர்ந்து தொலைக்காட்சித் தொடர்களில் கவனம் செலுத்தினார். அச்சமயம் எடிசனால் துவக்கப்பட்ட ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி தொடர்ந்து தொலைக் காட்சிகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது. இக்கம்பெனி ரீகனைத் தங்களது தொடரில் நடிக்க ஒப்பந்தம் செய்தது.

இதன் தொடர்பாக ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்தில் மக்கள் தொடர்புப் பணிகளையும் ரீகன் கவனிக்கத் தொடங்கினார். நேரடியாக மக்கள் பிரச்சினைகளை அவர் சந்தித்து அதற்கான காரணங்களை கண்டுபிடித்ததன் விளைவாக அவருக்கு மக்கள் சேவையின் மீதான ஆர்வம் தூண்டப்பட்டது. தொடர்ந்து நடிகர் சங்கத் தலைவர் தேர்தலில் நின்று 1950 மற்றும் 1959 ஆகிய தேர்தல்களில் வெற்றி பெற்று தலைவரானார்.

இப்பதவிக் காலங்களில் அரசியலின் மீதான ஆர்வம் ரீகனுக்கு அதிகரித்தது. இதனிடையே அப்போது தன்னோடு நடித்து வந்த நான்சியை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதுவும் ஒரு வித்தியாசமான சந்திப்பு என்றே கூறவேண்டும். அதாவது ரீகன் நடிகர் சங்கத் தலைவராக இருந்தபோது நான்சி தனது பிரச்சினை சம்பந்தமாக சந்திக்க வந்தார். அப்போது கம்யூனிஸ்டுகள் ஹாலிவுட்டை எதிரிகளாகக் கருதப்பட்ட காலம். நான்சிக்குத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் பிரசுரங்கள் வந்துகொண்டிருந்தன. இதனால் நான்சியின் மீது சந்தேகப்பார்வை விழ நான்சி தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை, யாரோ இதை எமக்குத் தேவை இல்லாமல் அனுப்பி வைக்கிறார்கள் என முறையிட்டார்.

ரீகன் உடனே இப்பிரச்சினையில் தலையிட்டு நான்சி டேவிஸ் என்ற பெயரில் இன்னொரு நடிகை இருக்கிறார் என பகிரங்கமாக அறிவித்து நான்சியை அந்த இக்கட்டிலிருந்து விலக்கிக் காப்பாற்றினார். இதன் காரணமாக நான்சிக்கு இயல்பாக ரீகன் மீது காதல் ஏற்பட்டது. ஏற்கெனவே விவாகரத்து பெற்று தனிமையில் இருந்த ரீகனுக்கு நான்சியின் காதலும் அன்பும் தேவையானதாக இருந்தது. பிறகு அந்தச் சந்திப்புகளும் அதன் மூலம் நான்சிக்கு கிடைத்த விடுதலையும் இருவரது மனங்களையும் ஒன்று சேர்த்தது. ரீகன் நான்சியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். ரீகனின் முதல் மனைவிபோல் இல்லாமல் நான்சி ரீகனது அரசியல் நடவடிக்கைகளுக்கு மிகுந்த உற்சாகம் அளித்தார். ரீகனின் முதல் மனைவி ஜேன் வைமன் தான் விவாகரத்து பெற்றதற்கான காரணமாக ரீகன் பெரும்பாலும் நடிகர் சங்கத்திலேயே அது தொடர்பான பிரச்சினைகளிலேயே இருக்கிறார். வீடு அவருக்கு இரண்டாம் பட்சமாக இருந்தது. அதனால்தான் அவரை நான் விவாகரத்து செய்தேன் என்றார்.

1964இல் கலிபோர்னியாவின் கவர்னர் தேர்தலுக்காக அக்டோபர் 27ஆம் தேதி அவர் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை அவரது அரசியல் ஞானத்தையும் ராஜ தந்திரத்தையும் அனைவருக்கும் உணர்த்தியது.

ஒவ்வொரு அமெரிக்க குடிமகனின் உள்ளத்தையும் தைக்கும் வகையில் அவர் இது உங்களுடைய அல்லது என்னுடைய பிரச்சினை இல்லை. இந்தத் தேர்தல் நம் வருங்கால குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிறது மட்டுமல்லாமல் நீங்கள் அளிக்கப்போகும் வாக்கு ஆயிரம் ஆண்டகால இருளைப் போக்கும் வல்லமைகொண்டது என அவரது உரையின் ஒவ்வொரு சொற்களும் பழுத்த அரசியல்வாதி எனவும் வருங்காலத்தில் அவர் அடையப்போகும் உயர் பதவிகளையும் முன்பே கோடிட்டுக் காட்டியது.

ரீகனும் அவரது மனைவி நான்சியும் தங்களது குழந்தைகளுக்கு நல்ல பெற்றோர்களாக இருப்பதே தங்களின் வாழ்க்கையின் லட்சியம் எனக் கூறியிருக்கிறார்கள். 1957இல் National Fathers Day Committee of America ரீகனை Screen Father of the Year எனத் தேர்ந்தெடுத்து கௌரவித்தது.

ரீகனின் மனைவியான நான்சி ரீகன் தன்னுடைய கணவருக்கு பக்கபலமாக இருந்து வந்தார். கலிபோர்னியா கவர்னராக அவர் பதவி வகித்துக் கொண்டிருந்த சமயம் "Sacramento Bill" என்ற பத்திரிகை ரீகனைப் பற்றி தவறாக எழுதிவிட்டது. அதனைக் கண்ட நான்சி ரீகன் அப்பத்திரிகைக்கு அதுநாள் வரை கொடுத்த வந்த நன்கொடையை நான்சி நிறுத்தி விட்டார். அதுமட்டுமல்லாமல் அப்பத்திரிகை வாங்குவதையும் நிறுத்திவிட்டார். ஆனால் இந்த விஷயத்தில் ரீகன் சிறிது வேறுபட்டுக் காணப்பட்டார். அதில் அவரது பெருந்தன்மையும் வெளிப்பட்டது. அதுவே அவர் பின்னாளில் அரசியலில் வேரூன்றக் காரணமாகவும் அமைந்தது எனக் கூறலாம். அதாவது ஒருவன் நம்மை தவறாக சித்தறித்தால் அதைக் கண்டு நாம் சினம் கொள்ளாமல் நம்மைத் திருத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என எண்ணுபவர். அதனால் ஒரு வேளை செய்தார் அதாவது அந்தப் பத்திரிகையைத் தன்னுடைய அலுவலகத்திற்கு வருவாறு ஏற்பாடு செய்துவிட்டார். ஒவ்வொரு நாளும் முதன் முறையாக தன்னைப் பற்றி விமர்சனங்களை எழுதும் அந்த நாளிதழை வாங்கிப் படித்து தன் தவறுகளை திருத்திக் கொண்டார்.

1965இல் ரீகன் தன்னுடைய சுயசரிதையை வெளியிட்டார். தன் திரைப்பட வாழ்க்கை மற்றும் அரசியல் பற்றி அதில் குறிப்பிட்டிருந்தார். 1966இல் கலிபோர்னியாவின் கவர்னர் ஆனார். 1980 மார்ச் மாதம் 30ஆம் தேதி வாஷிங்டன் ஹில்டன் என்ற இடத்தல் ரீகனைக் கொலைச் செய்ய சதி நடந்தது. ஆனால் ரீகன் தப்பித்துக் கொண்டார். ஐக்கிய அமெரிக்காவின் 40வது ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். இவர் மற்ற அமெரிக்க சாதனையாளர்களின் பட்டியலில் வருவாரா...? என்பது அந்நாளில் அனைவருக்கும் ஒரு கேள்விக் குறியாகவே இருந்தது. ஆனால் அவரைப்பற்றி மோசமாக விமர்சிக்கும் விமர்சகர்கள் கூட ரீகனைப்பற்றிக் கூறும் பொழுது அவர் திறமைப் படைத்தவர் என்றே கூறினார்கள்.

நான்சியின் திரைப்பட வாழ்க்கை ஓரளவு வெற்றிகரமாக அமைந்தாலும் ரொனால்டு ரீகனைத் திருமணம் செய்துகொண்ட பிறகு 1952ஆம் ஆண்டு நான்சி ஹாலிவுட்டை விட்டு வெளியேறினார். தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையையும் நடிப்பையும் சரிசமமாகப் பார்த்துக் கொள்ள முடியாததால் அவர் நடிப்பதை நிறுத்திக் கொண்டார். 1966ல் Patti, Ron எனும் இரண்டு குழந்தைகளுக்கு தாயானார். ரொனால்டு ரீகன் அமெரிக்க ஜனாதிபதியானதும் அதுவரை புதுப்பிக்காமல் இருந்த அந்த வெள்ளை மாளிகையை நீண்ட வருடங்களுக்குப் பிறகு புதுப்பித்தார். வெள்ளை மாளிகை புதுப்பிக்கப்பட்டதே ஒழிய அவரது இந்த செயலுக்கு கறுப்பு வர்ணம் பூசப்பட்டது. ஆம் இந்த வெள்ளை மாளிகையைப் புதுப்பிக்க அரசாங்கப் பணத்தைத் தேவைக்கு அதிகமாக வாரி இறைத்து விட்டார் என அனைவராலும் நான்சி ரீகன் விமர்சனம் செய்யப்பட்டார். இப்படிப்பட்ட விமர்சனங்களுக்காக அவர் துவண்டு போகவில்லை. நாட்டிற்காகவும் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டார்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகும் இளைஞர்கள் அதிலிருந்து விடுபட்டுப் புத்துயிர் பெற நான்சி ரீகன் அதிகம் பாடுபட்டார். குறிப்பாக அவர் நடத்திய விழிப்புணர்வுப் போராட்டம் நான்சி ரீகனுக்கு நல்ல பெயரைப் பெற்றுத்தந்தது. மேலும் அரசியலில் அமெரிக்காவை ஒரு குடும்பத்தை நடத்திச் செல்வதைப் போல் ரொனால்டு ரீகனுக்குத் துணையாகவும் பக்கபலமாகவும் இருந்து வந்தார் என்றே கூறவேண்டும். நிறைய முடிவுகளை நான்சியே எடுத்துள்ளார். தன் மனைவி எடுத்த முடிவு என்றில்லாமல் அந்த முடிவுகளைத் தீர ஆராய்ந்து அவற்றிற்குச் சம்மதம் தெரிவிப்பார். நான்சி தனது ஆஸ்தான சோதிடரின் (Astrologer) ஆலோசனைப்படியும் ரீகனின் முடிவுகளையும் ஒப்பிட்டுச் சம்மதிப்பார்.


1987 ஆம் வருடம் நான்சி ரீகன் கேன்சர் நோயினால் தாக்கப்பட்டார். தனிப்பட்ட வாழ்க்கையிலும் அரசியலிலும் அவர் உலகின் மிகச் சிறந்த பத்து பெண்மணிகளில் ஒருவராகத் திகழ்ந்தார் என்பது பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடியதே. ரீகன் தனது பதவிக்காலம் முடிந்த பிறகும் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்றில்லாமல் மக்களுக்குச் சேவை செய்வதிலே தன் காலத்தைக் கடத்தி வந்தார். தனது 93வது வயதில் நிமோனியா மற்றும் அல்ஸெய்மர் (Pneumonia and Alzheimer's Disease) வியாதியால் கஷ்டப்பட்டு வந்தார். இறுதியில் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் தேதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். ●

வானிலிருந்து பெய்யும் மழை நீர், மணிக்கு ஏழுமைல் வேகத்தில் விழுவதாக கணக்கிட்டு இருக்கிறார்கள்.

# கணபதீஸ்வரர் சிவன் கோவில்

## ஊர்காவற்றுறை





### நிர்வாக அலகும் அமைவிடமும்

தீவுப்பகுதி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு ஊர்காவற்றுறை. சூழலில் உள்ள கிராமங்கள் சுருவில், கரம்பொன், நாரந்தனை, சாட்டி, சங்குமாலடி போன்றன. ஊர்காவற்றுறை பட்டின எல்லைக்குள் (சுருவில் வீதியில்) அமைந்துள்ளது. பிரபல்யமான ஐந்து கிறீஸ்தவ தேவாலயம் அமைந்துள்ள சூழலில் இத்திருத்தலமும் பொலிவுடன் திகழ்கிறது.

### மூலவர், அம்பாள்

காசி விசாலாட்சி சமேத காசி விசுவநாதர் என அழைக்கப்படுகிறார்.

### ஆலயத் தோற்றம்

இந்தியாவில் இருந்து வந்த ஸ்தபதிமாரால் வடிவமைக்கப்பட்டு சிவாலய விதிமுறைகட்கு அமைய கட்டப்பட்டள்ளது.

### தோற்றுவாய்

1910ஆம் ஆண்டு என அறிய முடிகிறது. இந்த ஆண்டில் தான் முதலாவது அனாவர்த்தன கும்பாபிஷேகத்தை தமிழ் நாட்டில் இருந்து வந்த சிவாச்சாரியார்களே செய்ததாகவும் அறிய முடிகிறது.

### பரிவார மூர்த்திகள்

ஓர் சிவாலயத்தில் இருக்க வேண்டிய சன்னிதானங்கள் யாவும் அமைந்துள்ளன. அம்பாள் சன்னதி, நடேசர் சபா மண்டபம், விநாயர், சுப்பிரமணியர், ஸ்ரீதேவி, பூதேவி சமேத மகாவிஷ்ணு, இலக்குமிக்கு தனியான கோயில், நவக்கிரகங்கள், பைரவர், சண்டேஸ்வரர், இரண்டு சன்னிதிகளிலும் நந்தி பலிபீடங்கள், சுற்று மாடக் கோவில்கள் ஆகிய அனைத்தும் உள்வீதிப் பிரகாரத்தில் அமைந்துள்ளன. நுழை வாசலில் தலவிருட்சம் காலம் அறிய முடியாத ஓர் அரச மரம் நிற்கின்றது.

### உற்சவ காலங்கள்

ஆனி உத்தரத்தைத் தீர்த்தமாக வைத்து 10 நாட்கள் கொடியேற்றத்துடன் விழாக்கள் நடைபெறுகின்றன. எம்பெருமான் வீதி உலா வரும் தேரும் பாரிவார மூர்த்திகளுக்குரிய வாகனங்களும் இருக்கின்றன.

### சிவ விரதங்கள், சக்தி விரதங்கள்

சிவனுக்குரிய சகல விரதங்களும் அம்பாள் விரதத்தோடு கூடிய சகல விழாக்களும் உரிய காலங்களில் சிறப்பாக நடைபெறுகின்றன.

### கும்பாபிஷேகங்கள், குருமார்

முதலாவது கும்பாபிஷேகம் 1910லும், இரண்டாவது கும்பாபிஷேகம் 1927லும், மூன்றாவது கும்பாபிஷேகம் 1996லும் நடந்தன. இரண்டாவது, மூன்றாவது கும்பாபிஷேகங்களை முறையே நயினாதீவைச் சேர்ந்த குருமார்களும், கோப்பாய், ஊரெழுவைச் சேர்ந்த குருமார்களும் சிறப்பாக செய்து வைத்தோடு விசேட அபிஷேகங்கள் விழாக்களிலும் அன்றுபோல் இன்றும் எந்தவிதமான பாகுபாடுமின்றி வந்து கிரியைகளைச் செய்து வருவதோடு இப்போது அறங்காவலராக இருப்பவருக்கும் ஊக்கத்தையும் கொடுத்து வருகின்றார்கள். இது தனக்கு கிடைத்த ஒரு பாக்கியம் என்று அறங்காவலராக இருக்கும் ஜெயராமக் குருக்கள், சந்திர காந்தக் குருக்கள் ஆகிய இருவரும் கூறினார்கள். ஆலயம் ஓர் இடமும் சைவ மக்கள் பெரும்பாலானோர் தூர இடங்களில் வசிப்பது ஒரு பாதிப்பாகத்தான் உள்ளது என்றார். ஐந்து கால பூசை நடைப்பெற்று வருவதாகவும் கூறினார். இந்த அளவிற்கு இப்படியான சூழ்நிலையில் ஓர் ஆலயத்தை அமைத்த கணபதீஸ்வர ஐயாவை சைவ உலகம் மறக்கக் கூடாது என்றும் கண்ணீர் மல்கக் கூறினார்.

### தோற்றி வைத்தவர் கணபதீஸ்வர ஐயா

அனலைத்தீவை பிறப்பிடமாகக் கொண்டு தனது குலத் தொழிலில் நாட்டம் குறைந்தவராகி பெரிதும்



வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்டவர் கணபதீஸ்வர ஐயா. ஊர்காவற்றுறையை வசிப்பிடமாக் கொண்டு சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களுக்கு அடிக்கடி சென்று தனது வியாபாரத்தை வளப்படுத்தினார். தம் குலப்பெண்ணை திருமணம் செய்தார். ஒரு குழந்தைக்கு தாயான இவரது துணைவியார் திடீரென்று மரணமானார். சில நாட்களில் குழந்தையும் இறந்தது. ஐயருக்கு வாழ்க்கை வெறுத்தது. காசி யாத்திரை புறப்பட்டார். கங்கையில் மூழ்கினார். எழுந்தபோது சிவலிங்கம் ஒன்று இவருக்குக் கிடைத்தது. இதை எடுத்துக் கொண்டு வந்த அங்கு உள்ள புரோகிதரிடம் காட்டிய போது அப்பனே இது பாணலிங்கம் மிகவும் அபூர்வ சக்தி கொண்டது. இதை நீ எடுத்துச் சென்று உனது நாட்டில் காசி விசுவநாதர் என்ற பெயருடன் பிரதிஷ்டை செய்து வழிபடுவாயாக என்று கூறினார். ஐயருக்கு ஒரு பயம் எப்படி சிவன் கோவில் கட்டுவது, எங்கே கட்டுவது என்ற ஏக்கத்துடன் ஊர்காவற்றுறைக்கு வந்தார். போதிய நிதி வளம் இவரிடம் இருந்தது.

## காணிக் கொள்வனவும் ஆலயப் பணியும்

கிறிஸ்தவர் பெரும்பான்மையாக வாழும் ஊர்காவற்றுறையில் ஓர் சிவாலயத்தைக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். பெருந் தொகைப் பணத்தைக் காணி கொள்வனவிற்காகச் செலவு செய்து பல எதிர்ப்புகளின் மத்தியில் காணியையும் பெற்று இந்தியாவில் இருந்து ஸ்தபதிமாரையும் அழைப்பித்து ஆகமமுறைப்படியான ஓர் சிவாலயத்தை அமைத்த தோடு சகல பரிவார மூர்த்திகளையும் இந்தியாவில் இருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தார். இன்று பூரணமான ஓர் சிவாலயமாக இது மிளிர்கிறது. 1990ல் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் இந்த ஆலயமும் மிகவும் பாதிப்புற்றது என்பது உண்மை.

## திருப்பணியும் ஊர் மக்களும்

ஐயரின் அயராத முயற்சியால் உருவான சிவாலயத்தை இந்த அளவு கட்டி முடிப்பதற்கு ஊர்காவற்றுறை வாழ் சைவ அடியார்களும் வணிகப் பெருமக்களும் பல வகையாலும் பூரணமாக உதவியுள்ளார்கள். கோவிலைச் சுற்றி சில கடைகளையும் இல்லங்களையும் அமைத்து இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களையும் நலன் விரும்பிகளாலும் வழங்கப்படும் உதவிகளையும் கொண்டு ஆலய நித்திய பூசைக் கருமங்களையும் செய்வதாகவும் அறிய முடிகின்றது.

## சமூக உணர்வு

அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்கும் இந்த நித்திய நைமித்திய பூசைகள் விழாக்களில் உபயம் உண்டு. 1927ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் சகல மக்களும் ஆலயத்தில் பாகு பாடின்றி வழிபடவும் முடிந்தது.

## மறுதாரம்

கணபதீஸ்வர ஐயர் தமிழ்நாடு பல்லாவரம் சென்று அந்தணர்களில் சிறந்த ஒரு குடும்பத்தில் ஜானகி அம்மாள் என்பவரைத் திருமணம் செய்து கொண்டு வரும் போது அம்மாவின் தம்பியாராகிய சாம்பசிவ குருக்களையும் உடன் அழைத்து வந்தார். கணபதீஸ்வரர் மறுதாரம் செய்தும் குழந்தை பாக்கியம் இல்லாதபடியால் தனது மனைவியின் தமையனாராகிய ஜெயராமக் குருக்களின் மகனாகிய சந்திர காந்தன் என்பவரைத் தத்தெடுத்து வளர்த்து படிக்க வைத்து பட்டமும் பெறவைத்தார். தனக்குப் பின் கணபதீஸ்வரர் கோவிலின் அறங்காவலராக உரிய முறைப்படி தத்தம் எழுதிக் கொடுத்தும் வைத்தார். அரச சேவையில் இருந்த சந்திரகாந்தன் ஆசாரிய அபிஷேகம் பெற்று இன்று கணபதீஸ்வரர் கோவில் அறங்காவலராக இருந்து பூசைகளுடன் நிர்வாகத்தையும் நடாத்தி வருகிறார். ஜானகி அம்மாளின் பெயரில் ஆலய தெற்கு வீதியில் பெரிய மண்டபம் ஒன்று அமைத்து 23.08.2002ல் திறப்பு விழாவும் நடந்தது.

## குறிப்பு

30.11.2005 நேரடியாக ஆலயத்தை தரிசனம் செய்ததோடு சந்திரகாந்தக் குருக்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்புக்களுடனும் கலந்துரையாடல் மூலமும் பெறப்பட்ட தகவல்கள், முக்கியமான ஆவணங்கள் 1990ல் இடம்பெற்ற போரில் அனைத்தும் படையினரால் அழிக்கப்பட்டு விட்டதாகவும் அறிய முடிந்தது.

## சம்பந்தர் தேவாரம்

நறை கொண்ட மலர் தூவி விரையளிப்ப நாள் தோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணி செய்யச்
சிறை கொண்ட வண்டறையுஞ் செங்காட்டம் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச்சரத்தானே

## ஆவணங்கள், பதிவுகள்

1. இனமோதல் அனர்த்தத்தால் எரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் விட்டதாக குருக்கள் கூறினார்.
2. நேரடியாகப் பார்த்து அறிந்த விடயங்கள்
3. சிவ சிவ சிவராத்திரிமலர் 1982

நயினை ஆ. தியாகராசா

# கனவாகிப் போன மலரும் நினைவுகள்...

நிகழ்ந்த பசுமையான வாழ்க்கை யாவும் கனவாகிப் போனதே? பிஞ்சு உள்ளங்களின் எண்ணங்கள் யாவும் தவிடு பொடியாகிப் போனது. நாலு பேருடன் சிரித்துப் பேசி மகிழ்ந்தவர்கள் இன்று நாலு சுவரின் மத்தியில் இருந்தும், அனாதைகளாகவும், இழப்பையும், சொந்த பந்தத்தையும், நாட்டையும், எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என ஏங்கித் தவிப்பவர்களின் எண்ணங்கள் யாவும் ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும் என எதிர்பார்ப்பவர்களின் கனவுகள் யாவும் கேள்விக்குறிதான்.

அப்பப்பா! வீட்டின் முன் முற்றத்தில் கூடிப் பேசி மகிழ்ந்த நாட்கள் தான் எத்தனை? கோயில்கள், கடைவீதி என்ன? விழாக்கள் என எங்கும் மக்கள் நடமாடித் திரிந்த காலங்கள் யாவும் கனவா? காகம் கரைவதும், சேவல் கூவுவதும், குயிலின் இனிய நாதக்குரலும், ஆலய மணி ஓசைகள் எல்லாம் நம் துயரில் துயில் எழுப்பிய நாட்கள் எல்லாம் கனவாகிப் போனதே?

விடியற்காலை என்றால் விளக்குமாறு எடுத்து முற்றம், கோழிக் கொட்டடி, மாட்டடி, கிணற்றடி என கோதிய தலைமுடியுடன் குப்பை கூட்டி அள்ளி வாழை மரங்களுக்கு அடியில் கொட்டிவிட்டு, அடுப்படி சாம்பலையும் அள்ளி குடம், செம்பு, பேணி, சட்டி, பானை, கேத்தில் என எல்லாவற்றையும் தென்னம்தும்பால் தேய்த்து, மினுக்கி, கழுவி, தண்ணீரை அடுப்பில் சுட வைத்து, கறந்தப் பாலை சுடக் காய்ச்சி கோப்பி குடித்த காலங்கள் எல்லாம் உருக்குலைந்து போனது.

பம்பரமாக சுழன்று சுழன்று அத்தனை வேலைகளை செய்தாலும் அலுப்புத் தெரிவதில்லை. நாரிப் பிடிப்புக்குக் கூட இடம் இல்லை. இது எமது பாரம்பரிய ஒரு ஒழுங்கான வாழ்க்கையையும், அமைதியையும், ஒரு கட்டுப்பாட்டையும் கொடுத்த காலங்களோ?

இது மட்டுமா? சந்தை என்றால் ஞாபகத்தில் வருவது தண்ணாகம், தின்னவேலி, மருதனார் மடம். வெள்ளிக்கிழமை என்றால் சொல்ல வேண்டுமா? அதி காலையில் இருந்து ஒரே பரபரப்பு. லொறி, மாட்டு வண்டி, தட்டி வான், சைக்கிள் என பல வாகனங்கள் முண்டியடித்துக் கொண்டு காய் கறிகள், பழவகைகள் எனவும் விற்பனை செய்பவர்கள், கொள்வனவிற்கு வருபவர்கள், புரோக்கர்கள், பேரம் பேசி தகராறுகள் என அடேயப்பா? எவ்வளவு குதூகலமான நாட்கள். ஒரு கணம் இப்போ நினைத்துப் பார்த்தோமேயானால் றோட்டில் ஈ, காக்கா, குருவியை கூட காணமுடிவதில்லையே?

ஒரு வைபவம் நடைபெறுவது என்றால்? எத்தனையோ மாதங்களுக்கு முன் விறகு கொத்தி, அரிசி மூட்டைகள் என அடுக்கி, வாழை இலை, வாழை பழம், வாழைக்காய், தேங்காய், மரக்கறிகள் என ஒரு பட்டடையே இருக்கும். பெண்கள் கூட்டமாக இருந்து மரக்கறிகளை அரிவாளால் அரிந்து பாயில் பரப்பி வைப்பதும், தேங்காயை துருவி வைத்தால் ஒரு சிறிய பனி மலை போல இருக்கும். எதுவானாலும் மக்களோடு மக்களாய் பின்னி, பிணைந்து உரிமையோடு பங்கேற்று கூடி செல்வதே எங்களின் ஊர் அடையாளமும் இதுவே? இதுவும் கனவா?

திருவிழா காலங்களில் சனங்கள் நடந்து செல்லும்போது தேவாரம், பஜனை பாடிக்கொண்டு கூட்டம், கூட்டமாக போகும்போது அந்த பக்தி இருக்கிறதே? எம்மையும் பரவசத்தில் ஆழ்த்திவிடும். இதுதானே விடிந்து விட்டது என நேரத்தை காட்டியது. தோட்டங்களில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுதல், சலவைத் தொழிலாளர்கள் துணி துவைக்கும் சத்தம், மாட்டு வண்டிச் சத்தங்கள் என எல்லாமே காதுகளுக்கு இதமாகத் தானே இருந்தன. இதுவும் கூட தமிழன் என்று அடையாளம் காட்டியது. அந்த நாட்களும் கனவா?

ஒவ்வொரு புது ஆண்டும் பிறக்கப் போகிறது என்றால், எவ்வளவு சந்தோஷமான எதிர் பார்ப்புகள். பிள்ளைகளை கரை சேர்க்க, ஒரு வீட்டை கட்ட, வாங்க என ஒரு பட்டியலே போட்ட காலங்கள் எல்லாம் எங்கே? தை பிறக்கட்டும் என்று இருந்தார்கள், எத்தனையோ தை பிறந்தாச்சு. ஒன்றையும் காணோமே? என மன நோயால் பாதிக்கப்பட்டவரே தவிர ஒன்றும் நனவாகவில்லையே?

தை பிறந்தால் வழி பிறக்கட்டும் என்ற நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு இந்த கனவு நனவானால் மக்கள் வயிற்றில் பாலை வார்ப்பது போல் அல்லவா இருக்கும்.

நன்றி

அன்புடன்

லண்டன் (ஹரோ)

திருமதி புவனம் தர்மரட்ணம்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

என்ற உலகப் பொதுமறையாம் திருக்குறளின் கடவுள் வாழ்த்தின் வாயில்படி தொட்டு வணங்கி இன்தமிழோடு தனது இனிய உயிரை இணைத்து தனது வாழ்நாள் முழுவதும் தமிழோடு வாழ்ந்து தமிழுக்காகவே தம் இறுதி மூச்சையும் கொடுத்துவிட்டு வனோங்கி வளர்ந்து நிற்கும் தமிழ் அன்னைமடியிலே அமரத்துவ வாழ்வினை பெற்று வாழ்ந்து கொண்டு இருக்கின்ற இலக்கிய இதயங்களின் ஆத்மாவிலே இருந்த கிளர்ந்து விருட்சமாகி இருக்கின்ற உயிர் ஓவியங்களை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து பரவசமடைதலும் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து இதயங்களிலும் இலக்கிய களிப்பினையும் அதன் இலட்சியங்களையும் ஊட்டுதலே இந்தத் தொடர் கட்டுரையின் நோக்கமாகும்.

முக்காலமும் உணர்ந்த முனிவர்களும் இவள் எப்பொழுது பிறந்தாள் என்று கூறமுடியாத வரலாற்று பெருமை உடையவள் தமிழ்தாய். பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் தன் கன்னியழகு குன்றாமல் வாழ்ந்து வருகின்றாள். சமூக மாற்றங்கள் பல ஏற்பட்ட போதிலும் நூல் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் குன்றாத அழகுடன் பரிணமித்து வருகின்றாள். இவளுக்கு இருக்கக்கூடிய மிக அதிசிறப்பு என்னவென்றால் பழமை வாய்ந்த இலக்கியச் செல்வங்களை தனது உடமையாகக் கொண்டிருப்பது என்றால் மிகையாகாது. மேலும் இத்தகைய இலக்கிய வளங்களின் பெருமையையும் உறுதிப்பாட்டையும் பற்றிச் சிந்திந்த மகாகவி பாரதி தரும் வாக்குறுதி மேலும் இதனை உறுதி செய்கின்றது

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறளுறு தியும்தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவுமழகும் கருதியும்
'எல்லையொன்றி ன்மை' என்னும்

பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழ்ச்சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதிகொண்டு இருந்தேன் என்று பாடும் வகையிலே தமிழ்ச்சாதியின் உயர்வு தமிழிலும் தமிழின் உயர்வு தமிழ்ச் சாதியிலுமாக வளர்ந்து கொண்டு வந்திருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகின்றது. இத்தகைய தமிழ் வளர்ச்சியானது காலத்தின் போக்கிற்கும் வேகத்திற்கும் ஏற்ப புதுப்புது மாற்றங்கள் பெற்றும் புதுவிதமான பொலிவுகளைப் பெற்றும் வீரநடை போட்டு வளர்வதை வரலாற்று இலக்கிய வளர்ச்சி விளக்கி நிற்கின்றது. இன்று அமரத்துவம் பெற்று வளர்ந்து கொண்டிருக்கும் எம் தமிழ் மொழியின் வளர்ச்சியிலே தம்மை முற்றும் முழுதாக இணைத்து தமிழ் ஒன்றே தமது உயிர் மூச்சுக் காற்றாக சுவாசித்து இன்தமிழுக்காக தமது இன்னுயிர் ஈர்ந்த கலை மாமணிகளை எண்ணிக்கையில் கூறிவிட முடியாது. யார் இவர்கள்?

வளர்ந்து வந்த இலக்கிய வரலாற்றுப்பாதையின் பல மைல் கற்களுக்கு அப்பால் நின்று திரும்பி பார்க்கும்பொழுது ஒரு கம்பன் தெரிகின்றார். ஒரு வள்ளுவர் தெரிகின்றார். ஒரு இளங்கோ தெரிகின்றார். ஒரு பாரதி தெரிகின்றான். ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை என்ற ஒரு ஈழத்து தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் தெரிகின்றார். இப்படியாக பலர் காலம் கடந்தும் அமரத்துவம் பெற்று எம்மத்தியிலே தமிழ்த்தாயின் மடியிலே அவள் அரவணைப்பிலே அணையாத ஜோதியாக சுடர் விட்டு பிரகாசித்து கொண்டிருக்கிறார்கள். மாறாகச் சிலரைக் காணமுடியவில்லை இதற்கு காரணம் என்ன?

இதன் விளக்கம் பற்றி ஈழத்துப் பண்டிதமணி கணபதி பிள்ளை அவர்களுடைய சிந்தனையை நோக்கினால் ஒரு பேருண்மை புலப்படுகிறது. அது என்னவென்றால்...

# இலக்கிய

உயிர் உள்ள உடம்பு வாழ்கிறது. அதுபோல பொருள் பொதிந்த படைப்பு காலத்தை வென்று வாழ்கின்றது. அதாவது உயிரோட்டமுடைய படைப்புக்கள் காலம் கடந்துவாழ உயிரோட்டமற்ற படைப்புக்கள் காலவெள்ளத்திலே கரைந்து போய் விடுகின்றன என்று தெளிவாக கூறுகின்றார்.

உடலைப் பிரித்து உயிரைக் கையிலே பிடிக்க முடியாது. இலக்கியத்தின் உயிரைப் பிடிப்பதற்கு அல்லது அளப்பதற்கு இலக்கணம், நிகண்டு, அகராதி விமர்சனங்கள் எடுத்துக்காட்டுக்கள், மேற்கோள்கள் இத்தனை ஆய்வுகளின் மத்தியிலே அந்த படைப்புகள் உயிர் இழந்து போய்விடும். இத்தனை துன்பங்களையும் வேதனைகளையும் தாண்டிய அல்லது மீறிய படைப்புக்கள் அமரத்துவம் பெற்று வாழ்கின்றன. எனவே இலக்கியத்தின் பொருள் என்பது உயிர் போன்றது. அதுவே "உரி" என்றும் அழைக்கப்படுகின்றது. எனவே உயிர் உள்ள இலக்கியங்கள் காலத்தை வென்று தமிழ்

பூஞ்சோலையில் பூத்துக் குலுங்குகின்றன என்கிறார் பண்டிதமணி. இத்தகைய உயிரோவியங்களை நினைவு கூர்ந்து அனுபவித்தலும் பேரானந்தம் பெறுதலும் அத்தகைய அமரத்துவ ஆன்மாக்களை வாழ்த்தி வணங்குதலுமே இலக்கிய சங்கமம் என்ற எனது இலக்கிய பயணத்தின் இலட்சியமாகும்.

ஒரு மனிதன் தன் எண்ணத்தில் தோன்றும் கற்பனைக்கு வடிவு கொடுக்கும் பெருவேட்கையில் இலக்கியங்களைப் படைக்கிறான். அதை அவன் மட்டும் இரசிக்கவா படைக்கிறான்? இல்லை. அந்தப் படைப்புகளை அனுபவிக்கின்றவர்களே பெரும் பங்கு வகிக்கின்றனர். அவர்களது படைப்புகளை மக்கள் ஏற்றுக்கொள்ளும் போது படைப்பாளி பெருமை பெறுகின்றான். மக்கள் விலக்கிக் கொள்ளும்போது மனம் வெதும்புகின்றான். மக்களின் மனநிலை அறிந்து அதற்கு ஏற்ற வண்ணம் படைப்பினை மேற்கொள்ளும்போது இலக்கியத்தின் தரம் குறைந்துவிடுகின்றது. ஆகவே எதைப் பற்றியும் கவலைப்படாத போராற்றல் வந்துவிட்டால் எப்படியும் எழுதலாம். அதனை அனுபவிக்கும் திறமை படைத்தவர்கள் அனுபவித்துக் கொள்வார்கள்.

# சங்கமம்

## சிவ. தனிகாசலம்

ஒரு இலக்கியத்தின் தராதரம் என்ன என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம் என்பதனை விளக்க முற்படும் விமர்சகர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள், பண்டிதமணி கணபதி பிள்ளை அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை புதியதொரு எடுகோளை எடுத்துக் கொள்கின்றார்.

மக்கள் இலக்கியத்தை அனுபவித்தல் என்பது அவரவர்களுடைய இலக்கிய அனுபவஞானம், கல்வி, அறிவு என்பவற்றைப் பொறுத்து வித்தியாசப் படுகிறது. எனவே இந்த எல்லைகள் எல்லாவற்றையும் மீறி எது கால வெள்ளத்தை கடந்து வாழ்கின்றதோ அதுவே தரமான இலக்கியம் என்கிறார் பேராசிரியர். எனவே கவிதைகள், கதைகள், புதினங்கள் எவை என்றாலும் பலவகைப்பட்ட விமர்சனங்களையும் தாண்டி மக்கள் மனதிலே நிலைத்திருந்தால் அவை அமரத்தவம் வாய்ந்த படைப்புகள் என்கிறார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள்.

தமிழ் இலக்கியங்கள் மிகத் தொன்மை வாய்ந்தவை. பண்பட்டவை வரலாற்று சிறப்புப் பெற்றவை. கற்பனையாற்றல் நிறைந்தவை. பொருள் வளம் நிரம்பப் பெற்றவை. அதற்கேற்ற சொல்வளம் பெற்றவை. இவை அனைத்தும் கற்போர் இதயங்களை இனிக்கச் செய்வன.

மனித வாழ்வு செம்மை அடைய வேண்டும் என்றால் அந்த வாழ்வு ஓர் இலட்சியத்துடன் பின்னிப் பிணைந்ததாக இருக்க வேண்டும். இந்த இலட்சியங்கள் உறுதித் தன்மை பெற்று இருக்க வேண்டும். 'எண்ணியார் எண்ணியாங்கு எய்துவர்' என்ற தெய்வப் புலவரின் வாக்குறுதிக்கு ஏற்ப அமைய வேண்டும். இவற்றை எல்லாம் நடைமுறைப் படுத்துவதாயின் அவர்களை கலைகள், இலக்கியம், சரித்திரரீதியாக உணரச் செய்ய வேண்டும். மனித வாழ்வின் மாபெரும் சக்தி என்ன என்பதனை அவர்கள் மனம் கொள்ளச் செய்ய வேண்டும். உயர்ந்த மனித லட்சியங்கள் பலவற்றை பாவனா சக்தியின் வன்மையால் வரலாற்று இலக்கியங்கள் உணர்த்தி உள்ளன. அது மட்டுமல்ல மனித வாழ்வின் செம்மையான இலட்சியங்களை உயரிய சிந்தனைகளை கதைகள், சரித்திரங்கள் மட்டுமல்லாது மனிதனுடன் கூடிப்பிறந்த சமயத்தின் கொள்கையும் கூட விளக்கிக் கூறுகின்றது. இவற்றை மீண்டும் மீண்டும் மக்கள் முன் கொண்டுச் செல்ல வேண்டும். இவற்றையெல்லாம் தத்துவசொருபமாக உள்ளம் உருகி என்னுடன் பகிர்ந்து கொண்டவர் இலங்கேசுவரன் எனப் புகழ்பெற்ற நாடகப் பேரரசர் ஆர். எஸ். மனோகர் அவர்கள்.

எமது முற்காலத் தமிழ் இனம் பற்றிய செய்திகளை இலக்கிய வரலாற்று கண் கொண்டு பார்க்கும் பொழுது காதலும் வீர நிகழ்ச்சிகளுமே பெரிய அம்சங்களாக விளங்குகின்றன. ஏனைய சங்கதிகளும் எடுத்து விளக்கப்பட்டு இருந்தாலும் காதலும் வீரமுமே மக்கள் மனதில் முதல் இடம் பெற்றிருந்தன. இந்த ஒழுக்கங்கள் உலகின் பல பாகங்களிலும் பேசப்பட்டாலும் இவை தமிழ் மக்களது வாழ்விலே இலட்சியங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தன.

எம் முன்னோர்கள் வாழ்க்கை நடைமுறையிலே கற்பு வாழ்வு என்பது பெரிதும் பாராட்டுதலுக்கு உரியதாக இருப்பதுடன் அத்தகைய கற்புடைய மங்கையரால் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகளையும் பாராட்டி வந்துள்ளார்கள். 'மனைக்கு விளக்காய வானுதல்' என்று பெண்மையின் உயர்வினை புறநானூறும் 'உயிரினும்

சிறந்தன்று நாணே' தொல்காப்பியமும் இங்கு விளக்கியுள்ளமையை உற்று நோக்கலாம். இதனைப் போன்று மக்கட்செல்வம் பற்றி

'மயக்குறும் மக்களை இல்லோர்க்கு
பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே'

என்று புறநானூறு கூறி இருக்கின்றது. இவற்றையெல்லாம் ஒன்றாக இணைத்து மங்கலம் என்பது மனைமாட்சி மற்றும் அதன் நன்கலம் மக்கட்பேறு என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

ஆண்களும் பெண்களும் காதலைப் போற்றினார்கள். காதல் இல்லாத வாழ்வு சிறுமையாகக் கருதப்பட்டது. காதல் வாழ்விலே கணவன் உயிராக இருந்தான் மனைவியர் கடமையில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டார்கள். கணவனுக்குத் தங்கள் கைப்பட ஆக்கிச் சுவையுடன் ஊட்டினார்கள். மனைவியுனுடைய இன்பமான உணவுச் சுவையிலே தேவலோக அமிர்தத்தைப் பருகினான் ஆடவன். காதலர்கள் கருத்தொருமிப்பிலே இன்ப வாழ்வு பூத்துக் குலுங்கியது.

காதல் கொண்டு இல்லற வாழ்விலே இன்பமுடன் வீற்றிருந்த மனையாளுக்கு இன்னுமோர் பணி காத்திருந்தது. அதுதான் விருந்தோம்பல். காதலித்து மணம் புரிந்துகொண்ட பெண்கள் கணவனை பிரிந்து இருந்த காலத்தில்கூட தன்னை ஓம்பாது கணவனை நோக்கிக் காத்திருந்தாள். இவ்வாறான ஒழுக்க வரலாறுகளைச் சங்கத்தமிழ் பாடியுள்ளது. காதல் நெறி கற்பு நெறியாகி அதுவே தெய்வ நெறியாகி அத்தகைய தெய்வநெறி நின்ற பெண்மை மழை பெய்யென்று சொன்னால் மழையும் பெய்யும் என்று உறுதி கொண்டிருந்தார்கள். இதனைத்தான் வள்ளுவரும் ''பெய்யெனப் பெய்யும் மழை'' என்று பாடிச் சென்றுள்ளார்.

வரலாற்றுப் பெருமைமிக்க இந்த வாழ்க்கைப் பண்பாட்டிலே வீரவாழ்வு பெருவாழ்வு என்று கருதப்பட்டு இருக்கின்றது. இந்த வகையிலேயே பெண்களும் ஒரு வீரனையே காதலனாகக் காண முயன்றுள்ளார்கள். காதலியின் கடைக்கண் பட்ட வீரனும் காற்றிலே ஏறி விண்ணையும் சாடும் வீரவிழி பெற்று இருந்தான்.

வீரனைக் கணவனாகப் பெற்ற பெண்கள் தம் வயிற்றிலே பிறக்கின்ற குழந்தைகளும் வீரனாக இருக்க வேண்டும் என்பதிலே முனைப்பாக இருந்தார்கள். போர்முனை சென்ற தனது மகன் புறமுதுகிட்டான் என்ற செய்தி கேட்டால் அவனுக்குப் பால்கொடுத்த நெஞ்சை அறுத்தெறிவேன் என்று போர்களம் சென்று அங்கே பிணங்களின் மத்தியில் உறுப்புகள் சிதைந்த நிலையில் புண்பட்டுக் கிடக்கின்ற வீரமகனைக் கண்டு ''ஈன்ற பொழுதின் பெரிதும் மகிழ்ந்தாள்'' என்று புறநானூறு கூறுகின்றது.

காதல், வீரம், கற்பு, விருந்து, வீரமக்கள் என்ற பண்பாட்டுடன் வாழ்வியலை மேற்கொண்ட மக்களிடையே அடுத்ததாக கல்வி என்ற ஓர் அம்சம் மிக நுண்ணியதாகக் கவனிக்கப்பட்டது.

'அறிவுடையோனாறு அரசும் செல்லும்' எனவே 'பிற்றைநிலை முனியாதே கற்றல் நன்று' என்று புறநானூறு விளக்கிச் சென்றுள்ளது. இந்தக் கல்வியின் சிறப்பு நோக்கி ஒருவன் தன் வாழ்நாளில் சாகும் வரை கல்வியைத் தொடர வேண்டும் என்று வள்ளுவம் விளக்கிச் சென்றுள்ளது. இவற்றையெல்லாம் பின்னர் நன்றாக விளங்கிக்கொள்வோம்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்', 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று உழவின் பெருமை பாராட்டப் படுகின்றது. இந்த உழவுத் தொழில் மிகச்சிறப்பம்சம் வாய்ந்த ஒன்றாக கருதப்பட்டது. 'வேளாண் மாந்தார்க்கு உழுதூண்' என்று தொல்காப்பியம் விளக்கி நிற்கின்றது. உழவு என்பது உலகமாகிய தேரைத் தாங்கிவரும் அச்சாணி என்று திருக்குறள் விளக்குகிறது 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'.

இங்கனமாக எமது முன்னோர்கள் வாழ்க்கை எளிமையும், மேன்மையும் உடையதாய் பொருள் ஈட்டி இன்பம் அனுபவிப்பதாய் பிறருக்கு உபகாரம் செய்வதனை மேற்கொள்ளுமாறு அமைத்து இருப்பதாக பேராசிரியர் எஸ் வையாபுரி பிள்ளை அவர்கள் தமிழர் பண்பாட்டு இயலில் விளக்கியுள்ளார். ●

## நம்பிக்கை மூலை :

அந்தத் தீவில்தான் மகிழ்ச்சி, சோகம், அழகு, செல்வம் ஆகிய உணர்வுகள் குடியிருந்தன. ஒருநாள், இந்தத் தீவு மூழ்கிவிடும் என்று கருதி, ஒவ்வோர் உணர்வாக படகு செய்து கொண்டு புறப்பட்டன. அன்புக்கு மட்டும் படகு இல்லை.

''செல்வமே! என்னை ஏற்றிக் கொள்வாயா?'' அன்பு கேட்டது. ''என் படகு நிறைய தங்கமும் வைரமும் இருக்கிறது. உனக்கு இடமில்லை'' செல்வம் சென்றது. ''அழகே! என்னை ஏற்றிக் கொள்வாயா?'' ''நீ ஈரமாய் இருக்கிறாய். என் படகின் அழகு போய்விடும்''. அழகு சென்றது. ''மகிழ்ச்சியே என்னை ஏற்றிக்கொள்வாயா?'' மகிழ்ச்சியின் காதுகளில் அந்தக் குரல் விழவில்லை. ஒரு படகு அன்புக்கு அருகில் வந்து நின்றது. ''ஏறிக்கொள்'' ஒரு முதிர்ந்த குரல் சொன்னது. கரையோரம் இறங்கிக் கொண்டபோது அன்பு கேட்டது ''யார் நீங்கள்''.

பதில் வந்தது. ''நான்தான் காலம்!'' அன்பின் முக்கியத்துவத்தை காலம்தான் காட்டும்.

# நெல்லி மர பள்ளிக்கூடம்

அந்தப் [illegible] காலம் [illegible]

இவனது அம்மா அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்ததாகவும், இவனது மாமா குஞ்சியப்புமார் எல்லாம் அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்ததாகவும் இவன் அறிந்திருந்தான்.

மதுர மரங்கள் சூழப்பெற்ற வயல் வெளித் தாமரைக் குளத்தைத் தாண்டி வரம்புனால் நடந்து ஒரு மண் ஒழுங்கையால் ஏறி இவன் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு போயிருக்கிறான்.

பெரிய தாட்டான் குரங்குகள் வாகை மரங்களில் தாவுகின்ற குழைக்கடைச் சந்தியால் திரும்பி கேணியடியால் செல்லும் பிறிதொரு பாதையாலும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இவன் போயிருக்கிறான்.

சுற்றிவர மாமரங்கள் சூழப்பெற்ற கிடுகால் வேயப்பெற்ற இரண்டு மடுவங்கள் கொண்டது தான் அந்தப் பள்ளிக்கூடம்.

இவனது அப்பு இவனைத் தோழில் உட்கார வைத்து ஒரு சரஸ்வதி பூசைக்கு மறுதினம் அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தது இவனுக்கு ஞாபகம்.

கந்தசாமி, செல்லம், சபாரத்தினம், சந்தியாப்பிள்ளை பூமணி, கோயிலம்மா, ராசலிங்கம், சின்னான் என்கின்ற கதிரவேலு ஆகியோருக்கு ஏடு திறந்ததும் அதே நாள்தான்.

தொய்வுக்கார மீனாட்சியம்டா என்கின்ற ரீச்சர் தான் இவனுக்கு ஆனா, ஆவன்னா, சொல்லிக் கொடுத்த முதல் ரீச்சர்.

பள்ளிக்கூட வாயிலில் நெடுத்து வளர்ந்திருந்த சர்க்கரை நெல்லி மரத்தின் கீழ் வட்டமாக இருந்து 'அறஞ் செய விரும்பு' என்று கத்திக் கத்தி ஆத்திசூடி வரிகளைப் படித்ததும் இவனுக்கு நினைவிருந்தது.

வேறு பாடசாலை மாணவர்கள் 'உமா வாசகம்' படிக்க இவனும் நெல்லி மரப்பள்ளிக்கூட மாணவர்களும் பாலபாடம், பாலபோதினி படித்ததும் இவனுக்கு ஞாபகத்திலிருக்கிறது.

மிக நோஞ்சானாக இருந்த இவனை நாலாம் வகுப்பு காசிநாதன் 'கடுகர்' என்று செல்லமாக கூப்பிட்டதும் இவனுக்கு நினைவிருக்கிறது.

முரடான காசிநாதன் பின் நாட்களில் 'சண்டியன் காசி'யாகியதும் இவனது நினைவிலில்லாமலில்லை.

நெல்லிமரப் பள்ளிக்கூடத்தில் இவன் படித்த காலத்தில் பெரிய சூரியகிரகணம் ஒன்று வந்ததும் இவனுக்கு நினைவிருக்கிறது.

பொன்னையா வாத்தியார் கண்ணாடி ஒன்றில் கரும்புகை பிடித்து அதற்குள்ளால் மாணவர்களைச் சூரியன் பார்க்க வைத்ததும் இவன் நினைவில் உண்டு.

பொன்னையா வாத்தியார் கரும்பலகையில் கீறும் பூனைக்குட்டிகளின் படமும் இவனுக்கு ஞாபகமிருக்கிறது.

பொன்னையா வாத்தியாரின் மோட்டார் சைக்கிள், அச்சைக்கிளின் பின்புறமுள்ள மருந்துகள் உள்ள பெட்டி எல்லாம் அவனது ஞாபகத்திலுண்டு.

பொன்னையா வாத்தியார் ஒரு முறிவு நெரிவு வைத்தியரும், விசகடி வைத்தியரும் கூட.

நெல்லி மரப்பள்ளிக்கூடத்தின் பொறுப்பாளராக - பொறுப்பாளர் போல - அவர் இருந்தாலும் தலைமை ஆசிரியர் பொறுப்பு மீனாட்சியம்மா ரீச்சருக்குத்தான்.

இவன் முதலாம் வகுப்பில் படித்த காலத்தில்தான் தாமரைக் குளத்தடியில் நன்னியரின் மகன் செல்லையன் கண்டங்கருவாலை பாம்பு கடித்து மரணித்துப் போனான்.

நந்தினி சேவியர்

பொன்னையா வாத்தியாரின் விசகடி வைத்தியம் சரிவராமல் நீலம் பரிந்து சின்னானின் அண்ணன் செத்துப்போனான்.

சரஸ்வதி பூசைக்கு பூ பிடுங்குவதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும் இவனும் இவனைச் சேர்ந்தவர் களும்.... பல நாட்கள் தாமரைக் குளத்தடிக்கு போகாதிருந்ததும் இவனுக்கு நினைவிலிருந்தது.

சபாரத்தினம் தண்ணீர் அள்ளி வைக்கும் கரள் பிடித்த வாளியும், பால் பேணியும், அது வைக்கப்படும் குச்சுச் சுவரும் இவனுக்கு நினைவிலேயே இருந்தது.

பூமணி தண்ணிரள்ளி வார்க்க காசியும், கந்தசாமியும், இவனும் கைமண்டையில் தண்ணீர் குடித்தமையும் ஞாபகத்திலேயே இருந்தது.

இவன் அரிவரி முடித்து வகுப்பேறி முதலாம் வகுப்புக்கு வந்த சிலநாட்களின் பின்பு நெல்லிமரப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு புது வாத்தியாரும் ஆங்கிலம் படிப்பிக்கவென பெரிய தோடு போட்ட ரீச்சரும் வந்திருந்தனர்.

காசிநாதன் புதுவாத்தியாருக்கு 'முட்டுக்காய் தலைவர்' என்று பட்டப்பெயர் வைத்து கதைத்ததுவும் இவனுக்கு ஞாபகம்.

குண்டான அந்த வாத்தியார் தடிப்பான ஒரு மூக்குக்கண்ணாடி போட்டிருப்பார். காது நிறைய மயிர் சடைத்திருக்கும் அவருக்கு உண்மையிலேயே பெரிய தலை.

பல தடவைகளில் அந்த வாத்தியார் மாணவர்களை பிரம்பால் விளாசியதை இவன் அறிவான்.

பொன்னையா வாத்தியாரின் சாந்த குணத்திற்கு நேர் விரோதம் முட்டுக்காய் தலை பஞ்சாட்சர வாத்தியார்.

நெல்லி மரப் பள்ளிக்கூடத்திற்கு மேற்கேயுள்ள வேதக் கோயில் கிராமத்தின் மாணவர்களில் பலர் இந்தப் பள்ளிக்கூடத்திலேயே படித்தவர்கள்.

ஐந்தாம் வகுப்பு வரையேயுள்ள இந்தப் பள்ளிக்கூடத்தில் மிகக் குறைவான மாணவர் உள்ள வகுப்பு ஐந்தாம் வகுப்புத்தான் அதில் ஐந்து பேரே படித்தனர்.

நெல்லி மரப் பள்ளிக்கூடத்தை உருவாக்கியவர் ஒரு சைவப் பெரியார் என்பதை இவன் அப்போது அறிந்திருக்கவில்லை. இவனது அம்மா இராமு வாத்தியார் என்கிற ஒருவரைப்பற்றி அடிக்கடி கூறியிருப்பதும் இவனுக்குத் தெரியும்.

இவனது அப்பு வேதக் கோயில் கிராமத்திற்கு பெண் எடுக்க வந்தமையால் வேதக் கோயில் கிராமத்தவரானவர்.

இவனது அம்மாவும், மாமாவும் குஞ்சியப்புமாரும் நெல்லி மரப்பள்ளிக்கூடத்தில் தான் படித்தார்கள் என இவன் அறிந்திருந்தான். இவனது மாமாவும், சின்னக்குஞ்சியப்புவும் மூன்றாம் வகுப்பில் மூன்று வருடங்கள் படித்து பின் படிப்பை விட்டதுவும் இவனது அம்மா மூலம் இவன் அறிந்தேயிருந்தான்.

இவனது மாமாவுடன் சேர்ந்து ஆரம்ப நாட்களில் தாமரைக்குளத்தில் துண்டில் போட்டு கெழுத்தி மீன் பிடித்தமையும், நுளம்புக்காக மதுரஸ்காய்கள் பொறுக்கியமையும், செல்லையன் செத்த பிறகு தாமரைக்குளத்துப் பாதையை மறந்தமையும் கூட இவனுக்கு நினைவிலிருந்தது.

பள்ளிக்கூடம் விட்ட பிறகு வயல் வெளியில் சின்னான் கதிரவேலுவும் சபாரத்தினமும் மல்யுத்தம் புரியும்போது கந்தசாமியே மத்தியஸ்தம் செய்வதும் கந்தசாமி சின்னானின் பக்கச் சார்பாக நிற்பதுவும், தான் சபாவின் பக்கம் நிற்பதுவும் இவனக்கு ஞாபகம்.

ஒரு தடவை செல்லம் தன் கல்லுச் சிலேற்றால் இவனை அடித்தபோது சபா தான் இவனுக்காக செல்லத்தின் சிலேற்றை வாங்கி

**நம்பிக்கை மூலை :**

சிங்கமும் சிறுத்தையும் ஒரே இடத்தில் நீர் பருக வந்தன. யார் முதலில் நீர் பருக வேண்டும் என்பதில் இருவருக்கும் வாக்குவாதம். விட்டுக்கொடுப்பதைவிட யுத்தமிட்டுச் செத்துப் போகலாம் என்று முடிவு செய்து இரு விலங்குகளும் மோதிக் கொள்ளத் தொடங்கின.

மல்லாந்து விழுந்த சிறுத்தை, அங்கே பார் என்று அலறியது. சிங்கமும் சண்டையை நிறுத்தியது. தலையை உயர்த்தியது. அங்கே வல்லூறுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வீணாக சண்டையிட்டுக் கொண்டதால் தங்கள் வீழ்ச்சியை விருந்தாக்கிக் கொள்ள பலரும் காத்திருப்பது தெரிந்தது. சிங்கத்திற்கும், சிறுத்தைக்கும் ஞானம் பிறந்தது.

வீண் சண்டைகள் எதற்கு? வேலைகள் உள்ளன நமக்கு!

உடைத்தமையையும் இதற்காக இவனது இவனது அப்பு செல்லத்திற்கு ஒரு புதுச் சிலேற் வாங்கிக் கொடுத்தமையும் இவனுக்க ஞாபகம்.

சின்னச் சின்னச் சண்டைகளில் சபாவும், காசியும் இவனுக்கு துணையாக இருந்தமையை இவன் மறந்திடவில்லை. ஆனால் முட்டுக்காய் தலையர் இவனை அடித்தபோது சபாவும், காசியும், கந்தசாமியும், செல்லமும், துணைக்கு வரவே முடியாமல், போனமை இவனுக்கு ஞாபகத்திலிருந்தது.

“வாத்தியார் இவன் கிணத்துக் கட்டிலை ஏறி துலாக் கயித்தைப் பிடிச்சவன்”

ஜீவ காருண்யம் தான் இந்த விசயத்தை பஞ்சாட்சர வாத்தியாருக்கு சொல்லி வைத்தான்.

இரண்டாம் வகுப்பில் படிக்கும் கடுகரென்ற நோஞ்சானுக்கு அன்று விழுந்த அந்த அடிகள்.

இரண்டு பிரம்புகள் முறிந்து தும்பு தும்பாக.......

அடுத்து வந்த நாட்களில் வேதக் கோவில் கிராமத்து மாணவர்கள் எவரும் பள்ளிக்கூடம் போகவில்லை....

கிராமமே உறுதியாக இருந்தது.

பொன்னையா வாத்தியாரின் மோட்டார் சைக்கிள் பல தடவைகள் வேதக்கோவில் கிராமத்திற்கு வந்து போனதைப் பலர் பார்த்தார்கள்.

ஒரு தடவை தொய்வுக்காரர் மீனாட்சியம்மா ரீச்சரும்.... அவரது கணவரும் வந்து போனார்கள்.

பஞ்சாட்சர வாத்தியாருக்கு மாற்றம் கிடைத்து கிழக்கு ஊர் போனதாக ஒரு வதந்தியும்.... சிலகாலம் கிராமத்தில் உலாவியது. யாரும் அதை காது கொடுத்து கேட்கவேயில்லை.

வேதக் கோவில் கிராமத்தில் திடீரென பள்ளிக் கூடம் ஒன்று உருவாகியது. தென்னங்குற்றிகளில், பலகை அடிக்கப்பட்ட வாங்கு மேசைகளில் மாணவர்கள் படிக்கத் தொடங்கினார்கள்.

காசிநாதன் சண்டியனாக அறியப்பட்டது போலல்லாமல் சின்னான் கதிரவேலுவின் பெயர் வேதக் கோவில் கிராமத்திற்குமப்பால் பெருமையோடு பேசப்படும் வண்ணம் அவன் இறந்து போனான்.

நெல்லிமரப் பள்ளிக்கூடம் சில காலம் நெசவுசாலையாகவும்.... ஒரு தற்காலிக அச்சுக்கூடமாகவும் இயங்கி பின்னர் வெற்று நிலமாகி விட்டதாக இவன் அறிந்து கொண்டான்.

இவனது நண்பர்கள் சபா, ராசலிங்கம்.... சந்தியாம்பிள்ளை காசி, சின்னான் கதிரவேலு ஆகியவர்களைப் போல...... இவனது நினைவுகளில் இன்னும் பொன்னையா வாத்தியார், மீனாட்சியம்மா... ரீச்சர். பஞ்சாட்சர வாத்தியார்...... அதோடு சிதைந்து போன.... நெல்லிமலைப் பள்ளிக்கூடமும். ●

## எல்லை மீறி செல்லாதே

* பெண்ணுக்கு இழுக்கு தீயநடத்தை. மனிதனுக்கு இழுக்கு கஞ்சத்தனம். தீயகுணங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் இழுக்கைத் தரும்.
* கையில் புண் இல்லையென்றால் ஒருவன் நஞ்சையும் கையில் எடுக்கலாம். நஞ்சு அவனைப் பாதிப்பதில்லை. அதுபோல், தீங்கு செய்யாத ஒருவனுக்கு தீங்கு நேருவதில்லை.
* தர்ப்பைப் புல்லைத் தவறான முறையில் பற்றி இழுத்தால் கையை அறுத்து விடுகிறது. அதுபோல தீய நெறிகளுக்கு துறவைப் பயன்படுத்துபவனும் வேதனை அடைவான்.
* இரும்பிலிருந்து உண்டாகும் துரு அந்த இரும்பையே தின்று விடுகிறது. அதுபோல எல்லைமீறி நடப்பவனை அவன் செய்யும் தீச்செயலே தீயநிலைக்குத் தள்ளிவிடும்.
* தீமை என்பது உனக்குள்ளிருந்தே தோன்றி, பாவம் செய்யும்படித் தூண்டி, உனக்கே தீமை செய்கின்றது. வைரமானது மற்ற மணிகளை உடைத்து விடுவதைப் போல அது மனிதனைக் கெடுத்து விடுகின்றது.
* நல்லதை விரைவாகச் செய்வதன் மூலம் ஒருவரது மனம் தீமையை நோக்கிச் செல்லாது. காலம் தாழ்த்தினால் அவரது மனம் தீமையில் திளைத்துவிடும்.
* ஆகாயத்தில் சென்றாலும், நடுக்கடலில் சென்றாலும், மலை மீது நடந்தாலும், எந்த முடுக்கில் சென்றாலும், தீய செயலை செய்தவர் தப்பவே முடியாது.
* தீயனவற்றை எளிதில் அடக்க முடியாது. பேராசையும், தீய ஒழுக்கமும் உன்னைத் தீராத் துயரத்திற்கு இழுத்துச் செல்ல இடம் கொடாதே.

புத்தர்

---

உண்மையான தமிழ் இசை திருமுறை இராசராச சோழன் காலத்தில் பண்ணிசையுடன் பாடப்பட்டு வந்தது. 6ஆம் நூற்றாண்டில் இருந்து 21ஆம் நூற்றாண்டு வரை இது அழியாத ஒரு பொக்கிஷமாக காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்த பண்ணிசையை சைவ திருக்கோவிலில் முறையாக ஓதுவாரால் ஓதப்பட்டால் பல நன்மைகள் உண்டாகும் வாய்ப்புண்டு. இங்குள்ள மக்கள் பண்ணிசையை கோவில்களில் பாட வைக்க வேண்டும். தேவாரம், திருவாசகம், திருப்புகழ், இவற்றை மதிக்கத்தவறிய சைவ தமிழன் கோவில் கட்டி என்ன? கும்பாபிஷேகம் செய்து என்ன? எந்த பலனும் வராது.



# ஆவணி மாதப்பலன் (ஆகஸ்ட் 15 - செப்டம்பர் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** புதுமை விரும்பிகளே! உங்கள் ராசிநாதனை குரு பார்ப்பதால் தன்னம்பிக்கை துளிர் விடும். கனவுத்தொல்லை நீங்கும். பிள்ளைகளின் வருங்கால நன்மைக்காக சில திட்டங்கள் தீட்டுவீர்கள். திருமணத்தடை விலகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களின் அன்புத்தொல்லை கூடும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. வேலையாட்களை விட்டுப் பிடிப்பீர்கள். உத்யோகத்தில் உயரதிகாரிகள் உதவுவார்கள். புது வாய்ப்புகள் வரும். புது முயற்சிகளில் வெற்றி பெறும் மாதமிது.

**இடபம்** கற்பனைவாதிகளே! வெள்ளியும், புதனும் வலுவாக இருப்பதால் வீட்டில் நல்லது நடக்கும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். விவாதங்கள் வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். செலவினங்கள் அதிகரிக்கும். அரசு விவகாரங்கள் சுமுகமாக முடியும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் தேடி வரும். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். ஓய்வெடுக்க இயலாத அளவிற்கு வேலைச்சுமை அதிகரிக்கும் மாதமிது.

**மிதுனம்** தோல்வி கண்டு துவளாதவர்களே! தைரிய வீட்டில் பல கிரகங்கள் நிற்பதால் மனோ பலம் கூடும். சவாலான காரியங்களில் வெற்றி அடைவீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். உறவுகள் வலிய வந்து பேசும். பழைய கடனிலிருந்து மீள்வதற்கு வழி கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். சகோதர வகையில் செலவுகள், அலைச்சல் இருக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அரசால் லாபம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் மதிப்பு கூடும். செல்வாக்கு கூடும் மாதமிது.

**கடகம்** காலத்தை உணர்பவர்களே! தன வீட்டில் முக்கிய கிரகங்கள் நிற்பதால் பணவரவு ஒருபக்கம் திருப்திகரமாக இருந்தாலும் ராகு-கேதுவால் வீண் செலவுகளும், அலைச்சலும் இருக்கும். தலைவலி, வயிற்றுக் கோளாறு விலகும். சிலர் உங்களை கோபப்படும்படி விமர்சிப்பார்கள். பேச்சில் நிதானம் தேவை. மனைவிக்கு மருத்துவச் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். தேங்கிய சரக்கு விற்கும். உத்யோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். கௌரவப் பதவி கிடைக்கும். தடைகள் உடைபடும் மாதமிது.

**சிம்மம்** முடிவை மாற்றிக் கொள்ளாதவர்களே! அங்காரகனின் ஆதிக்கம் அதிகரித்திருப்பதால் அடி மனதில் இருக்கும் ஆசைகள் நிறைவேறும். சொத்துப் பிரச்சினை தீரும். பெற்றோருடன் இருந்த மனக்கசப்புகள் தீரும். ராசிநாதனுடன் பாபகிரகங்கள் சேர்ந்திருப்பதால் உடல்நிலை பாதிக்கும். அவசர முடிவுகள் முன் கோபத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகள் குறையும். புது முயற்சிகள் வெற்றி அடையும். உத்யோகத்தில் அதிகாரிகளை அனுசரித்துப் போவது நல்லது. நிதானமாக செயல்பட்டு வெற்றியடையும் மாதமிது.

**கன்னி** கனிவாகப் பேசுபவர்களே! இந்த மாதத்தில் வீண் செலவுகளை குறைக்கப் பாருங்கள். மாதப் பிற்பகுதியில் வெள்ளியின் போக்கு நன்றாக இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். திடீர்ப் பயணங்கள் உண்டு. பிள்ளைகளால் கொஞ்சம் அலைச்சலும், செலவும் உண்டு. வியாபாரத்தில் விவாதங்களைத் தவிர்க்கப் பாருங்கள். வேலையாட்களை அனுசரித்துப் போவது நல்லது. உத்யோகத்தில் உங்களை எதிர்த்தவர்கள் மாற்றப்படுவார்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். சற்றே நிதானம் தேவைப்படும் மாதமிது.

**துலாம்** தூய்மையானவர்களே! தனத்தில் நிற்கும் குரு உங்களை தளர விடாமல் அழைத்துச் செல்வார். சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். லாப வீட்டில் பல கிரகங்கள் நிற்பதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். மூத்த சகோதரியின் உடல்நிலை பாதிக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. பங்குதாரர்கள் உதவுவார்கள். உத்யோகத்தில் மூத்த அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். எங்கும், எதிலும் முதலிடம் பிடிக்கும் மாதமிது.


**விருச்சிகம்** தன்மானம் மிக்கவர்களே! சூரியன் வலுவாக நிற்பதால் உங்களின் திறமைகள் வெளிப்படும். பழைய திட்டங்கள் இப்போது நிறைவேறும். உறவினர்களிடையே இருந்த உரசல் விலகும். வேலை கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் வெற்றி அடையும். அரசால் அனுகூலம் உண்டு. புதுத் தொழில் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் உங்களுக்கு புது பொறுப்புகள் கிடைக்கும். திடீர் முன்னேற்றம் தரும் மாதமிது.

**தனுசு** தளராத தன்னம்பிக்கை உள்ளவர்களே! அங்காரகன் அதிகார வீட்டில் அமர்ந்திருப்பதால் எதிர்ப்புகள் அகலும். சொத்துப் பிரச்சினை தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். குழந்தை பாக்கியம் உண்டு. பழைய பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்யலாம். வேலையாட்கள் நல்ல விதத்தில் ஒத்துழைப்பார்கள். உத்யோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். புது வேலை கிடைக்கும். அதிரடி முன்னேற்றம் தரும் மாதமிது.

**மகரம்** மகத்தான காரியங்களை செய்பவர்களே! பாப கிரகங்களின் போக்கு சரியில்லாததால் முன்கோபம், வாக்குவாதத்தை தவிர்க்கப் பாருங்கள். அவசர முடிவுகள் வேண்டாம். குரு சாதகமாக இருப்பதால் சமயோஜித புத்தியாலும், தன்னம்பிக்கையாலும் வெற்றி பெறுவீர்கள். வேற்று மதத்தினர் உதவுவார்கள். பிள்ளைகளின் உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். வியாபாரத்தில் போட்டிகள் கடுமையாக இருக்கும். உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். நிதானம் தேவைப்படும் மாதமிது.

**கும்பம்** நீதிமான்களே! சூரியன் வலுவாக நிற்பதால் தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. மனைவியுடன் வாக்குவாதம் வரும். மனைவிக்கு மருத்துவச் செலவும் உண்டு. வாகன, வீடு பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். பங்குதாரர்களை அனுசரிப்பது நல்லது. உத்யோகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். பிற்பகுதியில் முன்னேறும் மாதமிது.

**மீனம்** சிந்தனையாளர்களே! செவ்வாயுடன் குருவும் சாதகமாக இருப்பதால் எதிலும் வெற்றி கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். லாட்டரி, ஷேர் பணம் தரும். சகோதரர் உதவுவார். நல்ல வேலை கிடைக்கும். திருமணம் முடியும். வியாபாரம் சூடு பிடிக்கும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பிரபலங்கள் உதவுவார்கள். உத்யோகத்தில் உயர்வு கிட்டும். அதிரடி முன்னேற்றம் தரும் மாதமிது.


Tharani
Jewellery
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777


தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐ.இ)
Tamil Schools Sports Association (UK)
16வது 16th கோடை விளையாட்டு விழா
Tamil Schools sports festival
Cricket Football Netball Volleyball Athletics
Saturday 25th August 2007
8.00am - 8.00pm
at
Warren Farm Sports Centre
Windmill Lane, Southall, Middlesex UB2 4NE
ADMISSION
Adult £4.00
Children £2.00
Car Park £4.00
Our Joint Sponsors
Global Exchange Ltd
54 Ealing Road, Wembley
Middx, HA0 4TQ
Tel: 020 8902 3366
1081 Garratt Lane, Tooting
London SW17 OLN
Tel: 020 8696 1022
Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
5 Plaza Parade, 29-33 Ealing Road
Wembley, Middx HA0 4YA
Tel: 020 8903 0909
For further information
07932 635395
07886 966231
07771 648257
07958 105266

தரிசனம்

தரணியெங்கும் தமிழொளி பரவிட ...

உலகத் தமிழரின் உணர்வுகளை
ஒளிப்படுத்த ஒரு தொலைக்காட்சி

Tharisanam TV : Europe
TUNING PARAMETERS
Satellite Name : Eutelsat HotBird (13oE)
Frequency : 11.470 GHz
Polarization: Vertical
Symbol Rate : 27.500
FEC: 5/6
www.tharisanam.tv

Mathuram TV is a new tamil television channel for the Europe!
Information can be found on
www.mathuramtv.tv

Special Introduction Offer

£99*

*Conditions apply

Further details: 020 8920 2111

தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா..




72 Chase Side, Southgate, London N14 5PH Fax: 020 8886 7508


# மனதை மயக்கிய பண்ணிசை நிகழ்ச்சி

## தேவலோக குருக்கள்

மனம், வாக்கு, காயம், என்கின்ற மூன்று நிலைகளும் முழுதாய் இறைவனிடம் இசைந்திட வழிசமைத்து நிற்பது பண்ணோடு அமைகின்ற தேவார பண்ணிசைதான் என்பதை அப்பழுக்கில்லாமல் நிரூபித்து காட்டியவர்கள். பண்ணிசை வல்லுனர்கள் தேவார இசை மாமணிகள். தமிழ்நாடு பழனி ஓதுவார் மூர்த்திகள். திரு. சண்முகசுந்தரதேசிகர், திரு. வெங்கடேசன் இருவருமாவர். பொதுவாகவே ''திருமுறைகள்'' வரையறுக்கப்பட்ட அருந்தமிழ் சொற்களுடன், மரபுநிலை கவித்திறனுடன், அருளாளர்களால் அருளப்பட்டது. இதிலே சொல் சுத்தம் மிகவும் முக்கியமானதாகும். ஒலிகளின் மூலம் இறைவன் அருள் மெருகூட்டப்படுகின்றன. ஒரு ஆலயத்தினுள்ளே எத்தனை விதமான ஒலிகள் அமைகின்றன. மந்திர ஒலி, மணி ஒலி, சங்கொலி, தவில்நாத ஒலி, பண்ணிசை ஒலி என அனைத்துமே ஒவ்வொரு விதமான நாதத்துடன் இறைவனோடு இணைகின்றன. ஐக்கியப்படுகின்றன. இதனால் இசையில் இறையைக் காண்கின்றோம். அந்த நிலைதான் சென்ற 22.07.2007 ஞாயிறு மாலை இலண்டன் சிவன் ஆலய வைபவ மண்டபத்தில் நடைபெற்ற பண்ணிசை விழாவில் உணர முடிந்தது. பண்ணிசை தொடங்கிய நேரத்தில் இருந்து நிறைவு பெறும் வரையான நேரம் வரை ஒரே சீரான வேகம், பிசிறு இல்லாத சுத்தமான வார்த்தை அழுத்தம். கம்பீரமான வெண்கலக் குரல் என எல்லாவகையிலும் மிகவும் நேர்த்தியாக பண்ணிசையை வழங்கினார்கள். இடையிடையே விருத்தங்கள் ராக ஆலாபனையுடன் அலங்கரித்து, பின்னர், தேவாரம், திருப்புகழ் என்பன இசையோடு தவழவிடும்போது மெய்சிலிர்க்கும் அனுபவமாய் இருந்தது. வருகின்ற வார்த்தைகளை வயலின் எனும் வாத்தியத்தினுள் வாங்கி இதமாய் இசிய விட்ட வயலின்மேதை இனுவில் ராதாகிருஷ்ணன். தாளத்தை தப்பாது தருகின்ற மிருதங்கத்தை மிருதுவாக கையாண்ட மிருதங்க வித்துவான் R.N. பிரகாஷ். மோகிக்க வைக்கும் மோர்ச்சிங் இசையை கையாண்ட திரு சிதம்பரநாதன், கடம் இசைத்து கைதேர்ந்த லயம் தந்த திரு. அருள்ஞானபிரசாந் என அனைத்து அணி செய் கலைஞர்களும், அற்புதமாக பண்ணிசை நிகழ்விற்கு பலம் சேர்த்தார்கள். விழாவின் நிகழ்வை வரவேற்புரையுடன் DR சோமசேகரம் ஆரம்பித்து வைக்க அழகாக அறிமுக உரையும், தொகுப்பு உரையும் வி. கணேசமூர்த்தி வழங்க நன்றியுரையை T.அருள்தாஸ் வழங்கினார். இப்படியொரு ஓதுவார் மூர்த்திகள் பண்ணிசை பழனியில் சிறப்புற நடைபெறுகின்றது என்கின்ற தகவலை முதலில் தந்த தமிழர் தகவல் சிவானந்த சோதியும் அவரின் தீர்க்க தரிசனமும் பாராட்டப்பட வேண்டியவை. மனதை மயக்கிய பண்ணிசை நிகழ்வு இதயங்களின் மெய் வார்த்தை.

## கே.பி. வித்யாதரன் அவர்களின்

# சனிப்பெயர்ச்சி பலன்கள்



### மேஷம்

வெள்ளை மனசுக்காரரான நீங்கள், உண்மையே பேசி எல்லோரையும் ஆச்சர்யப்படுத்துவீர்கள். கலை நய சிந்தனையும், கடின உழைப்பால் எதையும் சாதித்துக் காட்டும் திறனும் கொண்டவர்கள் நீங்கள் தான். இதுவரை உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்துக்கொண்டு பலவகைகளில் இன்னல்களை தந்துக்கொண்டிருந்த சனிபகவான் இப்பொழுது 5ஆம் வீட்டிற்கு அடியெடுத்து வைப்பதால் இனி எந்த வேலையையும் விரைந்து முடிப்பீர்கள். முகத்தில் தெளிவு பிறக்கும். மன வலிமை கூடும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். இங்கிதமாகப் பேசி கடினமான வேலைகளைக்கூட முடிப்பீர்கள். பிள்ளைகளின் வருங்காலத்தை மனதிற் கொண்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். அவர்களின் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். 2008 ஏப்ரல் மாதத்திலிருந்து பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். பொண்ணுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். சிறப்பாக கல்யாணத்தை முடிப்பீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். அடிக்கடி உடல்நலத்திற்காக அதிகம் செலவு செய்ய நேரிட்டதே உடல் நிலையில் அக்கறைக் காட்டுங்கள். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த மோதல்போக்கு மறையும். பூர்வீகச் சொத்து விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். வெளிநாட்டிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் உதவி கிடைக்கும். அக்கம் பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். வியாபாரத்தில் போட்டிகளை தகர்த்தெறிவீர்கள். அதிரடியான முயற்சிகளால் லாபம் உண்டு. வேலையாட்களை விட்டுப் பிடிப்பது நல்லது. உத்யோகத்தில் மதிப்பு மரியாதை கூடும். வேலைச்சுமை அதிகரித்தாலும் விரைந்து முடிப்பீர்கள். கன்னிப்பெண்கள் சிந்தித்து செயல்படுவார்கள். காதல் கைகூடும். கல்யாணம் சிறப்பாக முடியும். கலைஞர்களின் திறமைகள் வெளிப்படும்.




ஆக இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எல்லாவகையிலும் நல்ல பலன்களையே அள்ளித் தருவார்.

### ரிஷபம்

பொதுவுடைமைச் சிந்தனையுள்ள நீங்கள் மற்றவர்களிடம் மனம் நோகாமல் பேசி பழகுவீர்கள். சுயகட்டுபாடு உள்ள நீங்கள், எவர் தடுத்தும் கொள்கைகளை மாற்றிக்கொள்ளமாட்டீர்கள். உங்கள் ராசிக்கு 3ஆவது வீட்டில் அமர்ந்து பலவகையில் முன்னேற்றங்களை கொடுத்து வந்த சனி பகவான் இப்போது சுகவீடான 4ஆவது வீட்டுக்குள் நுழைகிறார். 4ஆவது வீடென்றால் அர்த்தாஷ்டமச்சனியாச்சே என்று பயப்படாதீர்கள். உங்கள் ராசிக்கு பிரபல யோகாதிபதியே சனிபகவான் தான். ஆகையால் உங்களுக்கு ஓரளவு நல்லதையே செய்வார். பழைய கடன் பிரச்சனை தீரும். பூர்வீகச் சொத்தை விற்று, வேறிடத்தில் சொத்து வாங்குவீர்கள். சகோதர, சகோதரிகளிடையே இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். சனி உங்கள் ராசியைப் பார்ப்பதால் கணவன் - மனைவிக்குள் சின்னச் சின்ன வாக்குவாதங்களும், மனஸ்தாபங்களும் வந்து போகும். ஒருவரையொருவர் அனுசரித்துப் போவது நல்லது. வயிற்றுவலி, கால்வலி வந்து செல்லும். பிள்ளைகளால் இருந்து வந்த தொல்லைகள் நீங்கும். உங்கள் மகளுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். தாயாரின் உடல்நிலை பாதிக்கும். வாகனத்தில் செல்லும் போது கொஞ்சம் கவனம் தேவை. புது வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. திடீர் பயணங்கள் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் அடிக்கடி உதவி கேட்டு வருவார்கள். சங்கம், இயக்கம் இவற்றில் கௌரவப் பதவிகள் தேடி வரும். குலதெய்வப் பிரார்த்தனைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் தொய்வு நிலை மாறும். பழைய பாக்கிகளை வசூலிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வேலையாட்களை அரவணைத்துச் செல்லுங்கள். உணவு, மூலிகை வகைகளால் ஆதாயம் உண்டு. உத்யோகத்தில் தனிநபர் விமர்சனத்தை தவிர்க்கவும். புதுவேலை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. கன்னிப் பெண்கள் பெற்றோரை கலந்தாலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்க வேண்டாம். மாணவ - மாணவிகள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைஞர்கள் சிந்தித்து செயல்படுவார்கள்.




இந்தச் சனிப் பெயர்ச்சி மாற்றம் உங்களின் நிறைக்குறைகளை அலசி ஆராய்வதுடன், அனுபவ அறிவையும் அள்ளித் தருவதாக அமையும்.

## மிதுனம்

மலர்ந்த முகத்துடன் வந்தாரை உபசரித்து உதவும் குணமும், எந்த ஒரு வேலையையும் முழு ஈடுபாட்டுடன் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவர்களும் நீங்கள் தான். இதுவரை உங்களை படாதபாடு படுத்தி வந்த சனி பகவான் உங்களை விட்டு முழுமையாக இப்போது விலகுகிறார். ராஜ யோகம் தரும் வீடான 3ஆம் வீட்டில் அமர்ந்து, சகல யோகங்களையும் உங்களுக்கு தரப் போகிறார். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் பெரிய சண்டை எல்லாம் வந்ததே! சில தம்பதியர்கள் சந்தேகத்தால் பிரிந்தீர்களே! அந்த அவல நிலை இனி மாறும். ஒருவரை ஒருவர் இனி புரிந்து கொள்வீர்கள். சேமித்து வைத்த பணத்தில் சொந்த வீடு வாங்குவீர்கள். பழைய கடனை அடைப்பீர்கள். பிள்ளைப் பாக்கியம் உடனே கிடைக்கும். உங்கள் மகனின் போக்கில் நல்ல மாற்றம் உண்டு. மகளுக்கு நல்ல வரன் அமையும்.




சொந்த ஊரில் மதிப்பு கூடும். உடன் பிறந்தவர்களுக்கு தக்க சமயத்தில் உதவுவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள், நண்பர்கள் இனி வலிய வந்து பேசுவார்கள். தோல் நோய் நீங்கும். புது வாகனம் வாங்குவீர்கள். வீட்டை விரிவு படுத்துவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். அயல்நாடு பயணம் சென்று வருவீர்கள். அக்கம் பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். வியாபாரத்தில் அதிரடிமாற்றங்களைச் செய்வீர்கள். அனுபவம் மிக்க நல்ல வேலையாட்களெல்லாம் வந்து சேருவார்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். உணவு, எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், மூலிகை வகைகளால் அதிக ஆதாயம் அடைவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சம்பளம் கூடும். கன்னிப் பெண்களுக்கு காதல் இனிக்கும். உயர் கல்வி பெறுவதில் இருந்த தடை நீங்கும். பெற்றோரின் ஆதரவு உண்டு. மாணவ, மாணவிகளுக்கு இனி மறதி நீங்கும். தேர்வில் அதிக மதிப்பெண்களை குவிப்பார்கள். கலைஞர்களுக்கு அரசு விருது கிடைக்கும்.

இந்த சனி மாற்றம் அதிரடியான பல மாற்றங்களை தருவதுடன், பணப்புழக்கத்தையும் அள்ளித்தருவதாக அமையும்.

## கடகம்

கலகலப்பாக பேசி சிரிப்பத்துடன், மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பீர்கள். செயற்கரிய செயல்களையும் செய்துவிட்டு சாதாரணமாக இருப்பவர்களும் நீங்கள்தான். உங்கள் ராசிக்கு வாக்கு வீட்டில் சனி அமர்ந்து உங்களை ஆளப் போகிறார். எதிலும் தெள்ளத்தெளிவாக முடிவெடுக்க முடியாமல் குழப்பிக் கொண்டிருந்த நீங்கள் இப்பொழுது உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். ஆனால் சனி பகவான் இப்போது வாக்கு வீட்டுக்கு வருவதால் கணவன் மனைவிக்குள் வாக்கு வாதம், சின்னச் சின்ன சண்டை வந்து நீங்கும். ஆடை, ஆபரணம் சேரும். பிள்ளைகள் மீது இருந்த வெறுப்புணர்வு நீங்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். மகனுக்கு நல்ல மணப்பெண் அமையும். உங்கள் மகளுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வராது என நினைத்துக் கொண்டிருந்த பணம் கைக்கு வரும். மாமியார், மாமனாருடன் அனுசரித்துப்போங்கள். சனி 11ஆவது வீட்டை பத்தாம் பார்வையால் பார்ப்பதால் மூத்த சகோதர வகையிலும், தாய்வழியிலும் கொஞ்சம் மனக் கசப்புகள் வந்து போகும். உறவினர்கள், நண்பர்களிடம் குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்வதைத் தவிர்க்கவும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை, ஆபரணங்களை இரவல் கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம். எதிர்பாராத திடீர்ப் பயணங்களும், அயல்நாட்டுப் பயணங்களும் அதிகரிக்கும். வியாபாரத்தில் முன்பைவிட இப்போது அனுபவ அறிவு அதிகம் கிடைக்கும். வேலையாட்களின் போக்கை உணர்ந்து, அதற்கேற்ப அவர்களிடம் வேலை வாங்குவீர்கள். புதுத் தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி தவறாகப் பேசியவர்களெல்லாம் உங்களின் நல்ல மனசைப் புரிந்து கொள்வார்கள். பாராட்டுவார்கள். கன்னிப் பெண்களுக்கு உடல் உபாதைகள், மன உளைச்சல்கள் நீங்கும். காதல் இனிக்கும். கல்யாணம் முடியும். மாணவ, மாணவிகள் ஒரு குறிக்கோளுடன் படிப்பீர்கள். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும்.




இந்த சனி மாற்றம் கொஞ்சம் சங்கடங்களை தந்தாலும் அடிப்படை வசதி வாய்ப்புகளை அதிகப் படுத்துவதாகவும் அமையும்.

# BEST FOOD

4வது கிளை மிக விரைவில்

## வெம்பிளியில்

உங்கள் சகல தேவைகளையும்
பூர்த்தி செய்யும் விதமாக

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 684 4677


249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

**VAANI**
தயாரிப்புகள்
எங்கள் நேரடி
விற்பனையில்



நாங்களே இறக்குமதி செய்து
நேரடியாக உங்களுக்கு தருகிறோம்.

இந்த நான்கு இடங்களைத் தவிர வேறு கிளைகள் எங்களுக்கு கிடையாது



சிறந்த புதிய சினிமா படங்களின்
Original CDக்கும் DVDக்கும்
Ayngaran
AYNGARAN
International
Ayngaran Video - Tooting
30 High Street
Collierswood
Tooting SW 19 2AB
Tel : 020 8540 1500
இப்போது
திரையரங்குகளில்
கிரீடம்
திரைப்படம்
லண்டனில் ஓடிய
திரைப்படங்களில்
டாப் 10-ல்
ஒரு படமாக
சிவாஜி திரைப்படம்
வந்துள்ளது.
Ayngaran
கிளை
Easthamலும்
உண்டு

## சிம்மம்

கொடுத்துச் சிவந்த கைகளுடைய நீங்கள், எவரிடமும் உதவி கேட்டு கை நீட்ட மாட்டீகள். பேதம் பார்க்காமல் எல்லோரிடமும் சமமாக பழகுவீர்கள். 5.8.2007 முதல் 25.9.2007 முடிய உள்ள காலத்தில் உங்கள் ராசிக்குள்ளேயே சனி அமர்ந்து உங்களை ஆளப் போகிறார். சனி இப்போது ஜன்மச் சனியாக வருகிறார். 16.11.2007 முதல் உங்கள் ராசியின் மீதும், ராசியில் அமர்ந்திருக்கும் சனி, கேது ஆகிய கிரகங்களின் மீதும் குருவின் பாக்கியப் பார்வை வீழ்வதால் தடைகள் உடைபடும். தன்னம்பிக்கை துளிர்விடும். பணத்தட்டுப்பாடு நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். எதிர்பாராத பண வரவு இனி உண்டு. கணவன் மனைவிக்குள் இணக்கமான சூழ்நிலை உண்டாகும்.



உடல் நலத்தில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அலட்சியமாக இருக்க வேண்டாம். ஜன்மச்சனி வந்திருப்பதால் உப்பு சப்பில்லாத கசப்பு, துவர்ப்பு கொண்ட பத்தியச் சாப்பாடு போல சாப்பிடுவது நல்லது. பிள்ளைகளால் மகிழ்ச்சியுண்டு. உங்கள் மகளின் கல்யாண விஷயம் குறித்து புலம்பிக் கொண்டிருந்தீர்களே! இனி நல்லபடியாக முடியும். கணவர்வழி உறவினர்களால் கொஞ்சம் அலைச்சலும், செலவும் இருக்கும். பெருந்தன்மையுடன் அவர்களுக்கு உதவுங்கள். பெரிதாக ஒரு பக்கம் உதவி செய்து விட்டு, மற்றொரு பக்கம் சொல்லிக்காட்ட வேண்டாம். இளைய சகோதரரை அனுசரித்துப் போவது நல்லது. நேர்த்திக் கடனை நிறைவேற்றுவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வியாபாரத்தில் போட்டிகளை தகர்த்தெறிவீர்கள். பழைய பாக்கிகளைப் போராடி வசூலிப்பீர்கள். வேற்று மதத்தினர், நாட்டினர் மூலம் புதுத் தொழில் தொடர்புகள் வந்தமையும். வேலையாட்களிடம் கொஞ்சம் கண்டிப்பாக இருங்கள். உத்யோகத்தில் வரவேண்டிய சலுகையும், உயர்வும் தடையில்லாமல் இனி கிடைக்கும். கூடுதல் சம்பளத்துடன் வேறு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கன்னிப் பெண்களுக்கு திருமணம் சிறப்பாக முடியும். மாணவர்கள் இனி அதிக மதிப்பெண் பெறுவார்கள். பரிசு, பாராட்டும் கிடைக்கும். கலைஞர்களுக்கு புது வாய்ப்புகள் இனி தேடி வரும்.

இந்தச் சனி மாற்றம் கொஞ்சம் தொய்வு தந்தாலும், திறமையுடன் செய்து முடிக்கும் ஆற்றலையும் தந்தமைவார்.

## கன்னி

தும்பைப்பூ சிரிப்பும், பலரை வழிநடத்தி செல்லும் அளவிற்குப் பட்டறிவும், தடைகளை தாண்டி எடுத்த காரியங்களை முடிக்கும் திறனும் கொண்டவர்கள் நீங்கள்தான். இதுவரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் நின்ற சனி 5.8.2007 முதல் 25.9.2009 முடிய விரையச் சனியாகவும், ஏழரைச் சனியின் தொடக்கமாகவும் இருந்து பலன் தருவார். இதுவரை உங்கள் ராசி மீது வீழ்ந்த சனியின் பார்வை இனி விலகுவதால் உங்களிடமிருந்த பய உணர்வு நீங்கும். பிள்ளைகளின் பிடிவாதக் குணம் நீங்கும். எதிர்த்துப் பேசியவர்கள் இனி பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உங்கள் பையனுக்கு நல்ல வேலை கிடைக்கும். கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபடுவார்கள். கணவன் - மனைவிக்குள் சந்தேகத்தின் பொருட்டு, சின்னச் சின்ன சண்டைகள் வரும். அதைப் பெரிதுபடுத்திக் கொள்ள வேண்டாம். உங்களின் தன, பாக்கியாதிபதியான சுக்ரனின் சாரத்தில் 16.8.2008 முதல் 29.8.2009 முடிய சனி செல்வதால் பண வரவு அதிகரிக்கும். வீடு, மனை வங்கிக் கடனுதவியுடன் வாங்குவீர்கள். நவீனரக வாகனம் வாங்குவீர்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். மற்றவர்களின் விவகாரங்களிலும் அத்துமீறித் தலையிட வேண்டாம். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சித்துப் பேச வேண்டாம். பெரிய பதவிகள் உங்களைத் தேடி வரும்போது யோசித்து



ஏற்றுக்கொள்வது நல்லது. நேரம் கிடைக்கும்போது தியானம் செய்யுங்கள். ஒருமுறை குலதெய்வ கோயிலுக்குச் சென்று வாருங்கள். பெற்றோருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் நீண்ட நாளாக நினைத்திருந்த மாற்றங்களை உடனே செய்வீர்கள். வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பு உண்டு. ரியல் எஸ்டேட், உணவு, எலக்ட்ரானிக்ஸ், ஏற்றுமதி, இறக்குமதி வகைகளால் ஆதாயம் உண்டு. போட்டிகள் கடுமையாக இருந்தாலும் ஈடுகொடுத்து வெற்றி பெறுவீர்கள். உத்யோகத்தில் மதிப்பு மரியாதைக் கூடும். சம்பள பாக்கி கைக்கு வரும். புதிய சலுகைகள் கிடைக்கும். கன்னிப்பெண்களுக்கு பெற்றோரின் ஆதரவு உண்டு. காதலைத் தள்ளிப் போடுங்கள். மாணவ - மாணவிகள் கணிதம் அறிவியல் பாடங்களில் அக்கறைக் காட்டுங்கள். கலைஞர்களுக்கு வீண் வதந்திகள் வரும். சம்பளப்பாக்கி கைக்கு வரும்.

இந்தச் சனிப்பெயர்ச்சி உங்களை வெளியுலகுக்கு கொண்டு வருவதுடன், புதிய தொடர்புகளையும் அறிமுகப்படுத்துவதாக அமையும்.

## துலாம்

இனிமையாக பேசும் குணமும், எல்லோருக்கும் உதவும் மனசும், விட்டுக்கொடுத்துப்போகும் பெருந்தன்மையும் கொண்டவர்கள் நீங்கள்தான். இதுவரை ராசிக்கு 10ஆம் வீட்டில் நின்ற சனி இப்பொழுது லாப வீட்டில் வந்தமர்வதால் உங்களை பலவகையில் முன்னேற்றப்படுத்துவார். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவருடன் வாக்கு வாதங்கள், வீண் சந்தேகம் எல்லாம் இனி நீங்கும். எதிலும் ஆர்வம் உண்டாகும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். பழைய கடனை பைசல் செய்வீர்கள். சொந்த பந்தங்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள். உங்கள் மகளுக்கு திருமணம் முடியாமல் தடைபட்டதே, இனி நல்ல இடத்தில் வாழ்க்கைத் துணை அமையும். புது வேலை கிடைக்கும். இருந்தாலும் பிள்ளைகளின் ஸ்தானத்தைச் சனி பார்ப்பதால் அவர்களின் நடவடிக்கைகளின் மீது ஒரு கண் வைப்பது நல்லது. சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு.




சொத்து விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பாகக் கலந்து யோசிப்பது நல்லது. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்களிடையே மதிப்பு, மரியாதை கூடும். அக்கம் பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் நீங்கும். கவிதை, கட்டுரை, இலக்கியம், இசையில் ஆர்வம் பிறக்கும். உடல் பருமனாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உணவு விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். அயல்நாட்டுப் பயணங்கள் உண்டு. சமூக சேவையில் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். புதுயுக்திகளை கையாளுவீர்கள். கடையை விரிவுப் படுத்துவீர்கள். கம்ப்யூட்டர், மருந்து, உணவு வகைகளால் முன்னேற்றம் உண்டு. புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரியின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள். தொல்லை தந்த அதிகாரி வேறு இடத்துக்கு மாற்றப்படுவார். சம்பளம் உயரும். சலுகைகள் கிடைக்கும். புது வேலை தேடி வரும். வீண் பழியிலிருந்து விடுபடுவீர்கள். கன்னிப் பெண்களுக்கு தடைபட்ட கல்யாணப் பேச்சு வார்த்தைகள் இனி வெற்றியடையும். மாணவ, மாணவிகள் வகுப்பாசிரியர் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். மதிப்பெண் உயரும். கலைஞர்களுக்கு நழுவிச் சென்ற வாய்ப்புகள் தேடி வரும்.

இந்தச் சனிப் பெயர்ச்சி தடைபட்ட பல வேலைகளை இனிதாக முடிக்கும் திறனையும், வசதி, வாய்ப்புகளையும் அள்ளித் தருவதாக அமையும்.

## விருச்சிகம்

எங்கும் எப்போதும் உண்மையே பேசும் நீங்கள், மற்றவர்கள் செய்யும் தவறுகளை மன்னித்து அவர்களிடம் நட்புறவாடும் குணமுடையவர்கள். உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டுக்குள் சனி பகவான் நுழைகிறார். நவம்பர் 2007லிருந்து குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பிரிந்து வருந்தி வாடியவர்களெல்லாம் சந்தேகம் நீங்கி சந்தோஷமாகச் சேர்வீர்கள். கணவன் - மனைவிக்குள் அடிக்கடி சண்டை சச்சரவுடன் வந்து கொண்டே இருந்ததே, அந்த நிலை மாறி பரஸ்பரம் புரிந்துக்கொள்வீர்கள். உடன் பிறந்தவர்களால் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் கவுரவம் கூடும். பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணி அவ்வப்போது கவலைப் பட்டீகளே, இனி பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். அவர்களால் உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகளின் உதவி கிடைக்கும். தாயாரின் உடல் நிலை லேசாகப் பாதிக்கும். தாய்வழி சொத்துக்களைக் கவனமாகக் கையாள்வது நல்லது. சனி நான்காம் வீட்டைப் பார்ப்பதால் வாகனத்தை இயக்கும்போது கவனத்தைச் சிதறவிடாதீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கோயில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். வேற்று மதத்தினர், நாட்டினரால் திடீர் திருப்பங்கள் உண்டு. அவ்வப்போது தூக்கமின்மை வந்துபோகும். கணவர் வழி உறவினர்களால் செலவுகள் அதிகரிக்கும். டிரஸ்ட், சங்கம் தொடங்குவீர்கள். சொத்து வாங்குவது, விற்பது சுலபமாக முடியும். வியாபாரத்தில் நெருக்கடிகள் நீங்கும். வேலையாட்களுடன் இனி உபத்திரவம் இருக்காது. நட்புநயமாகப் பேசி வேலை வாங்குவீர்கள். பங்குதாரர்களும் ஒத்துழைப்பு தருவார்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களை எதிரியாக நினைத்தவர்களெல்லாம் இனி வலிய வந்து நட்புறவாடுவார்கள். எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். கன்னிப் பெண்கள் இனி திட்டவட்டமாக முடிவெடுப்பார்கள். திருமணம் நடக்கும். மாணவ, மாணவிகளுக்கு நல்லவர்களின் நட்பு கிடைக்கும். கடினமான பாடங்களில் கூட கவனம் செலுத்தி, அதிக மதிப்பெண் பெறுவீர்கள். கலைஞர்களுக்கு திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் தேடி வரும்.




இந்தச் சனிப்பெயர்ச்சி உங்களை கொஞ்சம் அலைக்கழித்தாலும் இறுதியில் வெற்றியை தருவதாக அமையும்.

## Anthoorium

*World of Designs*

**Jewellery & Textiles**

For your Jewels, Gems, Sarees, Costumes, Musical Instruments & Gift Items please visit us...



102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk

## EVEREST

**Curry King**

24 Loampit Hall
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

Breakfast
Lunch Dinner

**Sea Food & Vegetarian Specialist**



## PRIME FOOD & WINE

News Papers & Magazines
Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries
Fruits & Vegetables

**118, Tooting High Street**
**London SW 17 ORR**
**Tel : 020 8682 3777**



மணங்கவரும்
மளிகைச்சாமான்கள்
மென்பானங்கள்
மதுபான வகைகள்
பழங்கள்
மரக்கறி வகைகள்
மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்த
சேவையைப் பெற
எம்மை நாடுங்கள்



## 2007 பால கானக்குயில் – இளைய கானக்குயில் பாட விரும்புவோருக்கு

10வது ஆண்டாக Oct 20ம் திகதி சனிக்கிழமை இளைய கானக்குயில் 2007 Greenford நகரமண்டபத்தில் (Ruslip, Greenford UB6 9QN) 8 வயது முதல் 12 வயது வரை பாட விரும்பும் ஆண், பெண் பாடகர்களும், 13 வயது முதல் 17 வயது வரை பாட விரும்புவோரும், உங்கள் பெயர், வயது, விலாசம், தொலைபேசி போன்ற விபரங்களுடன், சினிமாவில் வரும் ஆணோ, பெண்ணோ, தனியாகப்பாடிய பாடல்கள் மூன்றை தெரிவு செய்து உடன் எமக்கு அனுப்பி வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும் மூன்று பாடல்களில் ஒரு பாடலை குரல் தெரிவு அன்று எமது இசைக்குழு முன்னிலையில் (சித்ராலயா) பாடிக் காண்பிக்க வேண்டும். தொடர்புகட்கு 020 8390 5823

**ஸ்ரீமதி. யோகா தில்லைநாதன்**
59, Tolworth Rise North, Surbiton, Surrey KT5 9EN
குரல் தெரிவு 2.09.2007 ஞாயிறு
காலை 9.30 முதல் 1.30 வரை நடைபெறும்.
விபரங்கட்கு 020 8390 5823

## home2u

ESTATE AGENTS LEWISHAM
Formally known as
**Shelter 4U**

sales
lettings &
property management
mortgages

வீடுகள் வாங்க, விற்க, சிறந்த
பராமரிப்போடு வீடு வாடகைக்கு விட அணுகுங்கள்
வீடு வாங்க வசதிகள் செய்து தரப்படும்

K. Vinotharan B.Eng
Director
83 Ladywell Road
Lewisham
London SE13 7JA

Tel : 020 8690 5000
Mob : 07949 026 917
Fax : 020 8314 1111
info@home2u.co.uk
vino@shelor4u.co.uk
www.home2u.co.uk

புதிய நிர்வாகத்தின் கீழ்

## Maharasie Jewellers

மங்கையரின் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
நவநாகரீக நகைகளின்
தங்கச் சுரங்கம்



122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel : 020 8691 8888



## Video Audio

14 Lompait Hill
Lewisham
London SE13

Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers, Phone Cards



## தனுசு

தன்மானம் மிக்க நீங்கள், எதிர்ப்புகள் பல இருந்தாலும் கொள்கைகளை விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். கடலளவு அன்பு கொண்டவர்கள். இதுவரை அட்டமத்தில் நின்று கொண்டு உங்களுக்கு பல இன்னல்களை கொடுத்துவந்த சனிபகவான் 5.8.2007 முதல் 25.9.2009 முடிய 9ஆம் வீட்டில் அமர்ந்து இனி பல நல்ல செயல்களைச் செய்வார். முன் கோபம் நீங்கும். குடும்பத்தில் எல்லோரையும் அனுசரித்துப் போவீர்கள். உங்கள் வார்த்தையை அனைவரும் மதிப்பார்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளின் பிடிவாத குணம் தளரும். உங்கள் மீது பாசமழை பொழிவார்கள். மகளுக்கு திருமணமும் நல்ல இடத்தில் முடியும். மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும்.




கை நிறையச் சம்பாதிப்பார். குல தெய்வக் கோவிலுக்கு சென்று வருவீர்கள். வி.ஐ.பி.கள் இனி உதவுவார்கள். முன்கோபத்தால் அனைவரையும் பகைத்துக் கொண்டீர்களே, இனி இங்கிதமாகப் பேசி சாதிப்பீர்கள். உங்களின் அணுகுமுறையையும் மாற்றிக் கொள்வீர்கள். நீண்ட கால எண்ணமான வீடு வாங்கும் முயற்சி இப்பொழுது பூர்த்தியாகும். பெற்றோருடன், உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த கருத்து மோதல்கள், மனக் கசப்புகள் நீங்கும். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் அவதூறாகப் பேசினார்களே! இனி வலிய வந்து பேசுவார்கள். வெளிநாட்டுப் பயணம் நல்ல விதத்தில் அமையும். வியாபாரத்தில் இதுவரையில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். நல்ல வேலையாட்கள் கிடைப்பார்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். கடையை விரிவு படுத்துவீர்கள். கம்ப்யூட்டர், செல்போன் வகைகளால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு கிடைக்கும். பதவிகள், சலுகைகள் எல்லாம் உயரும். வருமானம் கூடும். நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கனவுத் தொல்லை விலகும். மாணவ, மாணவிகளே! கெட்டவர்களுடன் சேர்ந்து பாதை மாறிப் போனீர்களே! இனி நல்லவர்களின் நட்பு கிடைக்கும். மந்தம், மறதி விலகும். கலைஞர்களே! கிசு கிசுத் தொல்லைகள், அவமானங்கள் நீங்கி பாராட்டுகள், பண முடிப்புகள் குவியும்.

இந்தச் சனிப் பெயர்ச்சி தடைகள், பணமுடக்கம், சோர்வுகளிலிருந்து விடுபட வைப்பதுடன் சந்தோஷத் தையும், நிம்மதியையும் தருவதாக அமையும்.

## மகரம்

தோல்விகளை கண்டு துளாமல், விசையுறு பந்துபோல் மீண்டும் எழும் நீங்கள், கடினமாக உழைத்து முன்னேறுபவர்கள். இப்போது உங்கள் ராசிக்கு 8ஆவது வீட்டில் அமரப் போகும் சனி அட்டமத்துச் சனியாக இருந்து செயல்படப் போகிறார். கணவன் மனைவிக்குள் வீண் விவாதங்களும், மனஸ்தாபங்களும் இருந்து வந்ததே, இனி தொல்லைகளைக் குறைப்பார். ஒருவரையொருவர் அனுசரித்துப் போகப் பாருங்கள். தாம்பத்யம் இனிக்கும். உங்கள் ராசியின் மீது சனியின் பார்வை இனி விலகும். எனவே உடல்நிலை சீராகும். மருத்துவச் செலவுகள் குறையும். இருந்தாலும் இனி சனியின் மறைமுகத் தாக்குதல்கள் கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். ஓரளவு பண வரவு உண்டு. அனாவசிய, ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கப் பாருங்கள். பிள்ளைகளின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். உடன் பிறந்தவர்களிடையே இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும். வாகன விபத்துகள் ஏற்படக்கூடும். கிடைக்கின்ற நேரங்களில் தியானம், யோகாசனம் செய்யப் பாருங்கள். புது நண்பர்களிடம் அளவாகப் பழகுங்கள். ஆடை ஆபரணங்கள் சேரும். வி.ஐ.பிகளின் உதவி கிட்டும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.




வழக்கு சம்பந்தப்பட்ட பிரச்னைகளை வழக்கறிஞரின் ஆலோசனையின்றி முடிவெடுக்காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். இரும்பு, எண்டர்பிரைஸ் வகைகளால் ஆதாயம் உண்டு. உத்யோகத்தில் உங்களைப் பற்றிய தவறான கருத்துக்கள் விலகும். புது சலுகைகள் கிடைக்கும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து புதிய வேலைகள் வந்து அமையும். பெற்றோரின் ஒத்துழைப்பு உண்டு. காதல் விவகாரங்களில் நிதானம் தேவை. புதிய வேலை கிடைக்கும். மாணவ - மாணவிகள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். ஆசிரியரின் அன்பைப் பெறுவீர்கள். கலைஞர்கள் பரபரப்புடன் காணப்படுவீர்கள். வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள்.

இந்தச் சனி மாற்றம் இதுவரை இருந்த பேரிழப்புகளிலிருந்து உங்களை மீட்பதுடன், சமயோசிதமாக செயல்பட வைப்பதுடன், மகிழ்ச்சியையும் தருவதாக அமையும்.

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

PATHMINI Jewellers



892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999

வெம்பிளியில் இன உணர்வான
மளிகை கடை

MALAR SUPERMARKET

543- High Road, Wembley
Middlesex, Hao 2 DJ
Tel : 020 8795 5797


உங்கள்
சகல தேவைகளையும்
பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில்
ஒரு மளிகை கடை

மலர்
சூப்பர் மார்க்கெட்

Ayngaran
ஸ்தாபனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட
விற்பனையாளர்

RR METAL WORK



- Railings
- Staircases
- Gates
- Window Grills
- Fabrication

தமிழில் தொடர்பு கொள்ள :
Kumar
Tel : 020 8648 8207
Mob : 07753 200 261




80% வரை
சேமிப்பு!
100%
தெளிவான இணைப்பு!!
200%
இலகுவான சேவை!!!



mint-talk
Flytel Ltd.
7 Jardine House,
Harrovian Business Village,
Bessborough Road, Harrow,
Middlesex, HA1 3EX

80% வரை சேமிப்பு!
அமெரிக்கா, ஐரோப்பா,
அவுஸ்திரேலியா 2p
இலங்கை, இந்தியா 6p
மற்றும் அனைத்து நாடுகளுக்கும்
2p இல் இருந்து



தெளிவான இணைப்பு!!
அருகிலிருந்து
உரையாடுவது போன்ற
100% தெளிவான
டிஜிட்டல் இணைப்புகள்






இலகுவான சேவை!!!



call our friendly
customer service
0800 989 00 00
020 8515 9728
020 8515 9729
www.mint-talk.com
info@mint-talk.com


ESTD 1992
SRIKANTH & CO.
Solicitors & Property Business Centre
Solicitors & Estate Agents
Property Sales, Letting & Conveyancing
Under One Roof
We also practise in the following areas of LAW:
Immigration
Matrimonial / Family
Wills & Probate
Employment Matter
Conveyancing - Residential
Consumer Problems
Conveyancing - Commercial
Civil Litigation
Londlord & Tenant
Housing Matters
Liquor Licensing
Welfare Matters
557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Tel : 020 8795 0648
Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979


லண்டனில்
பொற்கை
வண்ணர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே
நகை மாடம்
Gems
&
Jewellery
MIERRA
Jewellery Mart
34 London Road Tooting London SW 17 9HP
Tel : 020 8648 7750 Mobile : 07958948685
www.meera_jewellery.com


CHANDRA
Super Market &
Off Licence
COST CUTTER
உங்களுக்குத் தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள்,
இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள்,
பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர்
வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே இடம். ஆடியோ, வீடியோ, சீ.டி, வி.சீ.டி
ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford
London SE6 2PG


மாபெரும்
கழிவு
விற்பனை
Jk Gold House &
Fashion House
314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677

## கும்பம்

கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி சாதிப்பதில் வல்லவர்களான நீங்கள், மற்றவர்களை உற்சாகப்படுத்தி மகிழ்பவர்கள். உங்கள் ராசிக்கு 7ஆவது வீட்டுக்கு சனிபகவான் வருகிறார். கண்டச் சனியாச்சே என்று பயப்பட தேவையில்லை. உங்கள் ராசிநாதனான சனி உங்களுக்கு நல்லதைத்தான் செய்வார். காரியத்தடைகள் விலகும். கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப் பேசி, பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வது நல்லது. மூன்றாவது மனிதரை மூக்கை நுழைக்க விடாதீர்கள். பிள்ளைகளின் உணர்வுக்கு மதிப்பு கொடுப்பீர்கள். உங்கள் பெண்ணுக்கு நல்ல வரன் அமையும். உடல் ஆரோக்கியத்தில் அலட்சியம் வேண்டாம். அவ்வப்போது தலைவலி, வாயுக் கோளாறு வந்து போகும். பெற்றோரின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தனி நபர் விமர்சனத்தை தவிர்க்கவும். நீண்ட நாளாகப் போக நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.




பிரியமானவர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிம்மதி கிட்டும். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். தாய் வழி உறவினர்களிடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வந்து போகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். வெளியூர் பயணங்கள் அலைச்சல் தருவதாக அமையும். பணத்தட்டுப்பாடு ஓரளவு குறையும். வாகனத்தால் வீண் செலவுகள் வரக்கூடும். வாகனத்தை இயக்கும் போது கவனத்தைச் சிதற விடாதீர்கள். அயல்நாட்டிலிருப்பவர்களின் ஆதரவு கிட்டும். அரைகுறையாக நின்றுபோன கட்டிட வேலைகளை இனி முழுமையாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தர்ப்பம் அறிந்து செயல்படுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் நிம்மதி ஏற்படும். அனுபவமிகுந்த வேலையாட்களும் இனி வந்து சேருவார்கள். உத்யோகத்தில் உங்களைப் பற்றித் தவறாக நினைத்திருந்த மேலதிகாரி இப்பொழுது நட்புறவாடுவார்கள். திறமைகள் வெளிப்படும். சம்பளம் உயரும். கசந்த காதல் இனிக்கும். மாணவ மாணவிகள் உயர் கல்வியில் வெற்றி பெறுவார்கள். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். கலைஞர் களுக்கு இனி புது வாய்ப்புகள் தேடி வரும். மூத்த கலைஞர்களின் பாராட்டுதலைப் பெறுவார்கள்.

இந்தச் சனிப் பெயர்ச்சி உங்கள் தகுதியை வெளிப்படுத்துவதுடன், பணப் புழக்கத்தையும் தருவதாக அமையும்.

## மீனம்

நாடி வந்தவர்களுக்குக்கெல்லாம் நல்லதையே செய்யும் குணமுடைய நீங்கள், யாருக்கும் தீங்கு எண்ண மாட்டீர்கள். கடமையுணர்வுடன் நடந்துக் கொள்வீர்கள். உங்களின் இராஜ யோக வீடான 6ஆம் வீட்டில் வந்தமரும் சனிபகவான் இனி பல இன்ப அதிர்ச்சிகளை தருவார். தொட்டகாரியம் துளிர்க்கும். குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். கணவன் - மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். குழப்பமான சூழலும், எதிலும் தடுமாற்றமான நிலையுமே நிலவியதே! அதிரடியானத் திட்டங்களை இனி அசுர வேகத்தில் எடுப்பீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து கவலைப்பட்டீர்களே, இனி குடும்ப சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்துக்கொள்வார்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். குடும்ப வருமானத்தைப் பெருக்க புதிய வழி முறைகளைக் கையாளுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். குழந்தை இல்லையென வருந்திய தம்பதியர்களுக்கு இனி குழந்தை பாக்கியம் உண்டாகும். மனதில் பல ஆசைகள் இருந்தும் அதனை நிறைவேற்ற முடியவில்லையே என அவ்வப்போது வருந்தினீர்களே! இனி ஒவ்வொன்றாக நிறைவேறும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். அறைகுறையான நின்ற கட்டிடப் பணிகளும் முழுமையடையும். பூர்வீகச் சொத்திலிருந்த பிரச்னைகள் நீங்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்களின் கனவுகள் நனவாகும். ஆடை ஆபரணங்கள் சேரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். தடைபட்டு வந்த குல தெய்வப் பிரார்த்தனைகளை இப்பொழுது நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உணவு, இரும்பு, எலக்ட்ரானிக்ஸ் வகைகளால் லாபம் உண்டு. மறைமுகப் போட்டிகளைப் பந்தாடுவீர்கள். உத்யோகத்தில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு இனி தேடி வரும். சக ஊழியர்களால் மகிழ்ச்சியுண்டு. கசந்த காதல் இனிக்கும். புதிய வேலை கிடைக்கும். மாணவ - மாணவிகளுக்கு நினைவாற்றல் கூடும். விளையாட்டு, கவிதை, இலக்கியம் இவற்றில் வெற்றி பெறுவீர்கள். கலைஞர்களுக்கு பெரிய நிறுவனங்களிலிருந்து வாய்ப்புகள் தேடி வரும். பரிசு பாராட்டு கிடைக்கும்.




இந்தச் சனிப்பெயர்ச்சி பொறுத்திருந்த உங்களுக்கு வசதி வாய்ப்புகளையும், பெருமைகளையும், வாழ்வில் உயர்ந்த அந்தஸ்தையும் தருவதாக அமையும்.

உலகின் எப்பாகத்துக்கும் உங்கள் பணம்
பாதுகாப்பாக சென்றடைய
*Eastham* ஸ்ரேசனுக்கு எதிரில்

உடனே எம்மை அழையுங்கள்

# A1 MONEY TRANSFER




தொடர்பு
நிரஞ்சன்

**7 Station Pride East Ham E6 1JD**

**Tel : 0208 503 5446 Mob : 07961406289**

# Honey Moon

**INDIAN SRILANKAN CUISINE**




- CUISINE TO CATER FOR SOUTH INDIAN AND SRI LANKAN DISHES
- OUTDOOR CATERING AVAILABLE
- CAR PARKING FACILITIES
- FULLY AIR - CONDITIONED
- DISABLE ACCESS
- FULLY LICENSED
- TABLE SERVICE
- GROUP BOOKING
- TAKE AWAY

**OPENING HOURS**
Mon - Sat 12pm to 12am
Sunday 12pm to 11pm

*Mama's Recipe*

**53 Bell Road, Hounslow, Middlesex, TW3 3NX**

Tel : 0208 570 6200, E mail : indr@honeymooncuisine.com www.honeymooncuisine.com







**15.07.2007 அன்று நடைப்பெற்ற பத்தாவது சைவ மாநாட்டின்போது லூசியம் சிவன் கோயிலில் பேரூர் ஆதினம் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்து மரியாதை செய்த போது எடுக்கப்பட்ட படங்கள்**

வழமை போல் இந்த வருடமும் சைவ மாநாட்டுக்கு மக்கள் மிகவும் குறைவாகவே வந்தனர். இந்த நாட்டில் நடக்கும் சினிமா நிகழ்ச்சிகள், அரங்கேற்றம், சீமந்தம், புதுச்சாந்தி வீடு, பிறந்த நாட்கள் இப்படியான நிகழ்ச்சிகளுக்கு அதிகமான மக்கள் கூடும் போது சைவ மாநாட்டுக்கு மக்கள் கூடாததற்கு காரணம் என்ன? மாநாடு நடத்துபவர்கள் சிந்தித்து செயல் படுவார்கள் என்று நம்புவோம்.

பத்தாவாது சைவ மாநாடு மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. இந்த சிறப்புக்கு காரணமான ஓதுவார் மூர்த்திகளினுடைய பண்ணிசை கச்சேரி மிகவும் அற்புதமான ஒரு நிகழ்ச்சியாகும். இது வருடா வருடம் நடைப்பெற்றால் மிகவும் நல்லது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐரோப்பியப் பயணம்

ஈழத்தமிழர் தொடர்பாய் சர்வதேசம் கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் விசனமும் கவலையும் அடைந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இந்த நிலைக்கான காரணம் என்ன என்ற கேள்வியும் பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது.

ஏற்கனவே தாங்கள் வகுத்துக் கொண்ட கொள்கைக்கு ஏற்ப செயல்படும் வல்லரசுகளின் நடவடிக்கைகளும் அவர்களது அசைவிற்கு ஏற்ப ஆட்டம் போடும் ஏனைய நாடுகளின் நடவடிக்கைகளுமே இதற்கு முக்கிய காரணம் என்பது புரிந்தாலும் தமிழர் தரப்பு நியாயங்கள் சரியான முறையில் பிரச்சாரப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் ஆங்காங்கே எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளில் மேற்கொண்டு வரும் சுற்றுப்பிரயாணம் ஒரு காத்திரமான விடயமாகவே பார்க்கப்படுகிறது. இதுவரை நோர்வே, சுவீடன், ஹொலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மணி, இத்தாலி, வத்திகான் குடியரசு, பின்லாந்து, டென்மார்க் உள்ளிட்ட நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்திய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது இங்கிலாந்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள்.

கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனுடன் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திரு. மாவை சேனாதிராஜா, திரு. செல்வம் அடைக்கலநாதன், திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரே இந்தச் சந்திப்புகளில் கலந்து கொண்டு வருகின்றனர். இந்தப்பேச்சு வார்த்தைகள் தொடர்பாகவும் இங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாய் அவர்கள் மிகவும் திருப்தியடைந்திருப்பதை அறியக் கூடியதாய் இருந்தது.

சிங்கள அரசாங்கத்தின் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீதான குண்டு வீச்சுகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரியையாளர், தொண்டு உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல்கள், அரசாங்க அமைச்சர்களின் அனுசரணையுடன் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாலும் ஒட்டுக் குழுக்களைச் சேர்ந்தவர்களாலும் தலைநகரிலும் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல்கள் போன்றவை தொடர்பாக விரிவாக விளக்கிக் கூறியதாகவும் இந்த நிலமைகள் தொடரும் பட்சத்தில் சிறிலங்கா அரசின் மீது சில கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் படி வலியுறுத்தியதாகவும் அறிய முடிகிறது.

1. சிறிலங்காவிற்கான மனிதாபிமான உதவிகள் தவிர்ந்த ஏனைய உதவிகளை நிறுத்துதல்.
2. சிறிலங்கா மீது பொருளாதாரத் தடையை அமுல் படுத்துதல்.
3. தமிழ் மக்களின் வெளிப்புற சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

என்பனவே தமிழ் கூட்டமைப்பினர் வலியுறுத்திய கடுமையான நடவடிக்கைகளாகும்.

இந்த சந்திப்புகளின் பெறுபேறுகள் தொடர்பாய் கருத்துக் கேட்டபோது தாம் பேச்சு வார்த்தை நடாத்திய அனேகமாக எல்லாத் தலைவர்களுமே சிங்கள அரசின் இன அழிப்பு நடவடிக்கைகள், போர் நிறுத்த மீறல்கள் தொடர்பான அதிருப்தியைத் தெரிவித்தாகவும் தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்ததாகவும் இந்தப் பேச்சுக்கள் தொடர்பாய் நாம் முழு மன நிறைவுடன் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

அதுமட்டமின்றி இது போன்ற சந்திப்புகளைத் தாங்கள் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பேச்சுக்களின் தங்கள் தரப்பு நியாயங்களை முழுமனதுடன் ஏற்றுக் கொண்ட போதிலும் இது தொடர்பாய் சிங்கள அரசிற்கு அழுத்தம் கொடுக்கின்ற விடயத்தில் இவர்கள் முழுமனதுடன் செயற்படுவார்களா என்ற சந்தேகமும் இவர்களிடம் இருப்பதை அறியக் கூடியதாக இருந்தது.

வெறுமனே அரசாங்க மட்ட உறுப்பினர்களுடனான சந்திப்புக்களுடன் மட்டுப்படாது அந்தந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழ் உணர்வாளர்களையும் சந்தித்து ஈழப் பிரச்சினை தொடர்பாய் வெளிநாடுகளில் நடத்தப்பட வேண்டிய பிரச்சாரங்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் இந்தச் சந்திப்புகள் மிகவும் காத்திரமாக அமைந்து வருவதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்புக்களில் கலந்த கொண்ட பலரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பாதுகாப்புக் குறித்து அதிக அக்கறையுடன் விசாரித்ததைக் காண முடிந்தது.

சிறிலங்காத் தலைநகர் கொழும்பு உட்பட பல பகுதிகளிலும் குறிப்பாக கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்து வரும் கொலை அச்சுறுத்தல் குறித்தும் இது தொடர்பாக கூட்டமைப்பினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டபோது இந்த அச்சுறுத்தல் இப்போது மிகவும் அதிகரித்திருப்பதாகவும் இது தொடர்பாக பாராளுமன்ற சபாநாயகர் ஜனாதிபதி ஆகியோருக்குத் தெரியப்படுத்திய போதிலும் அது செவிடன் காதில் ஓதிய சங்காகவே இருப்பதாகவும் தமது விசனத்தை வெளிப்படுத்தினார்.

அத்துடன் பல சர்வதேச நிறுவனங்களிற்கும் தங்களுக்கிருக்கின்ற பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து அறிவித்திருப்பதாகவும் இது தொடர்பாகக் கரிசனை எடுப்பதாக தமக்கு அறிவிக்கப்பட்டு இருக்கின்ற போதிலும் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை தங்களால் அறிய முடியவில்லை என்றும் தெரிவித்தனர்.

ஈழத் தமிழர் தொடர்பான நிலைப்பாட்டில் வல்லரசுகள் தம் பிரதேச நலனைக் கருத்தில் கொண்டே செயற்படும் என்ற போதிலும் தமிழர் தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டியது தமிழ்த் தலைமையினது கடமையாகிறது. அந்த வகையில் இது போன்ற தொடர் சந்திப்புகள் காலத்தின் தேவை என்பதே பலரதும் அபிப்பிராயமாகும்.

நன்றி — ஒரு பேப்பர்

புதிய பொலிவுடன் லூசியத்தில்


# கற்பகம்

ஞாயிறுதோறும் உடன்பங்கு
ஆட்டிறைச்சி உட்பட
சகலவிதமான மரக்கறி வகைகள்,
பழவகைகள் உட்பட
சகல தேவைகளுக்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்



**KATPAGAM**
36, Loampit Hill
Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810

துரித பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்



ஆயிரங்காலத்துப் பயிருக்கு ஆண்டாண்டு
பாரம்பரியம் உள்ள தங்க நகைகள்

# Arthy Jewellers

294 High Street North
Eastham London E12 6SA
Tel : 020 8552 1080
திங்கள் அன்று விடுமுறை



## Mithus Jewellery

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792

## Diamonds Palace

76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814

செவ்வாய் அன்று விடுமுறை

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 684 4677

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323



# BEST FOOD

## Supermarket

இந்த மூன்று இடங்களை
தவிர வெம்பிளியில்
ஒரு கிளை திறக்கப்பட உள்ளது

